# மறைக்கத் தெரிந்த மனம்

லதா முகுந்தன்



# மறக்கத் தெரிந்த மனம்

Mithravinda 007



1

"அண்ணி அப்படியே எனக்கும் ஒரு தட்டு வச்சுடுங்க" இரண்டு டிபன் பிளேட்டுகளில் சுடச் சுட மெத்து மெத்தென்ற நாலு இட்லிகளை வைத்து. ஒரு சின்னதான குழித் தட்டில் மிளகாய்த்தூள் வைத்து மாமனார். மாமியாருக்கு கொடுக்கும் போதே. கேட்டுக்கொண்டே வந்துவிட்டான் ஹர்ஷா.

"அண்ணி எனக்கும்" - அவன் மறுபடியும் கேட்க. "வாப்பா" என்றவாறே சிரிக்கிறாள் சுகுணா. அவனுக்கும் எல்லாவற்றையும் ஒரு தட்டில் அழகாக அடுக்கி டைனிங் டேபிளில் வைத்த போதே வள்ளென்று எகிறினார் மாமனார் துரைசாமி.

"ஏண்டா! அவனவனுக்கு தனித்தனி வீடு கட்டி கொடுத்தாச்சு. அவனவன் சோறோ. தண்ணியோ அவனவன் வீட்டுலே வச்சுக்க வேண்டியதுதானே."

"இதே கேள்வியை நானும் திருப்பிக் கேட்டா?" லாவகமாக இட்லியை உள்ளே தள்ளியவாறே பேசுகிறான் ஹர்ஷா.

"அண்ணி இன்னும் கொஞ்சம் சாம்பார் ஊத்துங்க."

"ஏண்டா இத்தனை கேக்கறேன். ஒனக்கு ஒரைக்காதா? ஓம் பொண்டாட்டி மகாராணி சமைக்காதாம்மா? லவ் பண்ணித்தானே கல்யாணம் பண்ணிகிட்டே."

"அதை ஏன் அடிக்கடி ஞாபகப்படுத்தறீங்க? நானே மறந்து போன விஷயம்." சிரிக்கிறான். ஷர்ஷா.

"ஏண்டா இப்படி சிரிச்சு மழுப்பறே? அந்த ஒன்றரை அணா சம்பளத்துக்கு ஓம் பொண்டாட்டி வேலைக்கு போகலன்னு யார் அழுதாங்க? நான் தலைப்பாடா அடிச்சுக்கறேன். பொல்லாத பிஎட் படிச்சுட்டாளாம். வீட்டுலே புருஷனுக்கு வகையா ஆக்கி போட வக்கில்லே. எல்லாத்துக்கும் ஒங்க அண்ணியை புடிச்சிக்கிங்க. சரியாயிடும்."

ஹர்ஷா காதில் விழாதது போல "இன்னும் இரண்டு இட்லி அண்ணி" கேட்டு வாங்கி சாப்பிட,

"இன்னும் நாலு போடு. நல்லா வழிச்சு தின்னுவான்" அவர் உறும.

"மாமா ஏன் இப்படி கோபப்படறீங்க? நம்ப ஹர்ஷா தானே. சாப்பிடும்போது சந்தோஷமா சாப்பிடணும் கோபதாபத்தோட சாப்பிட்டா வயிற்றுக்கும் ஆங்காது. மனதுக்கும் ஒட்டாது."

சுகுணா சொல்ல. சொல்ல மௌனமானார் துரைசாமி. மனது சிந்தனையில் ஓடிற்று. எத்தனை நல்ல மனசு இந்த பெண்ணுக்கு. தன் தாய்க்கு இருக்கும் மனசு. அதற்கு மேல் இட்லியை வாயில் போடக்கூட மனது வரவில்லை. அம்மாவின் இந்த நல்ல மனதிற்காக எத்தனை பேரிடம் அசட்டுப் பட்டம் வாங்கி

Mithravinda 007



கட்டிக்கொண்டு இருக்கிறார். தன் அம்மாவை பெற்றவர் மட்டுமல்ல. தன் அப்பாவைப் பெற்றவர் கூட பாகம் பிரிக்கும் போது அம்மாவுக்கு தரும் பங்கில் தாராளமாகவே குறைத்துக் கொடுத்தனர்.

"எம்மா இப்படி ஏமாந்து போறே?" இவர் வெகுண்டு கேட்ட போது

"போகட்டும்டா. இந்த சொத்து வந்து தானா விடியப் போவுது. கடவுள் நமக்குன்னு எழுதினா தானா வந்து சேரும்டா." நம்பிக்கையோடு பேசுவாள். அவள் நம்பிக்கை தான் தன்னை இத்தனை தூரம் வளர்த்துவிட்டிருக்கிறது. இது அவருடைய அசையாத திடமான நம்பிக்கை.

சென்னையில் ஒரு பிரதான வீதியில் ஒரு பெரிய ஜவுளிக்கடை மூன்று அடுக்கு மாடியைக் கொண்டது. மேல் மாடி ரெடிமேட் ஆடைகளுக்கான பிரத்தியேகக் கடை. சென்னையில் இப்போது இருக்கும் இடம் தவிர இன்னும் நான்கு வீடுகள். ஒரு எஸ்டீம். ஒரு வேன் என்று இரு வண்டிகள். அது மட்டு மில்லாமல் தான் இருக்கும் இடத்தையே இடித்து மூன்று தனித்தனி வீடுகளாக மேலும் கீழுமாக கட்டியாகிவிட்டது. மேல் பகுதி வாடகைக்கு. கீழ்ப் பகுதி சொந்த உபயோகத்திற்கு. இத்தனையும் தன் உழைப்பால் வந்தது.

எஸ். எஸ். எல். ஸி படித்து விட்டு மாமாவின் கீழ் வேலைக்கு சேர்ந்து நெளிவு சுளிவுகளை கற்றுக்கொண்டு விலகி வந்து அம்மாவின் சொற்ப நகைகளை வைத்து தைரியத்தோடு பிஸினஸ்ஸில் இறங்கி நினைக்கையிலேயே பெருமூச்சு வந்தது துரைசாமிக்கு... தைரியம் அது மட்டும் தான் ஒரே துணை.

"என்ன மாமா இது? இட்லி தட்டிலேயே வச்சுகிட்டு சாப்பிடாம யோசனை. இன்னும் ரெண்டு வைக்கட்டுமா?"

"வேண்டாம்மா." மருமகளின் குரல் நனவுலகத்திற்கு அழைக்க. ஒரு முறை தலையை சிலுப்பிக் கொண்டார் எதிரில்

தன் மனைவி தட்டில் கையைக் கழுவி விட்டு காபியை உறிஞ்சி உறிஞ்சி சாப்பிடுவதைப் பார்த்தாலே எரிந்தது.

'என்ன மனுஷி இவள்? எத்தனை வயதாகிறது. இப்படி தட்டிலா கை கழுவிக் கொள்வார்கள். சமையல் செய்வது. வீட்டைக் கவனித்துக் கொள்வது. இது போல் ஏதானும் வேலை என்றால் போதும் உடனே உடல் வலிக்கிறது. தலையை வலிக்கிறது. என்று ஆரம்பித்து விடுவாள். காலையில் எழுந்த உடனே குளித்து விடுவாள். சவுரி முடியை வைத்து தலையை அழுந்த அழுந்த வாரிக் கொண்டை போட்டு தகதகவென்று மஞ்சள் மின்னும் முகத்தில் காலணா அளவிற்கு பொட்டு வைத்துக் கொண்டு கொண்டை நிறைய பூ வைத்துக் கொண்டு எல்லாம் முடிக்கும் போதே எட்டு மணி அடித்து விடும். இதற்குள் பக்கத்து வீட்டில் மருமகள் டிபன். காபி எல்லாமே ரெடி பண்ணி வைத்திருப்பாள். அங்கே போய் வயிறார ஒரு பிடி பிடித்து விட்டு கோவிலுக்கு போகிறேன். குளத்திற்குப் போகிறேன் என்று கிளம்பினால் சரியாக மதியம் இரண்டு மணிக்கு சாப்பிடத்தான் வருவாள். 'என்னம்மா மங்கையற்கு அரசி. எல்லாம் ஆச்சா?' இவர் கிண்டலாக மனைவியைக் கேட்க. அவரை லட்சியம் செய்யாமலேயே எழுந்தாள். "த- என்ன இது? ஹோட்டலா நடத்தறாங்க? தட்டை எடுத்து கழுவி வச்சிட்டு போ."

"ஏன் மருமக இல்லே?"

"ஆமாண்டி மருமக உன் வீட்டு வேலைக்காரி."

"இப்படி மருமகள்களை தலைல தூக்கி வச்சு கிட்டு ஆடு. பின்னாடி ஒனக்கே வேட்டு வரும்." நொடித்துக் கொண்டே எழுந்து கொள்கிறாள்.

மனைவி தனலஷ்மி அப்படி ஒன்றும் பெரிய பணக்கார இடமில்லை பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்துதான் திருமணம் செய்து கொடுத்தனர். அவள் ஆரம்ப நாட்களில் இருந்தே சோம்பேறி தான். தன் தாயார் இருந்த வரைக்கும்

Mithravinda 007



மருமகள் சமையற் கட்டிற்குள்ளேயே வந்ததில்லை. வேலைக் காரி வேலை செய்யும்போது 'மேற்பார்வை பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு ஒரு ஓரமாக கண்படாமல் அமர்ந்து கொள்வாள். அம்மா போன பின் மருமகள் வந்து விட்டாள். அம்மா செய்த வேலைக்கு மேல் இரு மடங்கு வேலை அவள் தலை மேல் விழுந்தது. சாப்பாடு. டிபன் செய்வது மட்டுமல்ல வீட்டைச் சுத்தப்படுத்துவது. துணி துவைப்பதிலிருந்து எல்லாவற்றிற்கும் அவள் துணை அவசியமாய் இருந்தது. வந்த இரண்டாவது மருமகளும். காலையில் பள்ளிக்கு போனால் இரவு ஆறு மணிக்கு வர. அவரின் முதல் மருமகள் சுகுணா தான் எல்லாவற்றிற்கும் சேர்த்து மாடு போல உழைத்தாள். இதையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் தன் வீட்டை இடித்து அவரவர்களுக்கு பொறுப்பு வரவேண்டும். என்று தனி வீடு கட்டி வைத்தும். இந்த பிரச்சனைதான். மனதில் எண்ணங்கள் ஓட பெருமூச்செறிந்தார்.

"அண்ணி எல்லோருக்கும் டிபன் எனக்கு கிடையாதா?" ஹர்ஷாவின் மனைவி சிநேகா வந்து அமர. சட்டென்று தட்டை எடுத்துக் கொண்டு எழுந்து கொள்கிறார். துரைசாமி. மனைவிக்கு கோவில் என்றால் இதற்கு ஸ்கூல் பொறுப்புகளை தட்டிக் கழிக்கும் சோம்பேறி. அவசரம் அவசரமாக கை கழுவி விட்டு அவர் கிளம்ப,

"ஆமா அந்த காஞ்ச பிரட் டோஸ்ட் வேஸ்டாகுமே அதை என்ன பண்ணப்போறே?" ஹர்ஷா மனைவியைக் கேலியாகக் கேட்க.

"ராத்திரிக்கு இன்னிக்கு அதுதான்." பல்லைக்கடித்தவாறே சற்று அழுத்தமாக அவள் கூற.

"அப்ப அண்ணி ராத்திரி சாப்பாடும் எனக்கு இங்க தான்." சொல்லிவிட்டு ஹர்ஷாவும் எழுந்து போக. சுகுணா அவளுக்கும் பார்த்து. பார்த்து பரிமாறுகிறாள்.

"சுகுணா" வாசலிலிருந்து மாமாவின் குரல்.

"என்ன மாமா?"

"எங்கம்மா உன் புருஷன்?"

"இதோ மாமா ஒரு பத்து நிமிடத்தில் அவரை ரெடி பண்ணி அனுப்புகிறேன்."

இதற்குள் பள்ளிக்குச் செல்லும் மகனும், மகளும், சீருடையோடு ஓடி வர "இருங்கடா. அப்பா வந்திரட்டும்."

அவசரம் அவசரமாக படுக்கை அறைக்கும் சென்று ஏ.ஸி. யை அணைத்தாள். இந்த குளிரில் ஏ.ஸி காற்று வேறு சில்லென்று அடித்தது. கணவனுக்கு ஏ.ஸி இருக்க வேண்டும். ஸ்கீரீனைத் தள்ளி. ஜன்னலைத் திறந்து "என்னங்க" எழுப்புகிறாள் சுகுணா.

"எந்திரிங்க மாமா ரெடியாயிட்டாரு. இன்னிக்கு நீங்க வேற கலெக்ஷனுக்காக செங்கல்பட்டு போகணும்னாரே. எந்திரிங்க". எழுப்ப எழுப்ப இன்னும் காலிலிருந்து தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்கிறான். அவளின் அருமைக் கணவன். "ஏங்க எந்திரீங்க" ஒருவாறு அவனை உலுக்கி கிளப்பி எழுப்பிய போது. சுள்ளென்று எரிந்து விழுகிறான். "காலங்காத்தால ஏன் எழுப்பறே?"

"இப்ப என்ன விடியற்காலையா என்ன? மணி எட்டரையாவுது சீக்கிரம்." அவனின் பிரஷ்ஷில் பேஸ்டைத் தடவி அவனிடம் தந்து அவனுக்கு மாற்றுத் துணி எடுத்து வந்து காலை டிபனை ஊட்டி கணவனை அனுப்பும்போதே மணி ஒன்பதே காலைத் தொட்டது. கணவனுக்கு குளிக்க வெந்நீர் எடுத்து வைத்து. போட்டுக் கொள்ள வேறு துணிகள் கொடுத்து. அவனை சாப்பிட வைத்து கிளம்பும்போதே. பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்துப் போகுமாறு கெஞ்ச. வழக்கம் போல் அவன் மறுத்தான்.

"ப்ளீஸ்..."

"ம்... ஹீம்.." "இத பாரு ஊர்பட்ட வேலை இருக்கிறது. தெனம் இதுங்களை அழைச்சுகிட்டு போய் கொண்டு விடறதே

Mithravinda 007



பெரிய வேலையா இருக்குது. பஸ்ஸை பிடிச்சு போகச் சொல்லு."

கணவன் அவசரம் அவசரமாக புறப்பட்டுச் செல்கிறான் அழுத்தமான பச்சை நிற பேன்டும். சற்று மங்கலான பச்சை நிற சட்டையும் அணிந்து பளிச்சென்று அவன் கிளம்ப. பள்ளிக்கு செல்லும் சிறுவனை பெருமிதமாக அனுப்பும் தாய் போல நிற்கிறாள் சுகுணா.

இவன் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையா? தன்னாலேயே நம்ப முடியவில்லை. கொழு கொழுவென்ற கன்னங்களும் கறு. கறுவென்ற அலை அலையான தலை மயிரும். பளீரென்று அடிக்கின்ற வெண்மையும் பார்க்க பார்க்க மனது ஓடிப் போய் அவனிடம் ஒட்டிக் கொள்ளுகிறது. தன் இரு குழந்தைகளைக் கூட காலையிலே எழுப்பி பள்ளிக்கு நேரத்திற்கு அனுப்ப முடியும். ஆனால் அவளின் கணவன் இன்னும் பழக்க வழக்கங்களில் கூட சின்னஞ்சிறு குழந்தை தான். குழந்தைக்கு சரி சமமாய் அடம் பிடிப்பான். மாமாவின் பையனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற போது அம்மா ஹர்ஷாவைத் தான் மனதில் நினைத்தாள்.

"த- பாரு- ஹர்ஷாவைப் பண்ணிக்கோ. ஒன்னை விட ஒரு வயசு தான் பெரியவன். நல்ல திறமைசாலி."

ஆனால் மாமா தன் பெரிய மகன் சந்திரனுக்கு பெண் கேட்ட போது "சுகுணா வேண்டாம்னு சொல்லு. போ." மறுத்துக் கொண்டே இருந்தாள் அம்மா.

"ஏம்மா?"

"ஏண்டி நீ பி.காம். படிச்சிருக்கே. அவன் ப்ளஸ் டூ தான் படிச்சிருக்கான் அதுவும் பெயில். ரெண்டாவது சோம்பேறி. திறமை பத்தாது."

"அம்மா மாமா யாரை சொல்றாங்களோ அவங்களையே பண்ணிக்கிறேன். நீ நடுவிலே புகுந்து குழப்பாதே" அவனுடைய வெள்ளைத் தோலும். கதாநாயகன் போன்ற ஒரு

கம்பீரமும், குழந்தைத்தனமும் தான் அவளை ஒத்துக் கொள்ள வைத்ததோ என்னவோ. ஆயிற்று அவளுக்கு திருமணம் ஆகி எட்டு வருடங்கள் ஓடியே போய் விட்டது.

நான்கு வயதில் ஒரு பையன். ஏழு வயதில் ஒரு பெண். திருமண வாழ்க்கையில் நிறைகள் இருக்கிறதோ இல்லையோ குறைகள் என்பது கிடையாது. கணவன் வெளியே எல்லாம் கூப்பிட்டுக் கொண்டுபோகும் ரகம் இல்லை. அன்பைப் பிழிந்து தரும் ரகமும் இல்லை. ஒரு சின்ன குழந்தையைப்போல தினமும் அப்பாவுடன் கடைக்குச் செல்வான். திரும்பி வந்து டி.வி. யில் ஐக்கியமாய் விடுவான். பின் காலையில் மறுபடியும் ஓட்டம். சற்று சோம்பேறிதான். இருந்தாலும் இவனின் குணம் தெரிந்ததோ என்னவோ சுகுணா எதையும் எதிர்பார்த்ததில்லை இருப்பது போதும் என்று தன்னை தயார்ப்படுத்திக் கொண்டதால் என்னளவும் குறைவில்லை.

கணவனோடு ஒப்பிட்டு பார்த்ததில் தான் மாநிறம் தான். மூக்கு முழி எல்லாம் தீர்க்கமாக. அழகாக இருந்தாலும் சற்று கூடுலான நிறம் அழகுக்கு அழகு சேர்ந்து விடாதா? இரண்டு குழந்தைகளைப் பெற்ற பின்னும் தன் அழகில் பெரிய மாற்றம் ஒன்றுமில்லை. உடம்பு ஒல்லியாகத்தான் இருந்தது. அவனுடைய ஆஜானுபாகுவான தோற்றத்தின் முன் தான் ஒரு சிறு மூஞ்சூறு போல் இருக்கும் அவலம். இருந்தாலும் அவளுக்கே உண்டான அழகு இருக்கத்தான் இருக்கிறது.

'என்ன அண்ணி அண்ணனை அப்படியே பார்வையாலே முழுங்கிட்டு இருக்கீங்க. அண்ணன் வந்ததும் திருஷ்டி சுத்தி தான் போடணும்' ஹர்ஷா சிரித்தவாறே கேட்டு விட்டு 'வரேன்னு' கிளம்ப சுய உலகத்திற்கு வந்தாள் சுகுணா.

"ம்ம்மி எப்படி போறது? நாழி ஆயிடுச்சே" பெண் நச்சரிக்க "வா உங்களை பஸ்ஸுல கொண்டு போய் விட்டுட்டு வரேன்."

இதற்குள் மாமியாரும் கோவிலுக்கு போகிறேன் என்று கிளம்பியிருக்க தன் போர்ஷன் மாமியாரின் போர்ஷன்

Mithravinda 007



எல்லாவற்றையும் பூட்டிக் கொண்டு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு அவசரம் அவசரமாக கிளம்புகிறாள். பஸ்ஸ்டாண்டில் பிள்ளைகளை வைத்துக்கொண்டு நின்றபோது, ஹர்ஷா மனைவியோடு பைக்கில் வந்து விட்டான்.

"என்ன அண்ணி இங்க நிக்கறீங்க வீடு பூட்டியிருக்கு தேன்னு யோசிச்சேன்"

"இல்லைடா அவங்கப்பாவுக்கு மிகமுக்கியமான வேலையாம். பிள்ளைகள் ஸ்கூலுக்குப் போகணும்"

"என்ன வேலையாம் அவனுக்கு?"

"இன்னிக்கு செங்கல்பட்டிற்கு கலெக்‌ஷனுக்கு போகணுமாம்."

"இது பெரிய வேலையா?"

"இவங்களை ஸ்கூல்ல கொண்டு போய்விட ஒரு மணி நேரமா ஆயிடப்போவுது உங்களுக்கு பத்தாது அண்ணி அங்க அம்மாவைப் பாருங்க வாயைத் திறந்தாங்கன்னா எங்கப்பாவே சரண்டர். கொண்டு போய் விட்டுட்டு போடான்னா போறான். பிள்ளைகளை அழைச்சுகிட்டு நீங்க பஸ்ஸுல போறதா? அப்பா பார்க்கணும் இப்படி செய்ததற்கு எங்களை எல்லாம் நிக்க வச்சு கட்டுடுவாரு சரி பிள்ளைகளை என் கூட அனுப்புங்க நான் கொண்டு போய் விட்டுட்டு அப்புறம் கடைக்குப் போறேன்."

"எப்படிப்பா?" அவள் தயங்க.

"சிநேகா இறங்கு. இதோ உங்க இடத்துக்கு தான் பஸ் வருது காலியாகத்தான் இருக்கு. நீ போயிடு. நான் பிள்ளைகளை விட்டுட்டு ஆபீஸ் போறேன். சாய்ந்தரம் வந்து உன்னை பிக்கப் பண்ணிக்கறேன்?"

இளம் மஞ்சள் நிற புடவை அணிந்து, பார்த்து பார்த்து, தலை அலங்காரம் செய்து மஞ்சள் புடவைக்கு ஏற்றார் போல் மஞ்சளில் ஒரு பெரிய ஃபான்ஸி தோடு கைகளில் மஞ்சள் கல்

பதித்த ஜெய்ப்பூர் வளையல்கள் என்று அலங்காரத்தை சிரமம் எடுத்து செய்து கொண்டது பஸ்ஸில் போய் கசங்குவதற்காகவா?

"வேண்டாம்பா" சுகுணா பதற.

"ஏறு" ஹர்ஷா சற்று அதிகாரமாகக் கூற கடுகடுத்து முகத்தோடு விறு விறு என்று ஏறி விடுகிறாள். காலியாய் இருக்கும் சீட்டில் ஏறி உட்கார்ந்து கொள்கிறாள் சிநேகா.

"அண்ணி நீங்க கிளம்புங்க" அண்ணியை ஹர்ஷா கிளப்ப சுகுணா சற்று தயக்கமாகவே சிநேகாவைப் பார்த்து கையை அசைத்துவிட்டு கிளம்ப பிள்ளைகளை அழைத்துக்கொண்டு ஹர்ஷா கிளம்பியே போய் விடுகிறான். சிநேகாவின் பார்வை நடந்து செல்லும் சுகுணாவையே பார்த்து. ஆத்திரம் கோபம். இயலாமை. வெறுப்பு இதெல்லாம் அந்த பார்வையில் தெரிந்தது.

'எனக்கு எதிரி இவள் ஒருத்தி தான்.' வாய் முணுமுணுத்தது.



2

சுகுணா சற்று கலகலப்பாக வீடு திரும்புகிறாள். ஹர்ஷா எப்போதுமே இப்படித்தான். வலிய வந்து உதவி செய்பவன். தன் கணவனை விட இவளுக்கு ஹர்ஷாவைத் தான் நன்றாகத் தெரியும். திருமணத்திற்கு முன்பெல்லாம் 'சுகுணா', 'சுகுணா' என்று கூப்பிட்டவாறே தினம் ஆஜராகி விடுவான். உதவி கேட்பதற்கு முன் உள்ளே ஓடி வந்து உதவி செய்வான். சாதாரணமாக திருமணத்திற்கு முன்பு கலகலப்பாக பழகுபவர்கள் கூட திருமணத்திற்குப் பின் சற்று மாறித்தான் போகிறார்கள். ஆனால் ஹர்ஷா அன்றைய பொழுதில் அரை

Mithravinda 007



நிஜார் போட்டுக் கொண்டிருந்த போது எப்படி இருந்தானோ அதே வாஞ்சை. ஆசை உதவி செய்ய துடிக்கும் குணம் கூடப் பிறந்தவனாய் இருந்தாலும் இத்தனை செய்வானா என்பது சந்தேகம் தான் கூட அழைத்துப் போன பெண்டாட்டியைக் கூட பாதியில் விட எவனுக்கு மனது வரும். ஆனால் சிநேகா? அவள் தப்பாக நினைக்க மாட்டாளா? ஹர்ஷா தனக்கு உதவி என்று நினைத்து செய்தாலும் அவன் செய்தது தப்பு தான் கூட வந்தவளை அப்படியே நிறுத்தி பாதிவழியில் பஸ்ஸில் ஏற்றியது தவறு தான்.

இந்த ரீதியில் யோசிக்க ஆரம்பித்ததும் கலகலப்பு சற்று குறைந்தது லேசான கலக்கம் வேறு வந்தது. சரி கடவுள் விட்ட வழி சாதாரணமாக யோசித்தால் இதில் தவறு ஒன்றும் இல்லை தான். எப்படி இருந்தாலும் இனிமேல் இவ்வாறு தவறு நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாமாவிடம் சொல்லி டிரைவரை நிறுத்திக் கொண்டு பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டியது தான்.

மனதை சற்று சமாதானப்படுத்திக் கொண்டு விறு. விறு என்று நடை போட்ட போது.

"சுகுணா" யாரோ கூப்பிட திரும்பி பார்க்கிறாள்.

"ஏய் சுகுண் தானே நீ."

"யாரு?"

"என்னடி மறந்து போயிட்டியா? நான் விமலி என்னைத் தெரியலையா?" கல்லூரியில் தன் கூடப் படித்த விமலி ஒல்லியாக இருந்தவள் சற்று பெருத்து அடையாளம் தெரியாதவளாய் ஆகிப் போனாள்.

"ஸ்.. ஆமாம். மறந்து தான் போனேன். சாரி. நீ எப்படிம்மா இருக்கே? கல்யாணம் ஆயிடுச்சா? எத்தனை குழந்தைகள்? வா.. வீட்டுக்கு வா. வீடு பக்கம் தான். வீட்டுக்கு வந்துட்டு போ. ஒரு காபியாவது சாப்பிட்டு விட்டு போகணும்" வற்புறுத்தி அழைத்துச் சென்றாள் சுகுணா.

"நீ அப்படியே இருக்கே ஆனா என்னைத்தான் அடையாளமே தெரியலே இல்லே?" அவளுடன் பேசிக் கொண்டே வந்த விமலி.

"ஆமா உங்க ஹஸ்பண்ட் என்ன பண்றார்? எங்க வேலை செய்யறார்? ஒன்னுமே சொல்லவே இல்லையே."

"அவுங்க அப்பா கடையை பார்த்துக்கிறார்."

"அப்படியா?" என்று கேட்டுக் கொண்டே வந்தவள், பெரிய காம்பவுண்டுக்குள் இருக்கும் அந்த பிரம்மாண்டமான வீடுகளைப் பார்த்து மலைத்தே போய் விட்டாள்.

"என்னடி கடைன்னு சொன்னே? வீடுஎல்லாம் பிரமாதமா இருக்கு" சுகுணா சிரித்தவாறே ஜவுளிக்கடையைப் பற்றி சொல்ல, சொல்ல மலைப்போடு கேட்டுக் கொண்டிருந்தாள் விமலி.

"ஆமா உன் ஹஸ்பண்டு போட்டோ காண்பி. உன் கல்யாண ஆல்பத்தைக் கொடு." அவள் கேட்க, கேட்க, கணவனின் போட்டோவை எடுத்துக் காண்பிக்கிறாள் சுகுணா.

"ஏண்டி இவனா உன் புருஷன்?"

"ஏய் என்னடி எப்படியோ பேசறே."

"இந்த ஆள் ஒம் புருஷனா?"

"என்னடி கொஞ்சம் கூட மரியாதை இல்லாம பேசறே."

"உண்மையைத் தான் சொல்றேன்."

"த. பாரு விஷயம் எதுவா இருந்தாலும் பளிச்சின்னு சொல்லு. அதுக்கு பதிலா என் புருஷனை மரியாதை இல்லாம பேசினே ஒன்னை பார்க்கறதே தவிர்க்க நேரிடும்."

"இத பாரு சுகுணா என்மேலே கோவிச்சுக்கிறதுல பிரயோசனமே இல்லை. இருக்கறதுதான் சொல்றேன். உண்மையைத்தான் சொல்றேன். என்னிக்காவது நான் சொல்றது எல்லாம் நிஜம்னு கட்டாயமா புரூவ் பண்ணுவேன்."

Mithravinda 007



"என்னடி புரூவ் பண்ணுவே? என் புருஷன் என்ன தப்பு பண்ணினார்?"

"கையும் களவுமா பிடிச்சு கொடுத்தப்புறம் சொல்றேனே." அவள் கிளம்ப யத்தனிக்கையில்.

"த. பாரு. எதையோ சொல்லி கொழப்பிட்டு போனா என்ன அர்த்தம்? எதுவா இருந்தாலும் சொல்லிட்டுப் போ."

ஒரு நிமிடம் தயங்கியவள். "ஒம் புருஷனுக்கு இன்னொரு தொடர்பு இருக்கு. இவங்க ரெண்டு பேரையும் பல இடத்துலே பார்த்து இருக்கேன்." அவள் சொல்லகலகலவென்று சிரிக்கிறாள் சுகுணா.

"என்ன சுகுணா சிரிக்கறே? நான் சொல்ற விஷயம் கேலியாயிருக்கா? சிரிப்பு வருதா என்ன?"

"நான் என்னவோ ஏதோன்னு நெனச்சு பயந்துட்டேன் நல்லவேளை."

"என்னடி உன்னோட ஹஸ்பண்டு இன்னொரு பெண்ணோட தொடர்பு வச்சிருக்கார்னு சொன்னா உனக்கு சிரிப்பா இருக்கா?"

"சூரியனுக்கு வெளிச்சமே கிடையாதுன்னு யாராவது சொன்னா ஒத்துக்க முடியுமா? அது போலத்தான் இதுவும். எம் புருஷனைப் பத்தி எனக்கு ரொம்ப நல்லா தெரியும். அதுனால தான் தைரியமாய் சொல்றேன். ஒரு சட்டை போடணும்னா கூட நான் தான் செய்யணும். அது மட்டுமல்ல காலைல அவுங்க அப்பாவோட கடைக்கு போகிறவர் கரெக்டா ஆறு அடிச்சா வீட்டிலே இருப்பார். அது மட்டுமல்ல வெளியே போகவே அவருக்கு பிடிக்காது. வீட்டுக்கு வந்தாலே செம குளிரா இருந்தா கூட சரி. ஏ.ஸி யை ஆன் பண்ணிட்டு ரூமுக்குள்ளே போயிடுவார். எப்பவுமே டி.வி வேணும். டி.வியைப் பார்த்து விட்டு இருப்பார். இராத்திரி பத்து மணி வரைக்கும்டி.வி. தான். அதுனாலே நீ சொல்ற மாதிரி ஏதாவது இருந்தா வீட்டிற்கே வந்திருக்கமாட்டார். ரெண்டாவது அவரோட அப்பா. தம்பி

எல்லோருமே ஒண்ணாதான் கடைல இருக்காங்க, நீ சொல்றது நடக்கவே சான்ஸ் இல்லே. வேற ஆளா இருக்கும்."

"ஒரே மாதிரி ஏழு பேர்னு சினிமா, டிராமாவுலே எல்லாம் வருமே. அது மாதிரி சொல்லப் போறியா? அதெல்லாம் நான் நம்ப மாட்டேன். இதே ஆள் தான்" என்கிறாள் தோழி.

"இத பாரு ஒரே மாதிரி ஆளு இல்லாம இருக்கலாம். ஆனா ஒரே சாயல் கொண்டவர்களை நாம பார்த்ததில்லையா? சும்மாவேனும் சப்பை கட்டு கட்டாதே அப்படி என்ன எம் புருஷன் மேல உனக்கு அப்பேற்பட்ட வெறுப்பு." விமலி பெருமூச்செறிந்தாள். சுகுணாவை தீர்க்கமாக பார்த்து விட்டு கிளம்புகிறாள்.

"நீ சொன்னதெல்லாம் உண்மைன்னா ஐ வில் பீ தி மோஸ்ட் ஹேப்பி பெர்ஸன்." சொல்லி விட்டு நகருகிறாள்.

சுகுணாவிற்கு என்ன யோசித்தாலும் விமலாவின் வார்த்தைகள் படு அசட்டுத்தனமாக தோன்றியது. அவள் சொல்வதை ஒரு வார்த்தை கூட நம்ப முடியவில்லை. தன் புருஷனுக்காவது இன்னொரு கனெக்ஷன் இருப்பதாவது இந்த செய்தியைக் கேட்டதிலிருந்து லேசான சிரிப்பு தான் வந்தது தன் கணவனுக்குப் போய் சின்னவீடா? காலையில் எட்டு மணிக்கு எழுந்தால் கையில் பிரஷ் கொண்டு வந்து கொடுப்பதிலிருந்து குளிக்க சோப்பு எடுத்து கொடுத்து. மாற்றுடை கொடுத்து டிரஸ்ஸை கையில் கொடுத்து இப்படி எல்லாமே கையில் கொண்டு வந்து தரவேண்டும். எப்போதுமே ஏ.ஸி அறையிலேயே உட்கார்ந்திருக்கும் அமுல் பேபி அவன். கொஞ்சம் கரெண்ட் நின்றாலும் தவித்துப் போய் விடுவான். துடித்து விடுவான். ரொம்ப சொகுசாக வளர்ந்தவன். பயங்கர சோம்பேறிதான். காப்பி சாப்பிட்ட டம்ளரை வாங்கி வைக்கக் கூட பெண்டாட்டி வரணும். சட்டென்று அதைக் கீழே வைத்து விட மாட்டான். பத்து முறை 'சுகுணா. சுகுணா' என்று கத்தித் தீர்த்து விடுவான். ஒரு டம்ளரை கீழே வைக்க வேண்டுமானாலும்

Mithravinda 007



சுகுணா வேண்டும். இப்படி எல்லாமே சுகுணா தான். டி.வி பார்த்தபடி ஏதோ சாப்பிடுவான். சில நாட்கள் பாதி சாப்பாட்டை மீதி வைத்து விடுவான். சுகுணா தான் அதையும் பார்த்து கணவனின் வாயில் உருட்டி போட்டிருக்கிறாள். சில நாட்கள் சாப்பாடு வேண்டாமென்று அடம் பிடித்தாலும் இவள் மறுபடியும் போய் பக்கத்தில் பிசைந்து எடுத்துப்போய் ஊட்டியிருக்கிறாள். இப்படி குழந்தையாக பாவித்தவனுக்குப் போய் இன்னொரு கனெக்ஷன். ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டுமென்றாலும் கொஞ்ச மேனும் சுறுசுறுப்பு வேண்டும். வேளைக்கு சாப்பிட்டு விட்டு நேரத்திற்கு படுப்பவனுக்கு காதல் என்று சொன்னாலே சிரிப்பாய்த்தான் வரும். மறுபடியும் யோசித்துப் பார்க்கிறாள். கணவனோடு இன்னொரு பெண். நினைக்க நினைக்க வாய் கொள்ளாத சிரிப்புதான் வந்தது. வேடிக்கையாய் இருந்தது. உட்கார்ந்த இடத்துலேயே இவனுக்கு எல்லா வேலையும் ஆக வேண்டும். வரும் பெண் பயங்கர சுறு சுறுப்பாக இருந்தால் தான் குறைந்த பட்சம் லவ் ஆவது சாத்தியம். மறுபடியும் தன் கணவனை இன்னொரு பெண்ணோடு டூயட் பாடுவது போல் கற்பனை செய்து பார்த்ததில் . அவனைப் பற்றி நினைக்க நினைக்க அடக்கமாட்டாமல் சிரிப்பு தான் வந்தது.

மறுபடியும் கடகடவென்று சிரித்தாள். தன்னைப் போல் எவளாவது இருப்பாளா? கணவனுக்கு இன்னொரு பெண்ணோடு தொடர்பு இருக்கு என்று தெரிந்ததிலிருந்து சிரி. சிரி. என்று சிரித்துக்கொண்டு இருக்கிறோம். தன் இடத்தில் வேறு யார் இருந்தாலும் இப்படி செய்திருப்பார்கள்? மறுபடியும் நினைக்க, நினைக்க சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. கணவன் சற்று குண்டான உடம்பை ஆட்டி. ஆட்டி டப்பாங் கூத்து போல் ஆட அவனுடன் கூட முகம் தெரியாத ஒரு பெண் ஆடுகிறாள். நினைக்கையிலேயே சிரிப்பு. நல்ல தமாஷ். தன் கணவனாவது சுறுசுறுப்பாக காதலிப்பதாவது.

மாமனார் இவளை திட்டுவதே இந்த ஒருவிஷயத்தில் தான்.

"எம்மா அவனே சோம்பேறி. அவனை இன்னும் மகா சோம்பேறியாக்கி விட்டாயே. உனக்கு புத்தி வேணாம்." சற்று காரமாகவே கடிந்து கொள்வார். "ஞாயிற்றுக் கிழமை ஆயிடுச்சன்னா இது என்ன சின்ன குழந்தை மாதிரி எண்ணெய் தேய்ச்சு விட்டு உடம்பு குளிப்பாட்டி இந்த காலத்துலே எந்த பொம்பளை சுடு தண்ணி வச்சு கணவனுக்கு மாலிஷ் போட்டு கிட்டு இருப்பா. நல்ல ஓரசு நீ." கடிந்து கொள்வார்.

"எருமைக்கடா மாதிரி இருக்கான் பாரு. சுறுசுறுப்பாக இருக்க சத்து கொடு. உன்னை கட்டி வச்சதுக்கு காரணமே ஒன்னை மாதிரி புத்திசாலிப் பொண்ணு அவனைமாத்தாதான்னு நப்பாசை தான்." எல்லாவற்றையும் ஒரு புன்சிரிப்போடு கேட்டுக் கொண்டு இருப்பாள். பதில் மட்டும் வாயிலிருந்து வராது.

"என்னம்மா இத்தனை சொல்றேன். பேச்சைக்காணோம்."

"அவர் கொழந்தை மாமா."

"கிழிஞ்சது அவன் உருப்பட்ட மாதிரிதான்." முணு முணுத்தபடி எழுந்து போவார். இந்த விஷயத்தில் தான் அவருக்கும் அவளுக்கும் பல தடவை மாட்டிக் கொள்ளும். எப்போது கேட்டாலும். "குழந்தை மாமா... பாவம் மாமா அவர்." இப்படியே சமாளித்திருக்கிறாள். முதலில் கொஞ்ச வருடங்கள் திட்டிக் கொண்டிருந்தார். பின் இதைப் பற்றி பேச்சை எடுக்கவே வெறுத்து விட்டார்.

'சும்மா இந்த பொண்ணை திட்டறதுலே எந்த பிரயோசனமும் இல்லை. அதுவும் மாறாது. அவனும் மாறமாட்டான்.' இது மாமனாரின் கணிப்பு.

இப்படி எல்லாம் நினைத்த அமுல் பேபி கணவனுக்கா. இன்னொரு தொடர்பு. மறுபடியும் காரணமில்லாமல் சிரிப்பு வந்தது. இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே மணி பதினொன்னறை தொட்டது. மணி சத்தம் கேட்டதுமே அலறி அடித்துக் கொண்டு எழுந்திருக்கிறாள்.



"ஐயையோ சாப்பாடு எடுத்துட்டுப் போக டிரைவர் வந்துடுவானே" மாமனார். கணவன். மச்சினன். மாமியார் எல்லோருக்குமே மதியம் சாப்பாடு இவள் வீட்டிலிருந்து தான் போகும். வெளியில் போகும் ஆண் பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக் கட்டிக்கொடுத்து விடுவாள். மதியம் பிள்ளைகளுக்குகூடாக டிரைவரிடம் கொடுத்துவிட்டு. மதியம் மாமியாருக்கு போட்டு. தான் சாப்பிட்டுவிட்டு அடுத்த வேலைகளைக் கவனிக்க ஆரம்பிப்பாள்.

இன்று காலை சாப்பாடும் கட்டிக் கொடுக்கவில்லை. டிரைவர் வரும் நேரம் கூட ஆகி விட்டது. இன்னும் சாப்பாடே ஆகவில்லை. என்னென்னவோ செய்ய வேண்டும் என்று நினைத்து ஒன்று கூட செய்யவில்லை. அவசரம் அவசரமாக வெங்காய சாம்பார். உருளைக் கிழங்கு. பச்சைப் பட்டாணி போட்டு கறி. பூண்டு ரசம். அப்பளம் பொரித்தாள். கணவனுக்கு பிடிக்குமே என்று முட்டையும் பொரித்து வைத்தாள். அவசரம் அவசரமாக செய்ததில் மற்ற நினைவுகள் கலைந்து போயின. டிரைவர் வந்து காத்துக் கொண்டிருந்தான். மணி ஒன்றைத் தொட்டுக் கொண்டிருந்தது. கைகால்கள் பரபரத்தன. பிள்ளைகளுக்கு தனியாக கட்டி வைத்து விட்டு இரண்டு பெரிய டிபன் காரியரில் தன் கணவன். மச்சினன். மாமனாருக்கு கட்டிக் கொண்டு அவளே கிளம்பினாள்.

"ஏன் இன்னிக்கு இம்புட்டு லேட்? இன்னா செய்துவிட்டு இருந்தே." மாமியார் சற்று அதட்டலாக கேட்க.

"இல்லை அத்தை தோழி ஒருத்தி வந்துட்டா ஒரு வேலையும் செய்ய முடியலே. லேட்டாயிடுச்சு" பரபரத்தவாறே அத்தையை உட்கார்த்தி வைத்து சாப்பாடு போட்டாள்.

"ஆமா நீ என்னத்துக்கு போகணும்? டிரைவர் வந்திருக் கானில்லே கொடுத்து அனுப்பு."

"இல்லை அத்தை இன்னிக்கு போஸ்ட் ஆபீஸ் வேலை இருக்கு. இதை குடுத்துட்டு அங்க போஸ்ட் ஆபீஸ் அகௌண்டலே கணக்கு சரி பார்க்கணும்."

Mithravinda 007

"ஏன் அதை ஒன் மாமனாருக்கு போன் போட்டு சொல்லு. நீயே வேலை செய்யறானே யோகராஜூ அவனை அனுப்புவாரு."

"இல்லை அத்தை இன்னிக்கு போயே ஆகணும்."

விசித்திரமாக பார்க்கிறாள் மாமியார். இதுவரை மருமகளை மாமியார் சொன்ன வார்த்தைக்கு எதிர் குரல் இருந்ததில்லை. இன்று என்னவோ மறுப்பாக வார்த்தைகள் வெளிவர மருமகளையே விசித்திரமாக பார்க்கிறாள்.

"நான் வந்து சாப்பிட்டுக்கறேன் அத்தை" மாமியாரிடம் சொல்லிவிட்டு சின்ன குழந்தையாக ஓடும் பிறந்த நாளில் புதுச்சட்டை போட்டுக் கொண்டு எல்லோருக்கும் காண்பிக்க வேண்டும் என்று துடி துடிக்கும் சின்னக் குழந்தை போல மருமகளையே வேடிக்கை பார்க்கிறாள் மாமியார். பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டு கடைக்கு செல்லும் போதே மணி ஒன்றரை அடித்தது.

"என்னம்மா நீ வந்திருக்கே?" மாமனார் கரிசனமாக கேட்க.

"இல்லை மாமா" புன்சிரிப்பாக சிரிக்கிறாள். என்றாவது இப்படி அபூர்வமாக வருவதும் உண்டு. மாமனார் சிரித்துக் கொள்கிறார்.

"என்ன அண்ணி ஸ்பெஷல் டின்னரா இன்னிக்கு அண்ணனுக்கு பக்கத்துலே நின்று ஊட்ட வந்திருக்கீங்களாம்" கிண்டல் பண்ணினான் ஹர்ஷா. முகம் சிவந்து போகிறது.

"போ... உங்க அண்ணா எங்கே?" கண்கள் அவனைத் தேடுகிறது. மனதில் ஏனோ சொல்ல முடியாத ஆனந்தம்.

"அவனா? அவன் எங்கே 'போறான்னு யாருக்குத் தெரியும்? யாரையும் மதிக்கறதில்லே. அப்பா இப்படி கௌம்பினார்னா. அப்படி கௌம்பி விடுவான். மூன்று மணிக்கு மேலே தான் வருவான்." ஹர்ஷா சொல்ல. சொல்ல திடுக்கிட்டாற் போல் நிற்கிறாள்.



3



'என்ன சொல்கிறான் இவன்?' அவன் சொல்வதைக் கேட்க. கேட்க உடம்பே வெடவெடவென்று ஆடியது. தன் தோழி சொன்னது எல்லாம் நிஜமா? இப்படி கூட நடக்கும் சாத்தியம் இருக்கிறதா என்ன? வயிறு கலங்கியது. தலை சுற்றியது. தொண்டை அடைத்தது. பேசாமல் அப்படியே அமர்ந்து கொள்கிறாள்.

"அண்ணி என்ன செய்யுது?"

"ஒண்ணுமில்லே." சொல்லும்போதே. கண்களில் ஈரம் தேங்க ஆரம்பித்தது.

"அண்ணி என்ன இப்படி அப்சட் ஆகிட்டீங்க? அவன் எங்கியானா போயிருப்பான். இல்லே ஹோட்டலுக்கு போயிருப்பான். இல்லையென்றால் சினிமாவிற்குப் போயிருப்பான். இதுக்கெல்லாம் யாராவது அழுவாங்களா?"

அவன் கேட்க. கேட்க மனதின் ஒரு மூலை எச்சரித்தது. அவனுக்கு இன்னொரு தொடர்பு இருக்கா? தோழி சொன்னது போல இன்னொருத்தியுடன் சுற்றுகிறானா? இல்லை சாதாரணமாக சினிமாவுக்கு போனவனை தான் தவறாக நினைத்துக் கொண்டோமோ? எது இருந்தாலும் இத்தனை நேரம் இருந்த ஆனந்தம். துள்ளல் எல்லாம் போய் மனது கனக்க ஆரம்பித்தது. இத்தனை நேரம் தான் சிரித்த சிரிப்பு என்ன? இப்போது ஏற்பட்டிருக்கும் கோலம் என்ன? அவனை இன்னொருவளின் சொந்தக்காரனாக தன்னால், தன்னால் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியவில்லையே ஏன்? மனது கிடந்து தவித்தது.

Mithravinda 007

சாதாரணமாகத் தான் போயிருக்கணும் கடவுளே அவர் ... போல் ஆகிவிடக் கூடாது. அவன் தோழி சொன்னது போல் ஆகிவிடக் கூடாது. அவன் தன்னுடையவன் மட்டும் தான். அவனில்லாத வாழ்க்கை வாழ்க்கையா? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கியது. காலையில் நான்கு மணிக்கு எழுந்திருப்பாள் சுகுணா. விடியற் காலையில் எழுந்திருந்து, குளித்து, காபி போட்டு டிபனுக்கு ரெடி பண்ணி ஆறு மணிக்கு தூங்கும் கணவனை எழுப்பி, பெட் காபி தந்து அவன் குடித்தபின் தான் இவளுக்கு காபி சாப்பிடும் நினைப்பே வரும். இப்படி எத்தனையோ விஷயங்களில் அவனுக்கு கொடுத்து விட்டு அவன் சாப்பிட்ட பின்தான் சாப்பிட வேண்டும் என்ற ஞாபகமே அவளுக்கு வரும் 'பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி.' என்று பத்தினிக்கு ஒரு கோட்பாடு விதித்து இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தவளல்ல சுகுணா. மாமன் மகன் கணவனாக வந்த பின் அவன் மேல் ஏற்பட்ட நேசம், காதல், அன்பு, பக்தி இப்படி எதை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இதுதான் இவளை இவ்வாறு நடக்க வைத்ததோ. என்னவோ.

மனம் முழுவதும் கணவனே ஆக்கிரமித்து நின்று கொண்டிருக்கிறான். சாதாரணமாக பெண்களுக்கு கணவன் எத்தனை செய்தாலும் கூட குறை சொல்லவென்று ஏதானும் வைத்திருப்பார்கள். அதை விடாப்பிடியாக வைத்துக் கொண்டு சொல்வார்கள். ஆனால் இங்கே கணவன் அவளை வெளியே எங்கும் அழைத்துப் போனதில்லை. திருமணம் ஆன கையோடு ஒரு பதினைந்து நாள் உறவினர் வீட்டிற்கு விருந்திற்கு போனதோடு சரி. மாமனாரே அவளிடம் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்.

"வருஷத்திலே ஒருமுறையாவது பிள்ளைகளையும், ஒம் புருஷனையும் அழைச்சுகிட்டு எங்கியானா போயிட்டுவா."

"பரவாயில்லை மாமா" என்பாள். அவனிடம் ஸ்பெஷலாக எதையுமே எதிர்பார்த்ததில்லை. என்றாவது பளிச்சென்று இருந்தால் "அண்ணி. அண்ணன் சொக்கி விழுந்திடப்



போறாரு" ஹர்ஷா கூட கேலி செய்து விட்டுப் போவான். மற்றவர்களின் கண்ணுக்குபட்டது கூட அவன் கண்ணுக்கு பட்டிருக்குமா என்பது தெரியாது. இது நன்றாக இருக்கிறது என்று சிலாகித்தது இல்லை. இப்படி பண்ணிக்கோயேன் என்று சொன்னதில்லை. தன்னை என்றாவது பார்த்து ரசித்திருக் கிறானா? என்று கூடத் தெரியாது. 'சுகுணா' அவன் கூப்பிடுவதிலேயே மனம் குழைந்து போகும். ஆனந்தப்பட்டுப் போகும். தன் கையால் அவனுக்கு சாப்பாடு போட்டால் ஒரு ஆனந்தம். அவனுக்கு பார்த்தது, பார்த்து, துணி எடுத்து வைப்பதில் ஒரு மகிழ்ச்சி. அவனுக்கு பேஸ்ட் எடுத்து வைப்பதிலிருந்து, ஷூ சாக்ஸ் எடுத்து வைக்கும்வரை ஒருவித ஆனந்தத்தோடு அல்லவா செய்கிறாள். திருவரங்கனின் பக்தையான ஆண்டாள் அவனின் திருப்பணிகளில் உடல் மனம், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தது போல் தனக்கும் தன்புருஷனிடம் ஒரு ஈடுபாடு. அவனிடமிருந்து எதையுமே எதிர்பார்க்காத ஒரு அன்பு. தனக்கு எதையுமே செய்ய வேண்டாம். தன்னுடைய சேவைகளை அவன் ஏற்றுக் கொண்டால் போதும். ஏற்றுக் கொள்வானா? இல்லை. அதற்கும் தடை வந்து விடுமா? மறுபடியும் மனம் தடக் தடக் கென்று அடித்துக் கொண்டது. அவன் தான் உலகம். அவன் தான் வாழ்க்கை என்றாகிவிட்டது. எல்லாமே வீணாகிவிடுமோ. அவனுக்கு ஒரு சின்ன வீடு இருக்கும் என்பது கூட எத்தனை வேடிக்கையாய் இருந்தது.

நடக்க முடியாததெல்லாம் நடக்குமா என்ன? எல்லாமே பொய்யாகி விடுமோ?

"அண்ணி என்ன இது? அண்ணன் இல்லைன்னா இத்தனை வெக்ஸ் ஆயிட்டீங்க. அவன் வந்துவிடுவான் அவன் சினிமா பைத்தியம் தெரியாதா?

ஏதாவது தியேட்டரில் உக்காந்துட்டு இருப்பான். இதை இத்தனை ஷாக்கிங்கா எடுப்பானேன் சரி சாப்பாட்டை கொடுங்க பசி கொல்லுது."

Mithravinda 007

சட்டென்று உதட்டளவில் புன்னகை விரிந்தது மனது லேசானது மாமனாருக்கு சாப்பாட்டை எடுத்து வைத்து விட்டு, மச்சினனுக்கு சோற்றைப் போட்டு விட்டு சிறிது நேரம் அமர "என்னம்மா உம் புருஷன் சாப்பிட்டானா? எங்கே அவன்?" என்கிறார் மாமனார் முகத்தில் கலவரம் மின்ன மாமனாரிடம் சொல்லலாமா? யோசிக்கையில் சட்டென்று கைகளால் சைகை செய்கிறான் ஹர்ஷா.

"வேண்டாம் அண்ணி."

"என்னம்மா மேலே கடையிலே இருக்கானா? போன் பண்ணு வரச் சொல்லு."

"இல்லப்பா. நானே அண்ணியை கூட்டிகிட்டு போறேன் அண்ணனுக்கு தன் கையால் சோறு போட்டாதான் அவுங்க மனசு சந்தோஷப்படும்." என்கிறான் ஹர்ஷா.

"சரி சரி சீக்கிரம் போட்டுட்டு வீட்டுக்கு போ மணி மூணு அடிக்கப்போவுது. எத்தினி நேரம் சாப்பிடாம இருப்பே." அவள் உயிரில்லாமல் தலையை அசைத்து விட்டு நடக்க.

'என்ன பொண்ணு இது. இப்படி ஒரு வாஞ்சையை மனசு முழுவதும் ரொப்பியா வைத்துக் கொண்டு இருக்க வேண்டும். இந்த வைரத்தின் மதிப்பு தன் பையனுக்குத் தெரியுமா? இதை பொக்கிஷம் போல் புடம் போட்டு எடுத்து வைக்க வேண்டாமா? பாவம் புருஷன், புருஷன்னு எப்படி உயிரை விடுகிறது. இருந்தாலும் தன் பையனுக்கு எதுவுமே பத்தாது.' துரைசாமி மனதிற்குள் பொருமினார். 'வரட்டும் சற்று திட்டம் பண்ணி வைக்க வேண்டும். இனிமேல் அவளை மதியம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு அனுப்பியே ஆக வேண்டும். கொஞ்ச நேரம் அவளுடன் இருந்துவிட்டு வரட்டுமே பாவம் மருமகள். இக்காலத்தில் மூன்று முடிச்சுகள் கழுத்தில் ஏறினதுமே, கணவனைத் தவிர மற்ற எல்லோரையுமே அன்னியமாக நினைக்கும் போது, இப்படியும் ஒரு பெண் சொந்தமாக இருந்தாலும் எத்தனை பெண்கள் மாமா, அத்தை, கொழுந்தன் என்று பார்த்து, பார்த்து செய்கிறார்கள்.'



தன் ஒன்று விட்ட தம்பி, அவனுடைய அக்காள் மகளை தன் பையனுக்கு கட்டி வைத்து, மனைவி வந்த போது, அம்மாவிற்கும், பிள்ளைக்கும் நடுவில் பேச்சு வார்த்தையே அற்றுப் போனது. கவனிப்பார் இல்லாமல் கடைசி காலத்தில் முதியோர் இல்லத்தில் அவள் சென்று இறந்தது. அதை விடக்கொடுமை. இப்படியெல்லாம் இருக்கையில் நல் முத்து போல ஒரு பெண் கிடைத்ததற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? முதலில் பெரிய பையனைக்கூப்பிட்டு அறிவுரை தர வேண்டும். ஹர்ஷாவிடமும் சொல்ல வேண்டும். ஆ- ஹா- என்றால் குடும்பத்தோடு இங்கு தின்பதை விட்டுவிட்டு அவனவன் வீட்டில் பாத்துக் கொள் என்று கூறிவிட வேண்டும் பாவம் மருமகள் எத்தனைதான் வேலை செய்வாள். மருமகளைப் பற்றி நினைத்து, நினைத்து நெகிழ்ந்து போனார் துரைசாமி. இவள் என் வயிற்றில் பிறவாத பெண். சொந்தப் பெண் இருந்தால் கூட இத்தனை ஆசையாக இருக்குமா? மனம் அவளை நினைந்து துதித்தது.

"என்னப்பா அண்ணன் மேலையா இருக்காரு" சுகுணா மெதுவாகக் கேட்க.

"ஸ்... அண்ணி..." வாயில் கை வைத்து சைகை செய்கிறான்.

"என்னப்! பா..."

"அண்ணன் மாடியிலே இருக்கிறதா அப்பா நினைச்சுக் கிட்டே இருப்பாரு. அவருக்கு தெரிய வேண்டாம்."

"ஏன்பா தெரிய வேண்டாம்?"

"அண்ணி அவனுக்கு ஏற்கனவே கல்லாவுலே அப்பா உட்கார உடறதில்லைனு கடுப்பு. முக்கியமான பொறுப்புகளை எல்லாம்அப்பா அவன் கிட்ட கொடுக்கலைன்னு வெறுப்பு. இது முக்கியமான வேலையை என்னை நம்பி தருவார். அவனை நம்பறதில்லைன்னு என்கிட்ட கூட கோபம்." ஹர்ஷா சொல் சொல்ல சிலையாக அமர்ந்திருக்கிறாள் சுகுணா. இது கணவனின் இன்னொரு முகமா என்ன? தன் கணவனு

Mithravinda 007

கோபம் கூடவருமா? தன் சொந்த தம்பியிடமே ஆத்திரம், கோபம். வெறுப்பு எல்லாவற்றையும் காட்டுகிறானாமே. கணவனைப் பற்றி புதிதாக தெரிந்து கொண்ட செய்திகள் வேறு குழப்பி அடித்தன. "நீங்கவரும் போது. அவன் இல்லேன்னு தெரிஞ்ச. அதை நான் தான் சொல்லிட்டேன்னு தெரிஞ்சா. அப்புறம் அண்ணன் என்னை கிட்டே கூட சேக்கமாட்டான். அதுனாலே தான் தெரிஞ்ச மாதிரி காமிச்சிக்கிடாதீங்க."

அவளை மேல் மாடியில் உள்ள ரெடிமேட் துணிக்கடையில் உட்கார வைத்துவிட்டு. அவளை அங்கேயே விட்டு. விட்டு. கீழே வாடிக்கையாளர்களை சந்திக்கச் சென்றான். போகு முன் மறுபடியும் திரும்பி சொல்கிறான்.

"இத பாருங்க அண்ணி ஒரு பத்து நிமிஷம் கழிச்சு கிளம்பிடுங்க. அவனுக்காக காத்துகிட்டு ஒங்க வயிறை காயப் போடாதீங்க. அவன் நல்லா ஹோட்டல்லே மொக்கிட்டு வருவான். வந்தவுடனே நீங்க கொண்டு வந்த சாப்பாட்டை சாப்பிட சொல்றேன். காரை பின் பக்கம் கொண்டு வந்து நிறுத்தச் சொல்றேன். அப்படியே இறங்கிப் போயிடுங்க. அப்பாவுக்கு தெரிய வேணாம்."

'இதெல்லாம் பொய் என்று ஆகாதா? தன் கணவன் பழைய அமுல் பேபி கணவனாக இருக்கக் கூடாதா? கடவுளே நான் யாருக்கும் எந்தத் துரோகமும் நினைத்ததில்லையே.' நினைக்கையிலே கண்களில் நீர் நிறைந்தது. நல்ல வேளை சாப்பிடும் நேரம் போலும். பெரும்பாலும் இந்த கடையில் இரண்டு மணிக்கு மேல் தான் சாப்பிடவே போவார்கள். இன்று கூட்டமே இல்லை. கீழே வேலை செய்யும் ஆட்கள் ஓரிருவரைத் தவிர வேறு யாருமே இல்லை அந்த ஒருவன் கூட புதிதாக வேலைக்கு சேர்ந்தவன் போல் தோன்றியது. அவளைப் பார்த்து சற்று பயந்தாற் போல் நின்று கொண்டிருந்தான். எதை நினைத்தாலும் மறுபடியும் மனது கணவனையே சுற்றி வந்தது அப்பாவி. குழந்தை என்று நினைத்தவனிடத்திலா இத்தனை ரகசியம். மறுபடியும் மனது

Mithravinda 007

ஊமை அழுகை அழுதது. திடீரென்று ஹர்ஷாவை நினைத்தாலே ஆத்திரம் பற்றி கொண்டு வந்தது. மாமாவிடம் சொல்லக் கூடாது என்கிறான். குறைந்த பட்சம் என்னிடமாவது சொல்லியிருக்கலாமல்லவா? இரசசியமாக சொல்லி இருந்தால் கூட வேறு தப்பு வழிக்கு போகாமல் காத்துவிடலாமே.

ஒரு வேளை ஹர்ஷா தான் இந்த மாதிரி சூழ்ச்சி செய்கிறானோ? தானே எங்காவது அனுப்பிவிட்டு. அண்ணன் மேல் பழியைப் போட் டு. எதற்காக இப்படி எல்லாம் நடக்கத் தோன்றுகிறதோ என்னவோ? பணத்திற்கு முன் அம்மா. அப்பா, தங்கை, தம்பி, அண்ணன். ஏன் மனைவி கூட வேறு தான். பணத்திற்கு பணம் ஒன்று தான். உறவு ஏற்கனவே அண்ணனுக்கு போதாது என்று பெயர் இப்போது இப்படியும் ஏதாலும் செய்து விட்டால் மாமனார் தன் புருஷனை உதவாக்கரை என்று வெறுத்து தள்ளி விடுவார் என்ற நினைப்பா? ஒரு நிமிடம் ஹர்ஷாவைப் பற்றி தவறாக நினைக்கிறோமே மனம் இடிந்தது. ஆனால்அடுத்த நிமிடம் யோசித்துப் பார்த்ததில் . ஹர்ஷாவைப் பற்றி தவறாக நினைப்பதில், தவறு ஏதும் இல்லை என்று தோன்றியது.

பழைய சம்பவம் ஒன்று இப்போது தேவையில்லாமல் ஞாபகத்திற்கு வந்தது. ஒரு முறை எங்கோ வேண்டுதல் என்று குடும்பத்தோடு எல்லோரும் கிளம்பியபோது 'காரில் பெட்ரோல் போட்டுக் கொண்டு காரை செக் செய்து கொண்டு வந்து விடு' என்று அண்ணனிடம் காரைக் கொடுத்து அனுப்பினான் ஹர்ஷா. அவ்வளவு தான் மாமனாரிடமிருந்து சரமாரியான திட்டுகள். நல்ல வேளை ஹர்ஷா அனுப்பியது சுகுணாவிற்கு தெரிந்திருந்ததால் மாமனாரிடம் சொல்லி திட்டுவதை நிறுத்தினாள்.

தானே பெட்ரோல் போட அனுப்பி விட்டு எங்கோ போய்விட்டான் என்ற அர்த்தத்தில் பேசுவது எந்த வகையில் நியாயம். அன்று கோபப் பட்டு ஹர்ஷாவிடம் கூட கேட்டாள்.

"இல்லை அண்ணி... அப்பாவை பார்த்தாலே பயமாக இருக்கு" என்று சொல்லி விட்டான்.

"நீங்க தயவு செய்து தப்பா நினைக்காதீங்க." அவளிடம் சற்று கெஞ்சியது போல் பேசினான் ஹர்ஷா. 'அது ஒரு வேளை மழுப்பலாக இருக்குமோ' என்று இப்போது தோன்றியது' ஒரு வேளை இப்போதும் அந்த மாதிரி ஏதேனும் செய்து தன்னை ஏமாற்றுகிறானா?' யோசித்துக் கொண்டு குழம்பிக் கொண்டு உட்கார்ந்திருக்கையில் அந்த கடையில் வேலை செய்யும் பெண்கள் வந்தனர். சாப்பிட்டு விட்டு திரும்பிவரும் போது உட்கார்ந்தவாறே ஏதோ யோசனையில் ஆழ்ந்து இருந்த சுகுணாவைப் பார்த்தனர்.

"மேடம் எப்ப வந்தீங்க? என்ன மேடம் இங்கேஇருக்கீங்க? சாரைப் பாக்கலையா?" அவர்களில் ஒருத்தி கேள்வி கேட்க.

"சார் எங்கே போனார்?" இன்னும் சாப்பிடவே வரலியே."

"என்னது? இங்கதானே மேடம் இருந்தார்."

"இருங்க மேடம் சாரை கூப்பிட்டுகிட்டு வரோம்." அவள் விடுவிடுவென்று உள்ளே போனாள்.

"மேடம் ஒரு நிமிஷம் இங்கே வாங்க." கூப்பிட சாப்பாட்டு கேரியரோடு அந்த பிரத்யேகமான ஏ.ஸி. அறையில் நுழைந்தாள் சுகுணா. மதியம் சற்று நேரமும் சோர்வாக இருக்கும் போதும் ஓய்வு எடுக்கும் அவர்களின் பிரத்யேக அறை அது.

மெதுவாக கதவைத் தட்டுகிறாள் சுகுணா. "மேடம் இன்னொரு சாவி ரிஸப்ஷன்லே இருக்கு. நான் வாங்கிட்டு வரேன் மேடம்." நந்த நிமிடங்களில் இன்னொரு சாவி கொண்டு வந்து கொடுத்த. திறந்து உள்ளே நுழைந்த போது கட்டிலின் முழுவதையும் ஆக்கிரமித்தவாறே படுத்துக் கிடந்தான் அவளின் அழுல் பேபிக் கணவன்.

Mithravinda 007





# 4

ஒரு நிமிடம் குப்பென்று வியர்த்தது சுகுணாவிற்கு கணவன் இங்கே தான் படுத்துக் கிடக்கிறான். ஹர்ஷாவின் வார்த்தைகளை நம்பி இவனை எப்படி எல்லாம் தவறாக நினைத்தோம். இப்போது நிஜமாகவே அழுகை வந்தது.

"என்னங்க. என்னங்க." எழுப்பின பின் வாரிச் சுற்றிக் கொண்டு எழுந்திருக்கிறான்.

"அ...ப்...பா." அதற்கு மேல் வார்த்தைகள் அவனுக்கு வரவில்லை. மனைவியைப் பார்த்துமே முகம் மலர்ந்தது.

"என்னங்க மணி மூன்றரை ஆகுது. இன்னும் சாப்பிடாம கொள்ளாம இப்படி படுத்து கிடக்கறீங்க?" அவன் லேசாக புன்னகைக்கிறான்.

"ரொம்ப அசதியா இருந்தது. லன்ச் அவர்லே அப்படியே படுத்தேன். தூங்கிட்டேன்."

அவன் பதிலால் கண்கள் நனைந்து போனது. சே. எத்தனை தங்கமான மனிதன். இவனைப் போய் தவறாக நினைத்து விட்டேனே. நினைக்க நினைக்க அழுகை வந்தது. "என்னாச்சு?" கணவன் ஆச்சரியமாய் கேட்க தட்டை எடுத்து வைத்து சோற்றை பரிமாறுகிறாள்.

"அப்பாட செம பசி" போடப்போட தனக்கு இஷ்டமான சாப்பாட்டைக் கண்டால் குதித்து ஓடி வரும் குழந்தை போல் வேக வேகமாக ஒரு குதூகலத்தோடு சாப்பிடுகிறான். அவன் சாப்பிட சாப்பிட இன்னும் அழுகை தான் வந்தது. எத்தனை

நல்லவன். எவனோ சொன்னான் என்று என் கணவனை எப்படி என்னால் தப்பாக நினைக்க முடிந்தது. சே! தன் மேல் நம்பிக்கை இல்லாதவன் தான், கணவன் மேல் நம்பிக்கை படமாட்டான். நானே மோசமானவள் தான். தன்னை மனதார வைதாள். சபித்தாள். இத்தனைக்கும் நடுவில் மனதில் ஒரு அமைதி வந்தது. இத்தனை நேரம் துடித்துக் கொண்டிருந்த மனம் சாந்தி அடைந்தது. கண்களை மூடி பெருமூச்சு விடுகிறாள். கணவனுக்கு கிட்ட இருந்து போட்டு விட்டு, சாமான்களை ஒழித்து, கூடையில் போட்டு, வீட்டிற்குப் போகலாம் என நினைக்கையில், தவறாக தன்னிடம் தகவல் தந்து இத்தனை நேரம் தவிக்க வைத்த அந்த ஹர்ஷாவையும் சற்று மாட்டி வைத்தால் என்ன? இனிமேல் தன் கணவன் விஷயத்தில் விளையாடாதபடி செய்யணும். பல்லைக் கடித்துக் கொண்டவள், பசியையும் மறந்து, நேராக முன் பக்கம் வந்து மாமனாரிடம் செல்கிறாள். இத்தனை நேரம் அழுதது. சாப்பிடாமல் இருந்தது காலையில் துடிதுடித்தது. எல்லாம் சேர்ந்து முகத்தை சற்று அதிகமாகவே பாதித்து இருக்க, அப்படியே மாமனரின் முன் போய் நிற்கிறாள்.

"என்னம்மா இன்னும் போகலை நீ? மணி மூனே காலுக்கு மேலேயே ஆயிடிச்சு எப்ப சாப்பிடறது?" சற்று வாட்டத்தோடு நிற்கிறாள்.

"என்னம்மா பதிலே காணோம்? உம் புருஷன் எங்கே?"

"அவர் மாடியிலே தான் இருக்கார் மாமா. ஹர்ஷ் தான் அவர் வெளியே போயிருக்காருன்னு சொல்லிச்சு. அதுக்காகத் தான் இத்தனை நேரம் காத்துகிட்டு இருந்தேன். பாவம் அவுங்களே இப்ப தான் சாப்பிட்டாங்க. இந்த ஹர்ஷ் பேசாம இருந்திருந்தா அவங்களுக்கும் போட்டுட்டு, ஒன்றரை மணிக்கே ளம்பி இருப்பேன்."

"ஹர்ஷ் சொன்னானா?" அவருடைய முகம் சட்டென்று பத்தில் தகதகத்தது.



"ஹர்ஷைக் கூப்பிடு." அவர் சொல்ல, சொல்ல "மாமா நான் கிளம்பறேன். பசி எடுக்குது." கிளம்பியே விட்டாள். இத்தனை நேரம் எடுக்காத பசி.சேர்த்து வைத்து இப்போது வதைத்தது வயிற்றை சுண்டி சுண்டி இழுத்தது.

ஒரு வழியாக வீட்டிற்குச் சென்று, சாப்பிட்டு விட்டு, மாலை டிபன் செய்து, இரவு சமையல் முடித்து, எல்லோருடைய வருகைக்காகவும் காத்து நிற்கிறாள். 'இன்று சரியான டோஸ் விழுந்திருக்கும். ஹர்ஷ் நீ செய்தது தவறுன்னு ஒனக்கு புரியணும். சொந்த அண்ணனைப் பத்தி யாராவது இல்லாததும் பொல்லாததும் சொல்வார்களா?'

இரவு மாமனாரும், கணவரும் வந்தார்களே தவிர, ஹர்ஷாவைக் காணவில்லை. சாதாரணமாக கணவன் தான் முன்னால் வருவான். ஹர்ஷா மாமனாரின் கூட வருவான். மாமனாருக்கு, கணவனுக்கு டிபன் கொடுத்து விட்டு, பிள்ளைகள் வந்ததும் முகம், கை, கால் கழுவி, துணி மாற்றி, அவர்களுக்கு டிபன் கொடுத்து, விளையாட அனுப்பி, அவர்கள் திரும்ப உள்ளே வரும் வரை ஹர்ஷா வரவே இல்லை.

இரவு எல்லோருக்கும் சாப்பாடு போட்டு விட்டு எதிர் வீட்டை எட்டிப் பார்த்த போது, ஹர்ஷாவின் மனைவி சிநேகா, வாசலிலேயே நின்று தங்கள் வீட்டையே பார்ப்பது தெரிந்தது. எதைப் பார்க்கிறாள் இப்படி? ஒரு வேளை என்னைத் தேடுகிறாளா? கணவனை மாட்டி விட்டதற்காக சண்டை போடப் போகிறாளோ? கேட்கட்டும். முகத்தில் அறைந்த மாதிரி பதில் சொல்லி விட வேண்டியதுதான். தானும் சாப்பிட்டதாக பேர் பண்ணி விட்டு, எல்லாவற்றையும் ஒழித்துப் போட்டுவிட்டு நிமிர்ந்த போது சிநேகா எதிரில் நிற்பது தெரிந்தது. மாமனார் தூங்கப் போகும் வரை காத்திருந்து விட்டு மெதுவாக உள்ளே நுழைகிறாள்.

"என்னம்மா சிநேகா, ஹர்ஷாவை என்ன ஆளையே காணோமே?" சகஜமாகக் கேட்கிறாள் சுகுணா. வள்ளென்று விழுகிறாள் சிநேகா.



Mithravinda 007

"பிள்ளையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டறீங்களா?"

"என்னம்மா சொல்றே?"

"என்னம்மாவா? மாமனாரை குல்லா போட்டு, எம் புருஷனுக்கு கெட்ட பேர் வாங்கிக் கொடுத்து, சொத்து முழுவதையும் சுருட்டணும்னு பிளேனா?" அவள் கேட்க, கேட்க எரிச்சல் தாங்கவில்லை. கோபம் சுறு சுறுவென்று வந்தது. இதற்குள் ஹர்ஷாவும் பெண்டாட்டியைத் தேடிக் கொண்டு வந்து விட்டான். சுகுணா எப்போதுமே வார்த்தைகளைக் கொட்டுபவள் அல்ல. எத்தனை விஷயமாக இருந்தாலும் மனதில் போட்டு மூடிக் கொள்ளும் ரகம். தன்னையும் மீறிப் போனால் தான் வார்த்தைகள் வெளிவரும். தன் கொழுந்தன், தன் குடும்பம் என்று எத்தனை செய்திருப்பாள். தான் செய்ய வேண்டிய கடமையைக் கூட மறந்து அதை தன் தலையில் ஏற்றியவள். அவன் மனைவி இன்று பேசுகிறாள்.

"ஏய் இங்க என்ன பண்றே?" ஹர்ஷா கேட்க.

"ஒங்க அழகான அண்ணி கிட்டே நியாயம் கேக்கறேன்."

"ஏய்... வா..." ஹர்ஷா கூப்பிட்டும் பயனில்லை.

"விடுங்க. என்ன நெனச்சுகிட்டு இருக்கா? பெரிய இவ. இவ தான் குடும்பத்தை தாங்கறாளாம். எம் புருஷனுக்கு கெட்ட பெயர் வர மாதிரி எதுக்கு நடந்துக்கணும். அண்ணி அண்ணின்னு உருகினீங்களே அண்ணியோட லட்சணம் பார்த்தீங்களா?" அவன் முகமும் சட்டென்று மாறியது.

"ம்... நீங்க கூட இப்படி பண்ணுவீங்கன்னு நான் எதிர் பார்க்கலை அண்ணி." அவன் குரலில் மித மிஞ்சிய வருத்தம்.

"இதே வார்த்தைகளை நான் சொல்லலாமா?"

"என்ன அண்ணி?... சற்று அதிர்ச்சியோடு அவளைப் பார்க்கிறான்.

Mithravinda 007



"ஆமாம்பா. உங்க அண்ணனை உள்ளாறவே வச்சுகிட்டு அங்க சத்தறான். இங்க சத்தறான்னு ஏன் பொய் சொன்னே?"

"அவன் உள்ளே இருக்கான்னு எனக்குத் தெரியாது அண்ணி."

"தெரியாதுன்னா அண்ணன் வெளியிலே போனது மட்டும் தெரியுமா?"

"இன்னைக்கு போனது தெரியாது. ஆனா தினமும் வெளியே போவான் எங்கிட்டே சொல்லிட்டு தான் போவான்."

"ரொம்ப நல்லாயிருக்குப்பா நீ சொல்றது? அவன் அப்படியே சொன்னாகூட உங்கண்ணன் கெட்டுப்போறதை நீ ஒத்துப்பியா? நான் வேற யாரோவா இருந்தா பரவாயில்லே. ஓம் மாமன் பொண்ணு. நீயும், நானும் நண்பர்களா இருந்தவங்க. ஒனக்கு அண்ணி. என்னிக்காவது நீ உள்ளாற வரும்போது, கொழுந்தன் வந்தா எனக்கு என்னன்னு வெளியே ஊர் சுத்த போயிருக்கேனா?"

"என்ன பேசறா பாத்தீங்களா? இவளை தலைல தூக்கி வச்சு ஆடினீங்களே." ஹர்ஷாவும் சற்று சூடாகத்தான் இருந்தான். இருந்தாலும் பெண்டாட்டியை அடக்குகிறான்.

"இதபாரு பேசாம இரு."

"ஏன் பேசாம இருக்கணும்? இவளை மாதிரி அடுத்தவங்க புருஷனை வசியம் போட வேண்டிய அவசியம் எனக்கு இல்லே."

ஹர்ஷாவுக்கே சற்று கோபம் வந்தது. தன் பெண்டாட்டிக்கு சாதாரணமாகவே வாய் அதிகம். அதுவும் இப்போது இன்னும் கேட்கவே வேண்டாம்.

"சிநேகா போகப் போறியா இல்லியா?" கையை ஓங்கியே விட்டான் இருந்தாலும் சொல்கிறாள்.

"நான் என் புருஷன், என் குழந்தைகள்னு ஒரு பொம்பளை இருக்கணும். அடுத்த ஆம்பளைக்கு பிராக்கெட் போட்டா உள்ளதும் இப்படித்தான் போகும்."

அடுத்த நிமிடம் பட்டென்று சிநேகாவின் கன்னத்தில் அறைவிழுகிறது. ஹர்ஷாவும் திகைத்துப் போய் பார்க்கிறான். சுகுணாவா அறைந்தது? "வெளியே போடி" பத்ர காளியாய் நிற்கிறாள்.

சாதாரணமாக சுகுணா ரொம்ப மென்மையானவள்தான். யாரையும் கடிந்து பேசத் தெரியாது. அடுத்தவர்கள் தவறு செய்தால் கூட, தனக்குள்ளே வைத்திருப்பாளே தவிர, வாய் எழும்பி 'ஏன் இப்படி செய்தாய்' என்று கேட்க மாட்டாள். மாமனார், மாமியார், என்று வயதானவர்கள் மட்டுமல்ல, தன்னை விடக் கீழானவர்களைக் கூட கண்டித்து கேட்டதில்லை. மற்றவர்கள் தவறினைப் பார்த்தாலும், கேட்கும் தைரியம் கூட வந்ததில்லை. வீட்டில் வளர்ப்பு அப்படி வீட்டின் ஒரே பெண் தானே என்று அம்மா செல்லம் கொடுத்து வளர்த்ததில்லை. 'பொட்ட பிள்ளைக்கு வாய் கூடாதுடி' அம்மா எத்தனையோ முறை வாய் மேல் போட்டிருக்கிறாள். சதா சிரித்த முகமும், இனிமையான பேச்சுமாக இருக்கும் அண்ணிக்கு கூடவா இப்படி கோபம் வரும்.? திகைத்துப் போய் நின்று கொண்டிருக்கிறான் ஹர்ஷா.

சிநேகாவின் நிலை தான் சொல்ல முடியாததாக இருந்தது. விருட்டென்று இறங்கி நடந்தாள். அவளுக்கு எப்போதுமே பெரியவர்கள், சின்னவர்கள் என்ற மரியாதை கிடையாது. வீட்டில் தங்கவே எப்போதும் பிடிக்காது. லீவு விட்டால் 'அம்மா வீட்டிற்குப் போகிறேன்' என்று கிளம்பி விடுவாள். இத்தனைக்கும் வேலை பெரிய ஆபீசர் வேலை என்று கிடையாது. ஒரு சாதாரண தனியார் பள்ளியின் ஆசிரியை. மாதம் ஆயிரத்து ஐநூறு சம்பளம் வாங்குபவள். கணவனுக்கு லீவு இருந்தால் அவனையும் அழைத்துக்கொண்டு ஊர் சுற்றல். அப்படி அவன் வரவில்லை என்றால் தனியாகவே சுற்றுவாள். மற்றவர்களை மட்டுமல்ல, காதலித்து கை பிடித்த கணவனையே லட்சியம் செய்யாதவள். இவளைப் போய் எப்படி காதலிச்சு கல்யாணம் கட்டினான். மாமனார் துரைசாமி மாய்ந்து மாய்ந்து



போயிருக்கிறார். அந்த வெள்ளைத் தோலைப் பார்த்து மயங்கிட்டானா? வெள்ளையா இருக்குதே தவிர முகத்திலே ஒரு களை இருக்குமா? ஒரு அழகு, அந்தம் இருக்குதா?'

சுகுணா மாநிறம். இருந்தாலும் முகம் என்ன துறுதுறுன்னு இருக்குது பாரு. எப்படி இப்படிப் போய் ஒரு பெண்கிட்டே மாட்டினான்னு தெரியலையே? அவன் வாழ்க்கையில்லே வீணாப் போச்சு. களைச்சுப் போய் வர புருஷனுக்கு ஒரு வாய் சோறு போட வக்கில்லே. ஒவ்வொண்ணுக்கும் அண்ணி வீட்டுக்கல்ல ஓடறான். சே. இது என்ன பொழப்பு துரைசாமி பொறுமி, பொறுமி, கொட்டி விடுவார்.

"நீ, ஆயிரம் சொல்லு நம்ப பெரிய பையன் அதிர்ஷ்டசாலி தான். என்ன மாதிரி மருமக இப்படி ஒருமருமக இருந்தா போதும் இந்த குடும்பமே தேறிடும். இதெல்லாம் மாமனாரின் கருத்து. ஹர்ஷா பெண்டாட்டி சென்ற பின் ஒரு இரண்டு நிமிடம் அங்கே நின்றவன் பின் திரும்பி வெளியே நடக்க.

"ஒரு நிமிஷம் தம்பி. நான் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். என்னை மன்னிச்சிடுங்க. உன் பெண்டாட்டியை அடிச்சிருக்கக் கூடாது. தப்பு தான். ஆனா எந்த வார்த்தைக்கும் ஒரு எல்லை இருக்கு. எந்த விதமான தப்பான எண்ணத்தோடும் உங்களுக்கு சமைச்சு போடலை நான் சின்ன வயசுலேந்து நீ என்னோட பெஸ்ட் ப்ரண்டு. அது மட்டுமல்ல நான் இந்த குடும்பத்தோடு மூத்த மருமக. எல்லோரும் நல்லா இருந்தாதான் மனசு சந்தோஷமாக இருக்கும். உங்களை விட்டுட்டு நாங்க மட்டும் வகைவகையாக சாப்பிட எப்படி முடியும்? உன்னை என்கூட பிறக்காத சகோதரனாகத்தான் நெனச்சுகிட்டு இருக்கறேன்."

சொல்லும் போதே கண்களில் நீர் ரொம்பி வழிந்தது "ஐயையோ என்ன அண்ணி எதுக்கு அழறீங்க? அவ செய்தது ரைட்டுன்னு நான் சொல்லலியே. அவ வாய்க்கு இன்னிக்கு தான் நல்லா வாங்கியிருக்கா."

Mithravinda 007

...அடிச்சது தப்புதான் மன்னிச்சிடுங்க. உங்க
...ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தேன். ஆனா நீங்க சொன்னது
பொய்யின்னு தெரிஞ்சப்புறம் மனது கஷ்டப்பட்டது. என்
மனசை கண்ட்ரோல் பண்ண முடியலை. நானே அவரைப் பத்தி
தப்பா நெனச்சுக்கிட்டு. மதியம் ஒன்றரை மணியிலிருந்து
மூன்றரை வரை தவிச்சு போயிட்டேன். அவரும் ஒன்றரை
மணிக்கு சாப்பிட வேண்டியவர் மூன்றரை மணிக்கு தா...
சாப்பிட்டார். என்னால தாங்க முடியலே. எப்பவுமே பொய்
சொல்லிகிட்டு இருந்தா அவுங்க வாயிலிருந்து பொய் வந்தா
தப்பா தோணாது. ஆனா யாரை ரொம்ப. ரொம்ப நல்லவன்
அரிச்சந்திரன்னு நம்புறோமே அவுங்க தப்பு பண்ணிட்டா
தாங்காது."

"சாரி அண்ணி என்னால நடந்த குழப்பத்துக்கு நான்தான்
மன்னிப்பு கேட்டிருக்கணும். இப்பவும் சொல்றேன். நான் எந்த
வித பொய்யும் சொல்லலே. தினமும் எங்கிட்டே சொல்லிட்டு
தான்போவான். அப்பாகிட்டே சொல்லிடாதேன்னு சொல்லிட்டு
போவான் பாவம்."

அவன் எங்கேயுமே வெளியே போறதில்லே. சரி சினிமா
கினிமான்னு போறான். போலருக்குன்னு நானும் கண்டுக்கற
தில்லே. சாதாரணமாக மூணுமூன்றறைக்குள்ளே திரும்பி வந்து
விடுவான். சில நான் சீக்கிரம் கூட வந்துவிடுவான். அவனை
தப்பாவே என்னால நினைக்க முடியலே. பாவம் கொஞ்ச நேரம்
ரிலாக்ஸேஷன் வேணும்னு நானும் பெரிசு படுத்தறதில்லே.
இதைப்போய் பெரிசா எடுத்துப்பீங்கன்னும் இத்தனை பீல்
பண்ணுவீங்கன்னும் நான் நெனக்கலை அதான் வருத்தமாக
இருக்கு.

ஒரு நிமிடம் ஏதோ யோசனையில் நின்றவள். அவன்
வார்த்தைகளில் உண்மை. தொனிப்பதைக் கண்டு மௌனமாக
நின்றாள். மெல்ல பெருமூச்சு. வந்தது எதனையும் ஆழ்ந்து
யோசித்திருக்க வேண்டும். அவசரப்பட்டு செய்த முடிவு
விளைவுகளை எங்கோ கொண்டு செலுத்தி விட்டது படுவதை

Mithravinda 007



பட்டுத்தான் தீர வேண்டும் ஓரகத்தியோடு அனாவசியமான சண்டையை தவிர்த்து இருக்கலாம். ஒரு நிமிடம் மறுபடியும் கண்ணை மூடி திறக்கையில் 'நான் வரேன் அண்ணி' கிளம்பி விடுகிறான். மனம் ஊமை அழுகை அழுதது. ஆனால் சில சண்டைகள் தவிர்க்க முடியாதது. நல்ல மனதோடு செய்ததையும் கொச்சைப்படுத்தி. தன்னை அசிங்கப் படுத்துபவளை எப்படி விடுவது? முகத்தில் எறிந்தது போல் பல தடவை பேசியிருக்கிறாள் அந்த பெண். ஆனால் ஒரு தடவை கூட இப்பேற்பட்ட அபவாதத்தை போட்டதில்லை. இருந்தாலும் முற்றிலும் மரியாதையே இல்லாத அந்தப் பெண்ணிடம் இனிமேல் ஒத்துப் போகுமா? என்ன தான் தனித்தனி வீடாக இருந்தாலும் எதிர் எதிரான வீடுகள். முகத்தில் விழிக்காமல் இருக்க முடியுமா? மனம் கிடந்து தவித்தது. மறுபடியும் கண்களில் நீர் கொட்டியது மெதுவாகத்தன் அறைக்குப் போய் அமர்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்த போது

"இப்ப திருப்தியா? உறவை துண்டு. துண்டா வெட்டிட்ட இல்லே?" டிவியில் ஆழ்ந்திருந்த கணவன் சட்டென்று திரும்பி, தன்னிடம் கேட்க, அதிர்ந்து போய் நின்றாள் சுகுணா.



5

தன் கணவனா இப்படி பேசுவது? ஒன்றும் தெரியாத குழந்தை என்று நினைத்ததா இப்படி பேசுகிறது.

"என்ன சொல்றீங்க?"

"இருக்கிறதுதானடி சொல்றேன். நல்லா இருக்கிற குடும்பத்தை நாசப்படுத்திட்டியே. அண்ணன். தம்பின்னு

ஒத்துமையா வாழ்ந்த குடும்பத்தை பிரிச்சிட்டயே. அப்படி என்ன உனக்கு சந்தேகம்? நான் மொத்தமும் நீ இங்கே தனியாகத் தானே இருக்கே. ஒன்னை நான் சந்தேகப்பட்டேனா? சாதாரண விஷயத்தை பெரிசபடுத்தி, அசிங்கப்படுத்தி, கொஞ்ச நேரம் வெளியே போனதை கேள்வி கேட்டு, என்னோட மானத்தையும் வாங்கி..." அவன் சொல்ல, சொல்ல உறைந்து போனாள் சுகுணா. பின் சற்று சுதாரித்துக்கொண்டு.

"நீங்க ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?"

"பேசாம என்னம்மா? எனக்கு எத்தனை ஷாக்கிங்கா இருந்தது. கீழே நடந்த எல்லா கூத்தையும் பார்த்தேன் சே."

"இதுலே என் தப்பு என்ன இருக்கு? உங்க தம்பி பொய் சொன்னது தப்பில்லையா?"

"சரி அப்படியே நான் வெளியே போயிருந்தேன்னா அதுக்காக நீ ஏன் சந்தேகப்படணும். நான் என்னிக்காவது அப்படியா நடந்துகிட்டு இருக்கேன்."

அவன் கேட்க, கேட்க மௌனமாக நின்றாள். இவனிடம் என்ன சொல்வது? எதைச் சொன்னால் புரிந்து கொள்வான். தன் தோழி சொன்னதை தான் சொல்ல முடியுமா? சொன்னால் என்ன செய்வான்? தன்னை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதை எந்த மனிதராலும் ஜீரணிக்க முடியாது. இதுவரை நல்லவனாக, குழந்தை என்று நினைத்தவளுக்கு இது ஒரு பெரிய அடிதான். ஆனால் தான் என்ன செய்ய முடியும்? சந்தர்ப்பம், சூழ்நிலை அல்லவா தன்னை இவ்வாறு நினைக்க வைத்தது. வருத்தத்தோடு அமர்ந்து கொள்கிறாள். இது சுகுணா என்பதைத் தவிர மறந்து போயும் கடினமாகப் பேசாத கணவனிடமிருந்து எப்பேற்பட்ட பேச்சுக்கள். நினைக்க நினைக்க மனது பரிதவித்தது. அவனை என்ன வென்று சமாதானப்படுத்துவது மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

Mithravinda 007



"செல்வி.... ஏய் செல்வி.... என்னடி தூங்கி தூங்கி விழுந்திட்டிருக்கே. எட்டு மணிக்கு வேலைக்கு போக வேணாம்."

குடிசையின் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்த ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்த தன் பெண்ணை எழுப்புகிறாள் லோகு.

"போம்மா" சிணுங்கியவாறே திரும்பி படுத்தவளை.

"ஏண்டி மூதேவி மணி எட்டு அடிக்கப் போகுது எழுந்திரு." மணி எட்டு என்றவுடன் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள் செல்வி.

"ஏம்மா அப்பவே எழுப்பக் கூடாது." இன்று வேலை கிடையாது. லீவு நாட்களில் சற்று லேட்டாக எழுந்திருப்பாள். செல்வி. எப்படியும் எழுந்திருக்க எட்டரை ஆகிவிடும் ஆனால் இன்று காலை அம்மா எட்டு மணிக்கே ஏன் எழுப்பவில்லை என்று சண்டை பிடிக்கிறாள்.

"ஏண்டி இன்னிக்கு லீவு இல்லே. காலைல எழுந்து எண்ணெய் தேச்சு. தலை முழுகணும்னுதான் சீக்கிரம் எழுப்பினேன். எழுந்திரு. ஒரு வாரமா கண் எரிச்சல்னு சொல்லிகிட்டு இருக்கே தலை முழுக வேணாம்."

"போம்மா ஒனக்கு வேற வேலை இல்லை." அம்மாவை சுடு தண்ணி வைத்துக் கொடுக்கச் சொல்லி, குளித்துவிட்டு தலையை லூசாக பின்னிக் கொண்டு. ரோஸ் நிற கலரில் ஹேர்பேண்டு அணிந்து கொண்டு ரோஸ் கலரில் மணிமாலை. காதில் ரோஸ் நிற பிளாஸ்டிக் தோடு. ரோஸ் கலர் சூடிதார். துப்பட்டா என்று ஒரு ரோஜா பூ போல காணப்பட்டாள் செல்வி. பதினெட்டு வயது இளமை வேறு திமிரிக் கொண்டு நிற்க. மாநிறமான அந்த முகம் பளிச்சென்று பல்பு போட்ட வீடாக ஒளிர்ந்து.

சற்று கதுப்பான கன்னங்கள். துறுதுறுவென்ற கண்கள். சற்றே இளஞ்சிவப்பு நிறத்தை உடைய உதடுகள். மழமழ

வென்ற வாரப்பட்ட சாட்டை போன்ற கூந்தல், முகமும் கண்களும், உடலும் இளமைப் பாட்டு பாடின.

"தா... செல்வி... எங்கே கிளம்பிட்டே?" அம்மா சற்று கவலையுடன் மகளின் அலங்காரத்தைப் பார்த்துக் கேட்கிறாள். "கூழ் ஊத்தி வச்சிருக்கேன். குடிக்கறியா?" "ஐயா" மகள் முகம் சுளித்தாள். "என்னடி இது?" ஆச்சரியப்பட்டாள் தாய் "காலைல வெறும் வயத்திலாபோவே. நம்ம டீக்கடை கோவாலு கிட்டே சொல்லி ரெண்டு இட்லி, சட்னி போய் வாங்கிட்டு வா. தின்னுட்டு கிளம்பு"

"ம்ஹூம்..."

"ஏய் என்னடி ஏன் பட்டினி கிடக்கறே? காலைல வெறும் வயத்தோட போகக்கூடாது."

"எனக்கு பசிக்கலே. டீ மட்டும் போதும். வேற ஒண்ணும் வேண்டாம்."

குளிக்கும் போதே துணிகளை துவைத்து, காயப்போட்டு, வீட்டை சீர்படுத்தி, சுத்தம் செய்து விட்டு பெண் ஒரு குதூகலத்தோடு கிளம்பும் போது.

"ஏய் எங்க போறே? எத்தினி மணிக்கு வருவே?" தாய் சற்று கவலையோடு கேட்க, "யம்மா. வேற வேலையை தேடிக்கிட்டு இருக்கேன்னு சொல்லலே. அது கிடைச்சா, இந்த கம்பெனி வேலைக்கு போகமாட்டேன். அது விஷயமாகத்தான் ஒரு சிநேகிதியையும் அழைச்சுகிட்டு போகணும். நல்ல பெரிய இடத்துலே வேலை. மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளம்." சொல்ல, சொல்ல செல்வியின் கண்களிலிருந்து ஆசை பரந்து விரிந்தன. பெண்ணின் முகத்தைப் பார்த்து அம்மாவின் முகத்திலும் நம்பிக்கை தோன்றியது. மாதம் ஆயிரம் ரூபாய் என்றால் பிடித்தமெல்லாம் போக, எண்ணூறாவது வரும். பெண்ணின் பெயரில் ஒரு நகைச்சீட்டு எடுக்கணும். பெண்ணுக்கு ஒரு பட்டாடை கொலுசு எடுக்கணும். வீட்டில் ஒரு கறுப்பு வெள்ளை டிவி கேபிள் கனெக்ஷன் எல்லாம் தரணும். பெண்புறப்பட்டு

Mithravinda 0.07



போனது. ஒரு டீயை சாப்பிட்டு விட்டு ஓடியது. லோகுவிற்கு பெருமூச்சு இழையாக ஓடியது. அவளுக்கு ஒரு பெண், ஒரு பையன், புருஷனுக்கு ஏதோ கம்பெனியில் செக்யூரிட்டி வேலை. ஷிப்ட் முறை. ஒரு நாளைக்கு இத்தனை என்று வாரக்கூலி கொடுத்து விடுவார்கள். காலையில் ஒரு டீ மாலையில் மற்றொன்று . டீக்கெல்லாம் காசை பிடித்துக் கொள்வார்கள். போட்டுக் கொள்ளும் யூனிபார்ம், அதை தேய்க்க சோப் என்று எல்லாமே கம்பெனி செலவு. அதையும் கூலியில் பிடித்துக் கொள்வார்கள். எப்படியும் பிடித்தமெல்லாம் போக மாதத்திற்கு ஒரு ஆயிரத்து ஐநூறு கையில் வரும். அது நாலு ஜீவன்களின் வயிற்றுப்பாட்டிற்கே சரியாகப் போய்விடும். வீட்டில் ஒரு சின்ன ரேடியோ பெட்டி இருக்கிறது. டேபிள் ∴பேன் ஒன்று கடனுக்கு வாங்கியிருக்கிறாள். இச்சம்பளத்தில் சிறுக, சிறுக சேர்த்து கடன் கட்டி வீட்டு நிர்வாகம் பண்ணுவதற்குள் நிமிர்ந்து விடும். ஒரே பையன் லாரி ஓட்டுகிறான் அவனுக்கு வருமானம் அதிகம்தான். ஆனால் பணத்தை என்ன செய்கிறான் என்றே தெரியாது. எப்பவாவது ஒரு நூறு அல்லது இருநூறு என்று தருவான். அவ்வளவுதான்.

அவன் மாதத்தில் ஒரு நாள் வீட்டில் தங்கினாலே அதிகம். பெண் ஏதோ ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் அறநூறு ரூபாய் சம்பாதிக்கிறது. பஸ் பாஸ் அது இது என்று வாங்கி மீதி நானூறு ரூபாய் கொண்டு வந்து தரும். தான் கொண்டு வந்த பணத்திற்கு சுடிதார் செட், மேக் அப் சாமான், மணிமாலை, செருப்பு, குடை என்று வாங்கிவிடும். இந்த ரூபாய் போதாதுதான். ஒரு ஆயிரம் ரூபாய் என்றால் ஒரு ஐநூறு ரூபாயாவது நாம் நிறுத்திக் கொள்ளலாம். செல்வியின் தாய் கணக்கு போட்டாள்.

இப்பவே எத்தினியோ இடத்துலே செல்வியை பொண்ணு கேட்டு வராங்க. போன வாரம் கூட சூளை வேலை செய்யற மோகன் கட்டினா செல்வியைத்தான் கட்டுவேன். என்றானாம். செல்வி வேலை செய்யும் கம்பெனியின் சூபர்வைசருக்கே செல்வியின் மேல் கண்ணாம். கழனி வேலை செய்யும்

மாமனின் மகன் காத்துக் கொண்டு இருக்கிறான். இந்தத் தையிலாவது அவளின் திருமணத்தை முடித்து விட வேண்டும். லோகுவின் அண்ணன் மகன் பெட்ரோல் பங்கில் வேலை. கொள்ளை பணம் சம்பாத்யம் என்கிறார்கள். அன்னனி தினத்துக்கு ஒரு புடவைநகை, தோடு என்று மினுக்குகிறாள். அவர்களுக்கு சொந்தமாக கல்லு வீடு ஒன்று உண்டு. பையன் கிராமத்தில் கொஞ்சம் நிலம் கூட வாங்கப் போவதாக கேள்வி. செல்வி மட்டும் அவனுக்கு வாக்குப் பட்டால் ராசாத்தி மாதிரி இருக்கலாம். டி.வி.எஸ் பிப்டி கூட வைத்திருக்கிறானாம். இந்த குடிசை வீட்டில் இருந்து கஷ்டப்பட வேண்டும் என்று அவளுக்கு என்ன தலை எழுத்து? மாநிறமாக இருந்தாலும் எல்லோரையும் சுண்டி இழுக்கும் அழகு செல்விக்கு. கன்னிக் கோவிலுக்கு ஒருமுறை அழைத்துப் போன போதே எத்தனை பேர் பெண் கேட்டு விட்டனர்.

லோகுவுக்கும் சரி, அவள் கணவன் தணிகைக்கும் சரி, பெண் என்றாலே பெருமை தான். இருந்த போதும் அவள் கணவன் தணிகைக்கு பெண் என்றாலே தனி பாசம் தான் அதிக செல்லம் தான் இது வேண்டும் அது வேண்டும் என்று செல்வி கேட்டால் லோகு சில சமயங்களில் வசை பாடி இருக்கிறாள். "சம்பாதிக்கற தக்கனூண்டு ரூபாய்க்கு எம்புட்டு செலவு வைக்கறே?"

அவள் கணவன் தணிகை அவளை கோபித்துக் கொள்வான்.

"அது குழந்தை. அதுங்கிட்டே போய் என்ன? என்ன கேக்குதோ வாங்கிக் கொடு."

"இப்படி செல்லம் கொடுத்து கெடுக்கறீங்க. நாளைக்கு ஒருத்தன் வீட்டுக்கு போனா?"

"என் கொழந்தையை நல்லா வச்சுக்கறவன் வீட்டிலே கட்டிக் கொடுப்போம்." சொல்லும் போதே முகம் பூரிக்கிறது.

"நேத்து எம் பிரண்டு ஒருத்தன் வருவானே, செல்லையா. அவன் கூட ஷோக்கான வரன் சொன்னான். பையனுக்கு

Mithravinda 007



பேங்கிலே வேலையாம். நம்ப செல்வியை ஒருநாள் கடைவீதிலே பார்த்தானாம். செல்லையா நம்ம பொண்ணு கூட ரோடுலே பேசியிருக்கான். உடனே இவனை விசாரிச்சு இருக்கான். மாமா இந்த பொண்ணை எனக்கு முடிச்சு கொடுங்க மாமான்னு கெஞ்சினானாம். எம் பொண்ணுக்கு என்ன? நல்ல வீட்டிலேந்து நிச்சயமா சம்பந்தம் வரும். என்னோடு வேலை செய்யறானே குமரேசன். இன்னொரு ஷிப்டுக்கு வருவானே. அவன் செல்வியைப் பத்தி எத்தனை ஒசத்தியா சொல்றான் தெரியுமா? செல்வி வேலை செய்யும் கம்பெனி. சூபர்வைஸர் அவனுக்கு மாமன் மகன் தான். செல்வி வேலை அத்தனை கெட்டியாம். ஒரு தப்பும் பண்ணாம அத்தனை சுறுசுறுப்பா வேலை செய்யுமாம். இவங்க செக்ஷன்லே இதுதான் எல்லாமாம். அந்தப் பையன் வேற மாமா முடிச்சுக் கொடுன்னு ஒரே கெஞ்சரானாம்."

கணவன் பெருமை பொங்க, பொங்க சொல்வதை ஒரு ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருப்பாள் லோகு. அவளின் பெற்ற உள்ளம் பூரித்துப் போகும். சந்தோஷத்தில் மனம் ஆனந்தம் பாடும். 'எம் பொண்ணுக்கு பெரிய இடம் தான் வரும்.' செல்வி காது படவே இதை எத்தனையோ முறை சொல்லியிருக்கிறாள். செல்விக்கே ஒரு கனவு மயக்கம் தான். தன் அறிவுக்கும், அழகுக்கும் ஒரு ராஜகுமாரன் தான் வருவான். அன்று தோழியின் வீட்டிற்குச் சென்று அவளை அழைத்துக் கொண்டு பஸ் ஸ்டாப்பில் நிற்கும் போதே கிட்டதட்ட அத்தனை கண்களும் தன்னை மொய்ப்பது போல் தோன்ற கன்னங்கள் சிவந்து போகின்றன. யாரையும் பார்க்காமல் பஸ் வருவதையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் செல்வி.

"ஏய் என்னப்பா இன்னிக்கு டக்கரா ஸ்பெஷல் அலங்காரம்."

"புது. வேலையைத் தேடிப் போறோம். கொஞ்சம் பளிச்சுன்னு போனாதானே. ஆமா மீனாட்சி அக்கா கூட இந்த வேலைக்கு வரேன்னாங்களே. வரலியா?"

"இல்லேடி" என்கிறாள் அவளின் தோழி அமுதா.

"ஏனாம் அவங்க வீட்டுக்காரர் அத்தனை தூரம் போக வேணாம்னு சொல்லிட்டாராம் மேலும் ராவிக்கு ஏழரை மணிக்கு தான் வரமுடியும். வீட்டுக்கு வரச் சொல்ல பத்தாயிடும். அதெல்லாம் வேண்டாங்கறாராம். ஏண்டி நாம போனா நமக்கு வேலை கொடுப்பாங்களா?"

"என்னடி ஒளர்றே? எம் பிரண்டு பஸ்லே கூட வருவான்னு சொல்லியிருந்தேனே அவதான் வரச் சொல்லியிருக்கா. அவ சேத்து விடறேன்னு சொன்னாளே."

கப, கபவென்று கூட்டத்தில் இடித்து பிடித்து ஏறி ஒரு இடத்தில் அமர்ந்து கெக்கே, பிக்கே என்று ஏதேதோ பேசி சிரித்து கடையின் வாசலில் போய் இறங்கினார்கள்.

"அப்பா... எத்தனாம் பெரிய கடை மூணு மாடியாம் சொல்லிக் கொண்டே வாசல் வரை வந்தவர்கள் தயங்கி நின்றார்கள். அப்போது தான் அந்த எல்கம் வர, அதிலிருந்து கதாநாயகன் போன்று இறங்கி வந்தான் சந்திரன், கருணாவின் கணவன். செல்விக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது எப்பேற்பட்ட அழகு. கண்டிவிட்டால் ரத்தம் பாய்வது கூடத் தெரியும் பளிங்கு முகம். வெகு அழகான முகம். உடல் தான் சற்று குண்டான ஹீரோவை நினைவுப்படுத்தியது. கண்கள் அவன் முகத்திலேயே இருக்க தயங்கி, தயங்கி நின்றாள்.

"வாங்க. என்னம்மா வேணும்? துணி எல்லாம் பாருங்க" சந்திரன் தான் சொல்கிறான். "ரெடிமேடு வேணும்னா மாடிக்குப் போங்க." சொல்லியும் தயங்கியபடியே நிற்கின்றனர்.

"என்னம்மா... வாங்க..நான் அழைச்சுகிட்டு போறேன்." உள்ளே அவர்களைக் கூப்பிட "சார் நாங்க அதுக்கு வரல இங்கே வேலை காலியிருக்குன்னு..." பாதி விழுங்கியவாறே செல்வி கூற.

Mithravinda 007



"ஓ...வேலைக்கு வந்திருக்கீங்களா? இங்கே வேலை ஒண்ணும் காலி இல்லையே." அவன் சொல்லி முடிப்பதற்குள் ஓடி, ஓடி வருகிறாள் அங்கே வேலை செய்யும் ஜெயா.

"என்னம்மா ஜெயா?"

"சார் நம்ப ரெடிமேட் செக்ஷனுக்கு ஆள் வேணுமின்னு அப்பாதான் சொல்லிகிட்டிருந்தாங்க. அதான் இவங்க ரெண்டு பேரையும் வரச்சொன்னேன்."

"சரி அப்பாகிட்டே அழைச்சுகிட்டுபோ." சொல்லிவிட்டு சந்திரன் லிப்டில் ஏறி மேலே சென்றுவிட, ஒரு மலைப்போடு பார்க்கிறாள் செல்வி.

"என்ன கடைபளபளன்னு. மூணு மாடி என்ன அழகா ஜம்முன்னு இருக்காரு இந்த ஆளு." அடுத்த அரை மணி நேரத்திற்குள் பெரியவரைப் பார்த்து விட்டு ரெடிமேட் பிரிவிற்குள் நுழையும் போது அங்கே "அமர்ந்திருந்த சந்திரனைப் பார்த்து மறுபடியும் மெய் மறந்து போனாள்.

"சார் அப்பா இங்கே இரண்டு பேரையும், இந்த பிரிவிலேயே இருக்கச் சொன்னாங்க. ஒரு வாரம் பாக்கலாம்னு சொன்னாங்க சார்." சரி என்று என்று தலை ஆட்டியவன், இரண்டு பேரையும் எதிர், எதிராக நிற்கும்படி சொல்லவும், எதேச்சையாக செல்வியைப் பார்க்கிறான். அவளுடைய கண்கள் தன் முகத்திலேயே இருப்பதைப் பார்த்து ஒரு நிமிடம் ஆச்சரியப்பட்டான். மனம் முழுவதும் பரவசப்பட்டது செல்விக்கு ஸ்ரீ ரங்க நாதரை தரிசித்த ஆண்டாள் நிலையில் இருந்தாள். கண்ணனைப் பார்த்த இராதையைப்போல இருந்தாள். ஸ்ரீ வேங்கடேஸ்வரரைத் தரிசித்த பத்மாவதி தாயார் போல் ஆனாள். தன்னுடைய பாக்கியம் தான் இவனிடம் தன்னை கொண்டு சேர்த்திருக்கின்றது. எத்தனை பணக்காரன் எத்தனை கம்பீரமாக இருக்கிறான். ஆனாலும் எத்தனை பெரு தன்மையாக நடந்து கொள்கிறான். ஒரு ஆணவம் இல்லை ஒ அதிகாரம் இல்லை.

தான் முன்பு இருந்த எக்ஸ்போர்ட் கம்பெனியைப் பற்றி நினைத்துப் பார்க்கிறாள். சூபர்வைசர் என்பவன் நன்றாக வழிவான் இவளிடம் துணி கொடுக்கும் சாக்கில் கையைக் கிள்ளி இருக்கிறான். க்யூவில் போகும் போது பின்னாடியே வந்து முதுகில் தேய்ப்பான் கை. கள்ளம் எது கிடைக்கிறதோ, அங்கே கிள்ளி தொட்டுப் பார்க்கும் துடிப்பு அவனிடம் உண்டு. அவனைப் பார்த்தாலே எரியும் செல்விக்கு

"கூட்டல போறவள். அக்கா தங்கச்சியோட பொறக்கலையா?" சபிப்பாள். 'ஒருநாள் வீட்டுக்கு வான்னு கூப்பிட்டு கொதிக்கற தண்ணியை தலைல கொட்டணும்.' கறுவிக் கொள்வாள். முதல் நாள் நுழையும் போதே இரை தின்னும் கழுகு போல் பார்த்தவன் அந்த சூபர்வைசர். அவனுக்கு மேல் மேனேஜர் இருக்கிறான். அவனுக்கு மூடு வந்துவிட்டால் போதும் வாயில் வரக்கூடாத வார்த்தை எல்லாம் வரும். ஜோக் அடிக்கறேன் பேர்வழி என்று அசிங்கமாக பேசுவான். அவன் சொல்வதற்கெல்லாம் சிரிக்க வேண்டும். அவன் கை போகும் இடங்களெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும் இல்லை என்றால் கோபம் வந்துவிடும். வந்து நின்றாலே சிடு சிடுவென்று கடிந்து தள்ளி விடுவான். செல்வியின் மேல் வரம்பு மீற கை வைத்தற்கு. அவனை திட்டியதற்கு பலன் நேற்று வேலை வரை சிடு சிடுப்பு தான். எப்படி செய்தாலும் சரி இல்லை என்று திட்டுவான். ஐம்பது பேருக்கு மேல் வேலை செய்யும் கம்பெனியில் தினமும் திட்டு வாங்கும் அவலம் யாருக்காவது உண்டா? தினமும் இரகசியமாக கண்ணீர் விட்டிருக்கிறாள். இரவில் படுக்கையில் குமுறி, குமுறி அழுது தீர்த்திருக்கிறாள். அம்மாவிடம் லேசாக தன் கஷ்டத்தை சொன்ன போது "பேசாம நின்னுடு. இன்னா வேலை. அந்த பொறம்போக்கு இருக்கிற கம்பெனிக்கெல்லாம் போக வேண்டாம். என்னோட கழனிக்கு வா. ஒரு நாளைக்கு முப்பது ருபா சம்பளம். சாப்பாடு எல்லாம் தராங்க." என்றாள்.

பத்தாவது முடித்தவுடன் டெய்லரிங் படித்து எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலைக்குச் சென்றாள். செல்வி, கிட்டதட்ட

Mithravinda 007



மூன்று கம்பெனிகளை மாற்றியாகி விட்டது. சம்பளம் குறைச்சலோ என்னவோ. இதிலிருக்கும் மரியாதை கழனி வேலையில் உண்டா? மனம் விட்டு பேச சிநேகிதிகள் உண்டு. ஒன்றாக போட்டு உடுத்திக் கொண்டு, சினிமாவுக்குப் போய் ஒரே கலர் சூடிதார் வாங்கி, ஒரே மாதிரி போட்டுக் கொண்டு கும்பலாகப் போய் கிசுகிசுத்து, சிரித்து, மகிழ்ந்து நெருக்கத்தை காண்பித்து வளைய, வளைய வரும் சுகம், கழனி வேலையில் கிடைக்குமா என்ன?

"போம்மா எல்லார் கிட்டேயும் தான் அப்படி நடந்துக்கறான். அதுக்காக யாராவது வேலையை விட்டா நின்னுட்டாங்க. நான் பாத்துக்கறேன்." மிதப்பாக பதில் சொன்னாள் செல்வி, நல்ல வேளை ஒரு தோழியிடம் தன் கஷ்டத்தை சொல்ல, "எங்க கம்பெனியில் ஆள் எடுக்கறாங்கப்பா. நான் சேத்து விடறேன். சம்பளம் ஆயிரம் ருபாய்" என்றும் சொன்னாள் அதன் பலன்தான் இங்கே வந்து நிற்பது. மறுபடியும் காரணமில்லாமல் சிரிப்பு வந்தது. தான் தன் தோழிகளோடு பார்த்த சமீபத்திய படம் ஒன்று காரணமில்லாமல் ஞாபகத்திற்கு வந்தது. தன்னை அந்த கதாநாயகியாக பாவித்து. சந்திரனை கதாநாயகனாக பாவித்து. மனது மகிழ்ந்து போனது. வந்ததிலிருந்து அவள் நினைவு தன்னை ஏன் இப்படி போட்டு வாட்டுகிறது. அதுவும் அவன் தலைமையில் இருக்கும் ரெடிமேட் கடைக்கே தன்னை நியமித்து இன்னும் ரெட்டிப்பு சந்தோஷத்தைக் கொடுத்தது. முதல் நாள் என்பதால் வேலை செய்வதை கவனித்துக் கொள்ள சொன்னான். கூடமாட துணி எடுத்துக் கொடுத்தாலும், கண்கள் முழுவதும் சந்திரன் மேல் இருந்தன. இவன் எனக்கு மட்டும் தான். தான் எத்தனையோ பேரிடம் பேசி பழகியிருக்கிறோம். பார்த்திருக்கிறோம். யாரிடமும் இல்லாத பிடிப்பு இவனிடத்தில் எப்படி வந்தது? பார்த்தவுடனே மனதிற்குள் சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொண்டான். அவள் யதேச்சையாக தன்னைப் பார்த்தாலே கன்னங்கள் சிவந்து போகிறது. கண்கள் தாழ்ந்து போகிறது.

"ஏய் என்ன நீ போற ரூட்டே சரியில்லே. பாத்தும்மா. அவருக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சு." தன்னை சேர்த்து விட்ட தோழி சொல்ல, அதிர்ந்து போகிறாள் செல்வி. லேசாக கண்களில் வேறு நீர் நிரம்பி விட்டது. கொஞ்ச நேரம் பார்த்தவுடனே எத்தனையோ வருடங்கள் பார்த்த உணர்வு, வாழ்ந்த உணர்வு ஏற்பட்டதெல்லாம் பொய்யா? எதேச்சையாக திரும்பியவள் தனக்கு வெகு அருகில் நின்ற சந்திரன் மேல் சட்டென்று மோதினாள் திகைத்தாள்.

## 6

"ஏய் என்னடி சொக்குப் பொடி போட்டே பார்ட்டியும் ஒன்னையே பாக்குது."

"பேசாம இருடி." அடக்கியவள் சந்திரனைப் பார்த்து "மன்னிச்சிடுங்க தெரியாம."

"தப்புக்கு நான்தான் மன்னிப்பு கேக்கனும் நல்லதுக்கு கூடவா?" அவனின் சொற்களில் ஒருவித வாஞ்சை தெரிந்தது. அவனுக்கு முன்னால் மனம் சின்னா பின்னா பட்டு போனது. 'அவன் திருமணமானவன்னு தோழி சொன்னாளே.'

"வேலை எல்லாம் தெரிஞ்சுதா?" என்றவன், எந்த அளவு எப்படி எடுத்து தர வேண்டும் என்று எல்லாம் சொல்லிக் கொடுத்தான். எதேச்சையாக கைகள் இடித்தன. உடல் பட்டது. ஆனால் அவனின் முகத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. செல்வியின் நிலை தான் சொல்ல முடியாததாக இருந்தது. அவனின் திருமணம் பற்றி தெரியவில்லை என்றால். இந்த ஒவ்வொரு செயலையும் எத்தனை ரசித்திருப்பாள்.

Mithravinda 007



ஆனால் கடவுளுக்கு தன்மேல் என்ன கோபம்? ஏன் எந்த ஒரு சந்தோஷத்தையும் அனுபவிக்க முடியாமல் ஏதாவது ஒரு தடை நெஞ்சில் முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தது. அவனின் திருமணச் செய்தி மதியம் சாப்பாட்டிற்கு விட்ட போதும் இதே நினைப்பு தான்.

"ஏம்மா நீங்க எல்லாம் சாப்பாடு கொண்டு வந்தீங்களா?" அவள் 'இல்லை' என்று தலை அசைக்க.

"இல்லீங்க. வேலை கிடைக்குமோ. கிடைக்காதோன்னு நிச்சயமா தெரியலீங்க. அதனால் தான்..." கூட வந்தவள் முணுமுணுத்தாள்.

"எதிர்லே தான் ஓட்டல் இருக்கு சாப்பாடு எல்லாம் நல்லா இருக்கு. போய் சாப்பிடுங்க. " ஒரு ஐம்பது ரூபாய் தாளை செல்வியின் கையில் கொடுக்க.

கொஞ்ச நேரம் முன் வரை மலர்ந்து சிரித்து சந்தோஷமாக இருந்த முகம் லேசாகக் கூம்பிப் போய் "வேண்டாங்க." என்கிறாள்.

"இங்கே வேலை செய்யறவங்க யாரும் பட்டினி கெடக்கக் கூடாது. அவன் புன் சிரிப்பு சிரிக்க தோழி அமுதா சட்டென்று கை நீட்டி வாங்கிக்கொண்டாள்.

"ஏய் வாடி" அவளை இழுத்துக் கொண்டு போனாள். செல்விக்கு போகவே பிடிக்கவில்லை.

"ஏய் ஒழுங்கா சாப்பிடு ஐம்பது ரூபாய் கொடுத்திருக்காங்க இல்லே."

"வேணாம்டி நான் டிபன் ஏதானும் சாப்பிட்டுக்கறேன். போதும்." இருவருக்கும் ஒரு மசால் தோசையும், வடை, காபி, ஆர்டர் செய்து விட்டு "சாப்பிடுடி" என்கிறாள் அமுதா.

"த்சு.." என்று சொல்லவும். "இத பாரு சாப்பிடு அப்புறம் நாம பேசலாம்." முதலில் ஒரு துண்டு கூட வாயின் போக மறுத்தது.

ஒரு விள்ளல் விழுங்கியதும், காலையில் இருந்து ஒன்றும் சாப்பிடாதது எல்லாம் சேர்ந்து வயிற்றைக் கிள்ள, அவளை அறியாமல் தோசை, வடை, காப்பி எல்லாமே உள்ளே போனது. கையைக் கழுவிக் கொள்ளும்போது, தன்னை அறியாமல் அழுகை வந்தது. கண்கள் கலங்கி, நீர் நிரம்பிப் போக,

"ஏய், என்னடி அழறே? என்றாள் தோழி. செல்வி மௌனமாக கடையை நோக்கி நடந்து கொண்டே கேட்க, மெதுவாகப் பேசுகிறாள். செல்வியின் தோழி அமுதா.

"இது என்ன பயித்தியம் மாதிரி நடந்துக்கறே? காலையில் தான் மொதலாளியப் பார்த்தே. மத்தியானம் கல்யாணம் ஆயிடுச்சுன்னு சீதா சொன்னதிலிருந்தே அளுதுகிட்டு இருக்கே. இன்னாடி உனக்கு கண்டதும் காதலா?"

"அப்படித்தான் வச்சுக்கோயேன்."

"இதென்ன வம்பா போயிடுச்சு. அந்த ஆளை இங்க வச்சு தானே பாத்தே? அதுக்குள்ளே எப்படி லவ்ஸ் வந்திடும்? இத பாரு பெரிய கடை, கார், பங்களா இருக்குது. ஆளு வேற ஷோக்கா இருக்கான்னு அலையறே. இது லவ்வுமில்லே, ஒண்ணுமில்லே."

"ஏதாவது உளறாதே. அவுங்க எப்படி இருந்தாலும் லவ் வரும்."

"அப்படியா? அப்ப கல்யாணம் ஆனா என்ன? நீ பாட்டுக்கு லவ் பண்ண வேண்டியது தானே. அப்படி பார்த்தவுடன் இவன் தான் என்னவன்னு தோணிச்சுன்னா லவ் பண்ண வேண்டியது தானே. என் அழுவுறே?"

"ஆமாமடி அவருக்கு கல்யாணம் நடந்திருக்காதுன்னு நெனச்சேன். அது ஏமாத்தமா இருந்தது. அதான் அளுதேன். நீ சொல்றதும் சரிதான். அவுங்க எப்படி இருந்தா என்ன? அதனால் இனிமேல் அழமாட்டேன்."

"அப்படி சொல்லு. உன் காதல் ஜெயிச்சிடும். உறுதியா இரு"

Mithravinda 007



தோழியோடு மறுபடியும் உள்ளே நுழைய, இவளை சேர்த்து விட்ட ஜெயா நிற்கிறாள்.

"ஏண்டி நீ சாப்பிட்டயா?"

"ம்..." என்றவள், "ஏய் செல்வி உன் கிட்டே ஒண்ணு கேக்கணும். அங்க ஒன்னோட வேலையிலே, இருக்கிற ஆளுங்க மேலே கை போடறாங்கன்னு அழுதியேன்னு உன்னை சேர்த்து விட்டேன். இப்ப உன் நடத்தையே இப்படி இருக்குதே. நீ ஏன் இப்படி நடந்தக்கறே?"

"அதுவா லவ்ஸ்ப்பா." செல்வியின் தோழி அமுதா கிண்டலடிக்கிறாள்.

"லவ்வா... என்னடி இது பார்த்து ஒரு இரண்டு மணி நேரம் இருக்குமா? அதுக்குள்ளே லவ் வந்திடுமா?"

"ஆமாம்டீ நீ மொதலாளிக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னு சொன்னாலும் சொன்னே. இந்த அம்மா பிழியப் பிழிய அழுது-" அமுதா கேலி செய்ய, "த... செல்வி, என்னடி கருமம் இது? அந்தாளு என்ன நம்பளை மாதிரி குடிசையில் இருக்கிறவன்னு நெனச்சியா? பெரிய பணக்காரன். அது மட்டுமல்ல. பெண்டாட்டி இரண்டு குழந்தைகள் வேறு இருக்கு."

சாதாரணமாக இருந்தால் செல்வி உடைந்து போயிருப்பாளோ என்னவோ. இப்பொழுது தான் தோழி சொல்லியிருக்கிறாளே. 'எப்படி இருந்தாலும் லவ் பண்ணு.' "இருக்கட்டும்." என்றாள்.

"என்னடி உளர்றே. அவுங்க யாருன்னு நெனச்சே? இந்த ஊரிலேயே பெரிய பணக்காரங்க. அவுங்க பெண்டாட்டி அத்தனை திறமைசாலி. நீ லவ் பண்ணினாலும் அவர் திரும்ப பார்ப்பாருன்னு நெனச்சியா?"

"லவ் இல்லாமையா செல்வி கைல ஐம்பது ரூபா கொடுத்தார். செல்வி வந்ததிலிருந்து அவரையே தான் பாத்துகிட்டு இருந்தது. அவர் மட்டும் பாக்காமையா இருந்தார். செல்வியையே எத்தினி தடவை பார்த்தாரு. நான் நோட்

பண்ணிகிட்டு இருந்தேனே." இன்னொருத்தி பேச, அமுதாவைப் பேச விடாமல் அடக்கினாள் ஜெயா.

"உளராதே. அதுவே ரெண்டும் கெட்டான். அசட்டுத்தனமா எதையும் சொல்லி விசிறி விடாதே. அப்புறம் வம்புலே மாட்டிக்காதே. த. பாரு செல்வி ஒன்னைய விட ஐந்து வயசு பெரியவ நான். ஏதோ வந்தோமா, பொழப்பைபாத்தோமான்னு இருக்கப் பாரு. இந்த சினிமாவுல எல்லாம் வருதே. பார்த்தவுடனே காதல்ங்கறது எல்லாம் பொய்யிடி. தப்பானதை செய்தியானா நீயே அப்புறம் சந்தோசமா இருக்க முடியாம போயிடும்."

அதற்குள் மற்ற கடைப் பையன்கள் வர பேச்சு நின்றது.

"என்ன வேலை எல்லாம் பிடிச்சிருக்குதா?" கூடவே வேலை செய்யும் பழனி என்ற இன்னொரு பையன் கேட்க, செல்வி மௌனமாகத் தலையை ஆட்டுகிறாள். "இப்ப எல்லாம் ஓரளவு தான் கூட்டம் இருக்கு. அடுத்த மாசத்திலிருந்து வேலை நெட்டி கழண்டும்." இது சேகர் என்ற இன்னொரு பையன். இதற்குள் கீழே புடவை பிரிவில் வேலை செய்யும் பெண்கள், ஆண்கள் பிரிவில் வேலை செய்யும் ஆண்கள் என்று ஒவ்வொருவராக வந்து அவர்களை பார்த்து விட்டு போன போது சற்று மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.

"ஒன்னைப்பாத்தாலே பொறாமையாக இருக்குப்பா. எல்லா ஆம்பளைப் பசங்களும் உன்னைத்தான் டாவு அடிக்கறான்." அமுதா கிசு கிசுத்தாள்.

தோழி சொல்ல, சொல்ல மகிழ்ச்சியாகக் கூட இருந்தது. அன்று வேலை முடிந்து போகும் வரையில் சந்திரனைக் காணவில்லை.

"ஏய் இதான் சின்ன மொதலாளி." ஜெயா காண்பிக்க, எதற்காகவோ மேலே வந்தவன், புதிதாக வேலைக்கு சேர்ந்தவர்களைப் பார்த்து விட்டு, "ஏம்மா கொஞ்சம் நல்லா டிரெய்னிங் கொடுத்திடு" என்று சொல்லி விட்டு கிளம்பிப்

Mithravinda 007



போனான். அவனைப் பார்த்ததும் செல்வியின் மனதில் எந்தவித மாற்றமுமில்லை. சாதாரணமாக இருந்தாள்.

"ஏங்கா அண்ணன் அத்தனை செவப்பா, ஹீரோ மாதிரி இருக்காரு. இவர் சாதாரணமாகத்தான் இருக்காரு. விசேஷமா ஒண்ணுமில்லையே."

"அண்ணன் அவுங்க அம்மா போல. இவரு அப்பா மாதிரி." இது ஜெயா.

"ஆமா பெரிய முதலாளி சாயல் நெறையவே வருது" செல்வி முணுமுணுக்கிறாள் ரொம்ப நாள் பழகிய குடும்பத்தைப் பற்றி பேசுவது போல் பேசிக் கொண்டார்கள். அன்று செல்விக்கு உறக்கமும் வர மறுத்தது. எங்கே பார்த்தாலும் சந்திரனே தெரிந்தான். அருகில் வந்து கட்டி அணைத்தான். இந்தா என்று கை கொள்ளாத பணத்தை வேறு வீசுகிறான். காரில் ஏற்றிப் போய் அவளுக்கு பிடித்த சினிமா பாடலை ஸ்டீரியோவில் வேறு போட்டு அழகாக சிரிக்கிறான்.

அவளுக்கு தலை தீபாவளிக்கு பட்டுப் புடவை வாங்கித் தருகிறான். எத்தனை வருடங்கள் ஆனதோ தெரியவில்லை. குழந்தையை பள்ளியில் விட்டு வருகிறான். வந்த பிள்ளை டி.வியில் வரும் விளம்பரங்களில் வரும் குழந்தை போல 'அம்மா நான்தான் பஸ்ட்' என்கிறது. இப்படியாக கலர் கனவுகள்.

"ஏண்டி மணி ஆறரை ஆவுது. எழுந்திருடீ. புது வேலை. ஏழு மணிக்கு டிரெய்னை பிடிக்கணும்னு சொல்லலே."

அம்மா எழுப்ப, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள். அவசரம் அவசரமாக குளித்து, அந்த ப்ளூ சுடிதார் போட்டுக் கொண்டு, அதற்கு மேட்சாக எல்லாவற்றையும் கட்டிக் கொண்டு, தலையில் ஒரு நீல நிற ஹேர் பேண்டையும் கட்டிக் கொண்டு, ஸ்டேஷனுக்கு வரும் போதே சிக்னல் விழுந்து விட்டது. ஓடிச் சென்று ஏறினாள்.

எத்தனையோ பேரின் கண்கள் அவள் மேல் மேயவும் மனது பெருமிதத்தில் திளைத்தது. நீலநிற ஸ்டிக்கர் பொட்டு

வேறு வைத்திருக்கிறாள். உள்ளே நுழையும் போதே மணி எட்டேகால் ஆகிவிட்டது. நல்லவேளை எட்டரை மணிக்கு வந்தால் போதுமாம். ஆனால் ஒரு ஈ காக்கையைக் காணோம். அப்போது தான் ஒவ்வொன்றாக திறந்து சுத்தப்படுத்த மாடியிலுள் உள்ள ரெமேட் கடைக்குள் சென்றாள். இங்கும் இன்னும் யாரும் வரவில்லை. தன் சாப்பாட்டு கூடையை ஒரு ஓரமாக வைத்து விட்டு தான் நிற்க வேண்டிய இடத்தில் போய் நிற்க. "வெரிகுட் பொறுப்பு இருக்கறவங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும்." சந்திரன் தான் உள்ளே அலமாரிகளை சாவி போட்டு திறந்து கொண்டே பேச, ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள்.

"நீங்களா சார்? பயந்துட்டேன்."

"ஏம்மா பயப்படும்படியாகவா நான் இருக்கேன்?"

"இல்லீங்க சார். வீட்டிலே பொண்டாட்டி, குழந்தைகள்..."

"இருக்கட்டுமே. இருந்தா பேசக்கூடாதா?"

"அதுக்கில்லைங்க... சார் வந்து..."

"த பாரு ஒருத்தரை பார்த்தா ஏன் பிடிக்குதுன்னு நமக்கே தெரியாது. எனக்கு என்னவோ உன்னை ரொம்ப பிடிச்சு போச்சு என்ன காரணம்னு தெரியலே அதான் சீக்கிரமே வந்தேன். நீயும் சீக்கிரம் வருவேன்னு தோணிச்சு." அவன் சொல்ல, சொல்ல அவன் கண்களையே பார்க்கிறாள். அந்தக் கண்களில் காதலைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. இத்தனை குறைந்த சமயத்தில் யாருக்காவது காதல் வருமா? தெரியவில்லை. மெல்லிய பெருமூச்சு வந்தது.

'கண்ணன் ருக்மணியின் கணவன். அவனை ராதை வரிக்கவில்லையா? 'ஏதோ ஒரு நாவலில் படித்த ஞாபகம். மெல்ல முகம் மலர்கிறது.' தனக்கு இந்த மாதிரி இராஜகுமாரன் கிடைக்கும் போது வேறு என்ன வேண்டும்.'

"ஆமா இது என்ன இத்தனை நீலமா கட்டியிருக்கே?"

"உங்களுக்கு பிடிக்கலையா?"

Mithravinda 007



"ரொம்ப பிடிச்சதுனால தான் கேக்கறேன். தலைக்கு பூவெல்லாம் வச்சுக்க மாட்டியா? மஞ்சள் ரோஸ் சைட்லே வச்சா டாப்பா இருக்கும்."

"இல்லே.. பூ வாங்கணுமேன்னு தான் ஆனா அதுக்குள்ளே டிரெய்ன் வந்திடுச்சு." அவள் தயங்கி, தயங்கி சொல்கிறாள். "ஆனால் என்ன பூ தான் வச்சிருக்கியே."

"எங்கே" தலையை தொட்டுப் பார்க்கிறாள்.

"ஒன்னைப் பாத்தா பூவைப் பார்க்கற மாதிரி இருக்கே." கொஞ்ச நேரம் பேசி இருப்பானோ என்னவோ, சட்டென்று கடிகாரத்தைப் பார்த்தான்.

"சரி... அப்புறம் பார்க்கறேன் ஒன்னை." மற்றவர்கள் வருமுன் இறங்கி மறைந்தான்.

ஆயிற்று செல்வி வந்து ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது யாருக்கும் தெரியாமல் எப்போதாவது சந்திப்பார்கள். மற்றபடி மாலையிலோ இல்லை மதியமோ சாப்பாட்டு நேரத்தில், யாருக்கும் தெரியாமல், அவளை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்கு போவான். பிரத்யேகமான அறையில் தான் பார்த்த சினிமா, டிவி நிகழ்ச்சிகளை அவன் அக்கு வேறு ஆணி வேறாக அலச, அவள் மலைப்போடு கேட்டுக் கொண்டு இருப்பாள். தான் ரயிலில் வந்த போது நடந்தது. தன் பழைய கம்பெனியில் இருந்த போது நடந்த நகைச்சுவை நிகழ்ச்சிகள், தன் தோழிகளின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் இவற்றை சொல்லி அவனை சிரிக்க வைப்பாள்.

யாரிடமும் மூச்சு விடக்கூடாது என்ற உத்தரவு வேறு. அன்பு என்பது மழையைப் போல. கொடுக்க ஆரம்பித்தால், மழை எப்படி பள்ளம் மேடு எதுவும் தெரியாமல் நதி, சாக்கடை என்று எவற்றையும் பார்க்காமல் கொட்டி கொடுத்து தீர்க்கிறதோ அதே போல் தான் அன்பும், கொடுக்க ஆரம்பித்த பின் அவனின் குறைபாடுகள் கூட..கண்ணுக்குத் தெரிவதில்லை. அவள்

மனமும், கண்ணும் முகமும் பரவசத்தில் இருக்க, இருக்கும் அழகு இன்னும் கூடுதலானது.

தினமும் வாட்டமான சாப்பாடு வேறு. மாநிறம் போய் சற்று நிகு நிகு என்று நிறம் தந்தது. அவனோடு காரில் போகும் போது உலகத்தையே மறந்து விடுவாள் செல்வி. இப்போதெல்லாம் இவள் உள்ளே நுழையும் போதே எல்லோருடைய பார்வையும் இவள் மேல் தான். இரண்டாவது மகன் ஹர்ஷா கூட இவளை இரண்டொரு முறை வெறித்திருக்கிறான்.

"யப்பா நான் உங்களுக்கு அண்ணி." மனதிற்குள் சொல்லிக் கொள்வாள் செல்வி.

"ஆமா என்ன இது நாலு சுடிதாரையே மாத்தி, மாத்தி போட்டுட்டு இருக்கிறே. வேறு துணி இல்லையா?"

"எம்பா நான் என்ன உங்களை மாதிரி என்ன பெரிய பணக்காரங்களா?" அவள் குரலில் ஒரு குழைவு இருந்தது.

அடுத்த நாளே தன் ஜவுளிக் கடையில் இருந்த ரொம்ப அழகான ஒரு சுடிதார். அழுத்தமான வயலட் நிறத்தில் சின்ன, சின்ன ரோஸ் பூக்கள் போட்ட சுடிதார். மேல் பாகம் முழுவதும் அடர்ந்த சின்ன, சின்ன பூக்கள். கையின் முடிவிலும், காலின் ஓரங்களிலும் அழகான எம்பிராய்டரி பூக்கள். பார்க்க, பார்க்க அற்புதமாக இருந்தது. கழுத்து, கை எல்லாவற்றிலும் குட்டி, குட்டி மணி வைத்து ரொம்பவே நன்றாக இருந்தது. பிறகு ஆழ்ந்த பச்சை நிறத்தில் சாம்பல் நிற பெரிய, பெரிய ரோஜாக்கள் போட்ட ஷிபான் சேலையையும் எடுத்துக் கொடுத்தான்.

செல்வி உருகியே விட்டாள். எத்தனை அன்பு. எத்தனை வாஞ்சை. கல்யாணம் கட்டினால் கூட கணவன் என்கிறவன் இத்தனை செய்வானா? சந்தேகம் தான். அடுத்த நாள் தன் பிறந்த தினம் என்று தெரிந்து தான் வாங்கித் தந்தான். வீட்டிற்குள் சென்ற போதே அம்மா சந்தேகப் பட்டுக் கொண்டு கேட்டாள்.

"வேலை செய்யற இடத்துலே கொடுத்தாங்கம்மா? நாளைக்கு பொறந்த நாள் இல்லே. அதுக்கு தான்."

Mithravinda 007



"எப்படிடீ? சம்பளத்துலே பிடிச்சப்பாங்களா?" அம்மா சந்தேகப்பட...

"இல்லேம்மா எல்லோருக்கும் கொடுக்கறாங்கம்மா."

அம்மாவிற்கு யோசனையாக இருந்தது. பெண் முன்னே போல் இல்லை. இந்த ஆறு மாதமாக தனக்குள் சிரிப்பதும், மலர்வதும், ஆனந்தப்படுவதும் உடலில் வேறு ஒரு புது மெருகு ஏறி இருக்கிறது. கூடவே போகும் அவளின் தோழியை விசாரிக்க வேண்டும்.

அம்மாவின் முகத்தில் கவலை வேறு தெரிகிறது. காலையில் எழுந்து, குளித்து, வயலட் சுடிதார் அணிந்து, தலையைப் பார்த்து, பார்த்து வாரிக் கொண்டு மேட்சாக தோடு, ஸ்டிக்கர் பொட்டு, கழுத்து மணி எல்லாம் அணிந்து, படு பந்தாவாகக் கிளம்பும் போதே, அம்மா சாப்பாட்டு டிபன் பாக்ஸை கட்டிக் கொடுத்தாள்.

"இந்தாடீ"

"வேண்டாம்மா. அவுங்களே இன்னிக்கு விருந்து வைப்பாங்க. அந்த முதலாளி அப்படித்தான். எல்லோருக்கும் தருவாராம் ரொம்ப நல்லவர்மா."

பெண்ணின் முகத்தில் புதிதாக நாணம் வேறு. லோகு பயத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள். வீட்டை விட்டு வரும் வரை, சற்று பதிவிசாக வந்தவள் வீட்டை விட்டு தாண்டினவுடனே, சற்று வேக நடை போட்டாள். இப்போதெல்லாம் தோழிகளோடு வருவதே இல்லை.

"என்னடி இது? இப்படி ஆளையே காணோமே." அமுதா குறைப் பட்டாள்.

"என்ன செய்யறது? திடீர்னு கீழே போன்னு சொல்லிட்டாங்க. சில சமயம் தான் மேல வரேன் சரியாயிருக்கு."

பொய்யாக அலுத்துக் கொண்டாள் செல்வி. காலையில் சீக்கிரம் போய் அவளைப் பார்ப்பதோடு சரி. பின் கீழே போய்

...டுக்கிறாள். இதுவும் சந்திரனின் ஏற்பாடு. அவன் கீழே போய் விட்டால் பின் மதியம் சாப்பாட்டிற்குச் சென்று வெளியே போய் சந்திரனோடு சுற்றி விட்டு மெதுவாகக் கீழே வந்து விடுவாள். தன் தோழிக்கு கூட சிறு சந்தேகம் வந்து விடக் கூடாது என்று சர்வ ஜாக்கிரதையாகத் தான் பார்த்து, பார்த்து அடி எடுத்து வைக்கிறாள். அப்படியும் ஜொலிக்கும் முகம் காட்டிக் கொடுத்து விடுகிறது. அவளிடம் ஒரு மாற்றம் இருக்கிறது என்று சொல்லாமல் சொல்லி விடுகிறது.

காலை இன்று இன்னும் சீக்கிரம்தான். வரும் வழியில் அம்மனை ஒரு நிமிடம் நின்று வேண்டிக் கொள்கிறாள். பின் அவனுக்கு பிடித்த மஞ்சள் நிற ரோஜாவை சூடிக் கொள்கிறாள். மறுபடியும் மனது அவளிடமே தாவி ஓடிற்று. சதா ஜோக் அடிப்பான். ஒரு பத்து நிமிடம் அவனோடு பேசுவதற்குள் விலாவலிக்குமாறு சிரிக்க வைத்து விடுவான். அவன் அருகில் இருந்தால் அவளின் அருகாமை, கையின் சிறு சிறு சில்மிஷங்கள், அவனின் ஜோக்குகள் இவை மட்டுமே தெரியும். வேறு எதைப் பற்றியும் அவனிடம் கேட்டதில்லை. கடி ஜோக்குகள் வேறு அதிகமாகவே சொல்வான். அவனைப் பார்த்தாலே மிகுந்த புத்திசாலியாக, உயர்ந்த அறிவாளியாக அவனுடன் இருக்கும்போது பிரமிப்புடன் அவனைப் பார்ப்பாள்.

அன்று போய் சேர்ந்த போதே "ஐயோ.. இது என்னடா இது? ரதியை இங்க விட்டுட்டு மன்மதன் எங்கே போனாரு?" என்று கிண்டலாகக் கேட்கிறான்.

"போங்க.. இப்படி எல்லாம் பேசினா.. பாருங்க.." அவள் பொய் கோபம் காட்ட, "இந்தக் கன்னம் எப்படிம்மா சிவந்து போகிறது?" சட்டென்று கன்னங்களைத் தடவுகிறான். செல்வி தன்னையே மறக்கிறாள்.

"ஆமா பஸ்ஸை பின்னாலே தள்ள முடியுமா?"

"ஐய ஏன் தள்ள முடியாதாம்?"

Mithravinda 007



"மக்கு பின்னாலே தள்ள முடியுமா?" அவள் கழுத்தில் கை வைத்து உரிமையோடு மாலையில் கோத்திருந்த பின்னைக் காட்டுகிறான்.

"போங்க இப்படித்தான் என்னை ஏமாத்தறீங்க." செல்லமாக சிணுங்குகிறாள்.

"ஏய் இன்னிக்கு ஒரு பை. ஸ்டார் ஹோட்டலுக்குப் போய் உனக்கு டின்னர் என்ன?"

அடுத்த நிமிடம் அங்கிருந்து மெதுவாக மறைகிறான். கீழே இருந்தவர்கள் எல்லாம் அவளுடைய ஆடையை பாராட்டி, அவளுக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்ல, ஆண்களின் கண்களில் ஒருவித ஏக்கமும், பெண்களின் கண்களில் ஒருவித பொறாமையும் பார்த்த செல்விக்கு ஒரே சிரிப்பாக இருந்தது.

இன்று மதியம் அவனோடு... நினைப்பே அற்புதமாக இருந்தது. அவன் முத்து மாலையைத் தொட்ட சாக்கில் தன்னைத் தொட்டதும், சந்தோஷமாக இருந்தது. மதியம் ஆவலாக அவள் காத்து நின்ற நேரத்தில் தான் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்தாள் சந்திரனின் மனைவி சுகுணா.

எல்லோருமே "வாங்கம்மா... வாங்கம்மா" என்று சொல்வதிலிருந்தும், பெரிய முதலாளியே குழைவதையும் பார்த்தவள், ஆச்சரியமாய், "யார் இவங்க?" கேட்க, "இவங்க தான் முதலாளியோட பெரிய பையனோட பெண்டாட்டி" என்கிறார்கள். பார்த்த விழி பார்த்தவாறே நிற்கிறாள் செல்வி.



7

முதலில் சந்திரன் சாப்பிட வெளியே போனதும் சிறிது நேரம் கழித்து இவளும் கிளம்புவாள்.

"ஏய் செல்வி என்ன சாப்பாடு எடுத்துட்டு வரதில்லையா என்ன? எங்களோட இங்கயே சாப்பிடேன்."

தோழிகள் எத்தனையோ கேட்டுக் கொண்டாலும், புன்சிரிப்போடு பதில் சொல்வாள்.

"இல்லைக்கா... பெரியம்மா இங்கே மாத்தி வந்திருக்காங்க. அதுதான் பாதிநாள் அவுங்க வீட்டிலே இருந்து காலைலேயே வந்துடறேன். பெரியம்மா காத்துகிட்டு இருப்பாங்க போகனும்." என்பாள்.

இன்று என்னவோ சந்திரன் வெளியே வரவே காணோம். சாதாரணமாக ஒரு மணிக்கு வெளியே வந்துவிடுவான். இன்று என்னாயிற்று? இந்த அம்மா வேறு வந்திருக்காங்களே? மனது அடித்துக் கொண்டது.

அவனுக்கு துளியும் பொருத்தமில்லாமல், சற்று வயதானவள் போல் தோன்றும் அவளைப் பார்க்க, பார்க்க சந்திரன் மேல் பச்சாதாபமாக வந்தது. நிறம் இல்லை.

அழகு இல்லை. ரொம்ப சாதாரணமாக முகம். பாவம் அவனும் எத்தனை நாள் தான் இவளை சகித்துக் கொள்ள முடியும். தன் மனைவியைப் பற்றி பேசினதே இல்லை.

அதற்கு வடிகாலாகத்தான் தன்னைத் தேடுகிறானா? அவன் எப்படியாவது நினைக்கட்டும். அவனுக்கு சுகத்தை கொடுக்க முடிந்தால் போதும். அவன் சந்தோஷம் மட்டும் தான் முக்கியம். மற்றவர்கள் எல்லோரும் இவளைச் சாப்பிட கூப்பிட்டும் போகாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தினாள். இந்த அம்மா எப்ப போவாங்க? ஆனால் அன்று மூன்றரை மணிவரை அந்த அம்மாள் இருந்து விட்டு கிளம்பிய போது தவிப்பாக இருந்தது.

பின்னும் சந்திரனைக் காணவில்லை. ஐந்து மணி வரையில் காத்திருந்து விட்டு அவன் கார் போனதைப் பார்த்துவிட்டு சற்று ஏமாற்றத்தோடு கிளம்பிச் சென்ற போது; எப்போதும் போல் இல்லாமல் சற்று முன்னாடியே கிளம்பிப் போய்விட்டாள். நல்ல வேளை, இவளோடு வந்த தோழி, ஒரு இரண்டு மாதம் போல் வந்தவள், பின்பு வேலையும் கஷ்டம், போய் வருவதும் கஷ்டம்

Mithravinda 007



என்று நின்று விட்டாள். நல்ல காலம் அவள் மட்டும் வந்திருந்தால் சந்தேகப் பட்டுக் கொண்டு இருந்திருப்பாள். இவள்தன் கூட வராததே அவளுக்கு சந்தேகம் தான். தன்னை வேலைக்கு சேர்த்துவிட்ட ஜெயாவையோ மாலை அபூர்வமாக சில நாட்களில் தான் சந்திக்க நேரிடும். அவளுக்கு அவளிடத்தில் அத்தனை நெருக்கமான நட்பு கிடையாது. இருந்தாலும் அவள் மனதிலும் லேசான சந்தேகம் இருக்கலாம் என்று நினைத்தாள். ஆனால் சந்திரன் இருக்குமிடத்திற்கு கூட செல்லாமல், மற்றவர்கள் கண்களில் மண்ணைத் தூவும் போது எப்படி கண்டு பிடிக்க முடியும்? சற்று தைரியத்துடன் தான் இருந்தாள்.

அன்று பஸ் ஸ்டாண்டுக்குப் போகும் போது, ஜெயா நிற்பது தெரிந்தது செல்விக்கு. சற்று சங்கடமாக இருந்தது. ஜெயா தன்னை ஏதாவது கேட்பாளா?

"ஏய் என்னடி இன்னிக்கு சீக்கிரம்? சாதாரணமா இந்த நேரத்திற்கு நீ வரமாட்டியே என்னாச்சு?"

"உனக்கு என்னப்பா? ரெடிமேட் செக்ஷனில் வேலை. அஞ்சு மணி அடிச்சா வெளியே வந்திடுவே நான் எப்படி வர முடியும்? பெரிய முதலாளி பிரிவுலே வேலை ஜாஸ்தி. அவுங்க இருன்னா இருந்து தானே ஆகணும்." சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல.

"ஆமா உன் லவ்ஸ் எதுவரைக்கும் இருக்கு?"

"ம்...ஹூம் அதுக்கு கூட நேரம் எங்கே இருக்கு?" சொன்னவள் மெதுவாகக் கேட்கிறாள். "ஆமா இன்னிக்கு அந்த மொதலாளியோட பெண்டாட்டி வந்திருந்தாங்களே என்ன பிரச்சனை? அந்த சின்ன முதலாளி வேற அங்கேயும் இங்கேயும் அவுங்களை கூப்பிட்டுகிட்டு அலைஞ்சுகிட்டு இருந்தாரே. என்ன விஷயம்?"

"உனக்கு விஷயமே தெரியாதா? அவுங்க சாப்பாடு எடுத்துகிட்டு வந்திருக்காங்க. வந்தா அவுங்க வீட்டுக்காரரு இல்லே."

"இல்லையா மாடியிலே தான் எப்பவுமே இருக்காரு. எங்க அப்படி போயிடுவாரு?"

"பெரிய இடத்து விஷயம் அதெல்லாம் யாருக்குத் தெரியும்? ஒரு மணிக்கு போயிட்டு மூணு மணிக்கு வந்து சாப்பிடுவாரு. இன்னிக்கும் அப்படி போயிருக்காருன்னு நினைச்சுகிட்டாரு. ஆனா இன்னிக்கு எங்கும் போகலை. ஒரே அலுப்பா இருக்குன்னு ஏ.ஸி ரூம்லே போய் படுத்துகிட்டாராம் நல்ல வேளை இன்னொரு பெண் பார்த்து வச்சிருந்தது இல்லேன்னா அந்தம்மா வேற கவலையா மூன்றரை மணி வரைக்கும் உட்காந்து ரொம்ப பேஜாராய் போயிட்டாங்க. அப்புறம் அந்த பொண்ணு வந்து அங்க தான் இருக்காங்கன்னு சொல்லி ஒரு வழியா புருஷனுக்கு சாப்பாடு போட்டுட்டு போனாங்க." அவள் பேசியதை நன்றாக காதில் வாங்கிக் கொண்டாள். செல்வி.

"ஆனாலும் இந்த மொதலாளி பண்றது மோசம் தான்."

"ஏண்டி" சற்று பதற்றத்தோடு கேட்கிறாள் செல்வி.

"பின்னே என்னடி. கட்டின பெண்டாட்டி கல்லு, கல்லா பசங்க இருக்கும் போது கரெக்டா இருக்க வேண்டாமா?"

"ஏன் கரெக்டா இல்லாம?" அவள் புருவம் சுருங்கியது. 'இவளிடம் பிரண்டாகவே இருக்கக்கூடாது.' எரிச்சல் பட்டாள். ஆத்திரம் மனதை ரொப்பியது.

"அடாடா உன் ஆளை சொல்லிட்டா, கோபம் வந்துடுச்சா? அடி போடி ஒரு வேலையையும் அந்த முதலாளி செய்ய மாட்டார். கல்லா வேலை எல்லாம் அவுங்க கிட்டே கொடுக்க மாட்டாங்களாம். கலெக்ஷனுக்கு மத்தவங்க போகலைன்னா தான் இவரை அனுப்புவாங்களாம். ரொம்ப சோம்பேறியாம்."

"நிறுத்துடி ஒருத்தரைப் பத்தி தெரியாம தப்பா பேசாதே."

"என்னடி தெரியாது. இந்த இடத்துலே நாலு வருஷமா வேலை பண்றவ நானு. எனக்குத் தெரியாது. அதே அந்த சின்னப் பையன் அத்தனை புத்திசாலியாம். அவ்வளவு

Mithravinda 007



சாமர்த்தியசாலி. வெளி வேலை, கல்லா வேலை எல்லாமே அவனுக்கு அத்துப்படி. இப்ப வந்துட்டு போச்சே பெரியவங்க சம்சாரம் அதையே சின்னவனுக்கு தான் தரணும்னு துடிச்சுகிட்டு இருந்தாங்களாம். விதி இப்படி மாட்டிடுச்சு. நம்ப பெரிய முதலாளி தன் பெரிய பையனுக்கு பொறுப்பான பொண்ணு வேணும்னு தான் இதை கட்டினாங்களாம்." சொல்பவளை வார்த்தையால் குத்திக் குதற வேண்டும் என்ற ஆத்திரம் தான். இருந்தாலும் அடக்கிக் கொள்கிறாள்.

நாளைக்கு ஏதாவது விஷயம் வேண்டுமென்றால் வராது தோழி சொன்னாளே அதை நினைக்க, நினைக்க மனம் அழுதது. பாவம் சந்திரன் அவனை மக்கு, அசடு என்று ஒதுக்கி வைத்தால் எந்த மனிதன் தான் பொறுத்துக் கொள்வான்.

பெரிய புத்திசாலி பெண்டாட்டியாம். இவள் வந்து ஒரு நாளும் பார்த்ததில்லை. புத்திசாலி என்றால் கடை வேலையையும் பார்த்துக் கொள்வது தானே. வீட்டில் ஆக்கிப் போட்டால் ஆச்சா? பாவம் தன் காதலன் அந்த ராட்சசியிடம் மாட்டிக் கொண்டு முழிக்கிறான். அதனால் தான் தீர்வு தேடி இங்கே ஓடி வந்து விட்டான். 'பாவம் சந்தர்...சந்தர்' மனம் அவனைக் கொஞ்சி, கொஞ்சி மகிழ்ந்தது. மடியில் படுக்க வைத்து தலைமயிறை கோதிவிட வேண்டும். பாவம் பொண்டாட்டிக்கு பயந்து கொண்டு, மூன்றரை மணி வரையில் பட்டினி கிடந்து சாப்பிடாமல், நினைக்கையிலே சட்டென்று கண்களில் கண்ணீர் உருண்டோடியது.' சந்தர் ரொம்ப பாவம் நீங்க. விட்டால் அவனை அழைத்துப் போய், அவனை ஆசுவாசப்படுத்தி அவனுக்கு வேணுங்கறதெல்லாம் தரணும். என்ன கேட்டாலும் தரணும் என்னை கேட்டாலும் தான்.

அன்று வீடு வந்து சேர்ந்து வெகுநேரம் வரை சந்திரன் மயக்கத்திலேயே தான் இருந்தாள். பாவம் இத்தனை பெரிய பணக்காரராக இருந்தும் என்ன பிரயோசனம்? கஷ்டம் தான் அவருக்குச் சொந்தம் என்று தலையில் எழுதப்பட்டு இருக்கிறது மறுபடி அவனை நினைக்கையிலே அழுகை வந்தது.

'கடவுளே எனக்கு என்ன வேணா கஷ்டம் தா. ஆனா என் மானசீகக் காதலனை விட்டுவிடு. இன்று தன்னோடு வெளியே வரவேண்டும் என்ற திட்டம் போட்டு எல்லாம் அந்த பாழாய்ப் போன மனைவியால் வீணாகிவிட்டது.'

அடுத்த நாள் அந்த பச்சைப் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். அன்று கிளம்பும் வரை அம்மா ஏதேதோ பேசியது கூடக் காதில் விழவில்லை. அவள் மனம் முழுவதும் சந்திரன் தான். அவன் புண்பட்ட மனதை சரி செய்யணும். பாவம் சந்தர். அன்று கடைக்குப் போனபோது அவளுக்கு முன்னே வந்து சந்தர் காத்திருந்தான். அவனைப் பார்த்ததுமே கண்கள் தளும்பின.

"சாரிம்மா என் பர்த்டேவை கொண்டாட முடியாம போச்சு தெரியுமா? நீ எத்தனை வருத்தப்பட்டு இருப்பே. நேத்து ராத்திரி அதை நெனச்சு, நெனச்சு தூங்கவே இல்லை." மறுபடியும் அவள் கண்கள் நிறைந்தது. இது தான் உண்மையான காதலா?

தான் அவனைப் பற்றிக் கவலைப்பட அவன் தன்னை நினைந்து கவலைப்பட்டு 'சந்தர் இனி உங்க ஒருவருக்காகத் தான் நான் வாழணும்.' மனதிற்குள் முனகிக் கொண்டாள்.

"நீ முன்னாடி போயிடு யாரும் வரதுக்குள்ளே போயிடு. கீழே ஆளுங்க வந்தாச்சு. எவன் கண்ணிலும் படாதே. நான் ஒரு பத்து நிமிஷம் கழிச்சு வந்துடறேன். இன்னிக்கு சாயந்திரம் வரைக்கும் நாம எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்கலாம்."

செல்வி மற்றவர்கள் யாரும் பார்க்காதவாறு லிப்டில் இறங்கி, பின்பக்க வழியாக வெளியேறி, இரண்டு தெருக்களைத் தாண்டி வழக்கமாக சந்திக்கும் இடத்திற்கு வந்தாள்.

"ஏய் என்ன செல்வி இங்கே நிற்கறே? வேலைக்கு வரலே." தன்னுடைய வேலை செய்யும் கோபாலன் கேட்கிறான். இவளை எப்போது பார்த்தாலும் 'செல்வி, செல்வி' என்று வழிவான். "செல்வி ஒரு காபி சாப்பிடலாம் வறியா?" ஒருமுறை காபி சாப்பிடக் கூட அழைத்திருக்கிறான். எப்போதுமே கால்

Mithravinda 007



பகுதியில் கிழிந்த ஒரு பேன்டும், இரண்டு சட்டையை மாற்றி, மாற்றி போட்டுக் கொண்டு வருவான். பார்க்கவே பரிதாபமாக இருக்கும் இவனுக்கே சோத்துக்கு வழியில்லை. இதுலே 'லவ்' வேற எரிச்சலாக இருக்கும்."

"செல்வி..செல்வி" என்று அவன் பதினைந்து வார்த்தைகள் பேசினால் அவள் ஒரு வார்த்தை பேசுவாள். கோபம், ஆத்திரம் என்று மனதில் இருந்தாலும், வெளியில் சொல்ல மாட்டாள். கூடுமானவரை அவனிடம் பேசுவதையே தவிர்த்தாள்.

"என்ன செல்வி?.." அவன் மறுபடியும் கேட்க,

"இல்லை இன்னிக்கு வேலைக்கு வரலை. எங்க பெரியம்மா வீட்டிலே விசேஷம்" என்கிறாள்.

"செல்வி நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே. இந்த முதலாளியை நம்பாதே. பிராடு."

"என்ன உளர்றே."

"உளறலே. எனக்கு தெரியும். நீ கார்லே அவரோட போறதைப் பார்த்திருக்கேன். அவர் ஏற்கனவே கல்யாணம் ஆனவரு. குழந்தை குட்டி எல்லாம் இருக்கு. பத்திரம். நீ உலகம் தெரியாத பொண்ணு. உங்க வீட்டிலே பொண்ணு வேலைக்கு போயிட்டு வரதுன்னு நெனச்சுகிட்டு இருப்பாங்க. ஆனா நடக்கறது என்ன?"

"எனக்கு எல்லாம் தெரியும்."

"இல்லே செல்வி உனக்கு உலகம் தெரியலே. அவன் நல்லவன் இல்லே. அவனோட இருந்தியானா ஒம் வாழ்க்கையே கெட்டுடும்."

"ஆமா ஏம்பா நீ யாரு எனக்கு அட்வைஸ் பண்ண?" எரிச்சலோடு கேட்கிறாள்.

"ஏம்மா வழியிலே போறோம். பச்சைக் குழந்தை ஒண்ணு சாக்கடைப் பக்கம் போனா பாக்கறவங்களுக்கு மனசு பதறாதா? நீ பச்சைக் குழந்தைம்மா. உனக்கு ஏதானும் ஆயிடுச்சுன்னா?"

சட்டென்று அழுகிறான். முகத்தை மூடிக் கொண்டு விம்முகிறான். அவனைப் பார்த்தாலே எரிச்சல் வந்தது. 'இவனுக்கு நான் வேண்டுமாம். எத்தனை பெரிய பேராசை பார். பளார் என்று அவனை அறைய வேண்டும் போல் ஒரு ஆத்திரம் வந்தது. 'இவன் என்ன பெரிய அழகனா? இல்லை கோடிக் கணக்கில் சொத்து இருக்கா? இவனுக்கு சமதையான பொண்ணு பார்த்து லவ் பண்ணக் கூடாதா? இவனுக்கு நான்தான் கேக்குது போலருக்கு.'

"இத பாரு நீ சொல்றது போல எல்லாம் ஒண்ணும் கிடையாது. ஏதோ ஒருநாள் வேலைன்னு கூப்பிட்டு போனாங்க. அதைப்போய் தப்பா நெனச்சுகிட்டயே. சே." அவள் எரிந்து விழுகிறாள். பிறகு மெதுவாக அவனிடமிருந்து விலகிப் போய் விடுகிறாள்.

சிறிது நேரத்தில் சந்திரனின் கார் வர, காரின் கதவைத் திறந்து முன் பக்கம் ஏறி அமர்கிறாள். முதல் நாள் காரில் ஏறவே பயப்பட்ட நேரம். இப்போது அந்தக் கவலையே இல்லை. ஆறு மாதத்தில் எல்லாமே பழகி விட்டது. கார்க் கதவை லாவகமாகத் திறந்து பதிவுசாக உட்கார்ந்து பெரிய, பெரிய ஓட்டல்களுக்குப் போவது.

முள் கரண்டியால் சாப்பிடுவது, உதடுபடாமல் பேசுவது இப்படி எத்தனையோ பழகிவிட்டது.

சந்திரன் ஒரு நிமிடம் இவளைப் பார்த்து சிநேகமாகச் சிரிக்கிறான்.

"என்னம்மா கழுத்தெல்லாம் முண்டமா இருக்கு. ஏன்?" அவன் அதிர்ந்து போகிறான்.

பாவம் எத்தனை ஏமாற்றம், வேதனை இருந்தும் என்னைப் பற்றி கவலை அவனுக்கு. என் கழுத்து காலியானதைப் பற்றி வேதனை அவனுக்கு. சட்டென்று ஓரிடத்தில் காரை நிறுத்துகிறான். தன் கழுத்திலிருந்த தடி செயினைக் கழற்றி அவள் கழுத்தில் போடுகிறான். சங்கிலி போல் ஒன்றுக் கோன்று



கோக்கப்பட்டு கடைசியில் எஸ் என்று பெண்டண்ட்போட்டு கிட்டதட்ட ஒரு பத்து பவுனுக்கு மேல் இருக்கலாம். தங்கச் சங்கிலி. ஒரு நிமிடம் தனக்கு திருமணம் ஆனது போன்ற உணர்வு இருந்தாலும் இது சரியல்ல. தனக்கு திருமணம் என்றால் அப்பாவால் மொத்தமே பத்து பவுனுக்குதான் போட முடியும். ஆனால் இங்கே. கழுத்து காலியாக இருக்கு என்று அனாயசமாக சங்கிலியைக் கழற்றி போடுகிறான். தன்மேல் எத்தனை அன்பு இருந்தால் இப்படி கொடுக்கத் தோன்றும். இருந்தாலும் கழுத்தில் யாருக்கும் தெரியாமல் போட்டு எப்படி மறைத்துக் கொள்ள முடியும்.

"வேண்டாங்க" கழற்றுகிறாள்.

"ஏம்மா என்னுதெல்லாம் உன்னுதில்லையா?"

"இத்தனை பெரிசு இப்ப வேணாம். எல்லோருக்கும் சந்தேகம் வரும். நீங்க சாதாரணமா ஒரு மாலை வாங்கித் தாங்க போதும்." கொஞ்சலாக சொல்கிறாள். ஒரு தெருவின் ஓரத்தில் இருந்த பிளாட்பாரக் கடையில் காரை நிறுத்தி, கருகமணியும், தங்க கலரில் இருக்கும் மணியும் சேர்த்துக் கட்டிய மாலையை வாங்குகிறாள். அவனிடமிருந்து பத்து ரூபாய் வாங்கி கடைக்கார கிழவியிடம் கொடுத்து விட்டு வருகிறாள்.

"என்னம்மா இது?"

"இது போதுங்க. இதை கழுத்தை விட்டு கழற்ற மாட்டேன். இதை போட்டுகிட்டா யாருக்கும் சந்தேகம் வராது. வழியில் இருக்கும் ஒரு அம்மன் கோவிலில் வண்டியை நிறுத்தச் சொல்லி, அந்த கருகமணியைக் கழுத்தில் போடச் சொல்கிறாள். இனிமேல் இவன்தான் தன் வாழ்க்கைத் துணை. மனதாரச் சொல்கிறாள். சந்திரனை பூ வாங்கித்தரச் சொல்ல, அவன் ஒரு பத்து முழம் போல் வாங்கித்தர, சாமிக்கு கொஞ்சம் கொடுத்து விட்டு, மிச்ச எல்லாவற்றையும் தலையில் சூடிக் கொள்கிறாள். அம்மனின் குங்குமத்தை நெஞ்சில் கணவனாக வரித்து விட்டவனிடம் கொடுத்து நெற்றியின் உச்சியில் வைக்கச்

Mithravinda 007

சொல்கிறாள். அவன் குங்குமத்தை வைத்ததும் கண்ணை மூடி ஆனந்தம் அடைகிறாள்.

'நான் இவர் மனைவி. இவரின் சுகதுக்கம் என்னைச் சார்ந்தது. இனி இவரை யாரும் அவமானப்படுத்த விட மாட்டேன். அவர் முதல் மனைவியை விட்டுவிடு என்று சொல்லமாட்டேன். என்னதான் இருந்தாலும் எனக்கு முன் வந்தவள். இருந்து விட்டு போகட்டும். இந்தக் கடை வீடு எல்லாம் எங்களுக்கு என்று வந்தபின் இவரைப்பற்றி புறம் கூறுபவர்களை முதலில் துரத்த வேண்டும். எல்லாப் பொறுப்புகளையும் நான் எடுத்துக் கொள்ள வேண்டும்.' பெரிய குடும்பத்தின் மருமகளாக தன்னைக் கற்பனை செய்து கொண்டாள்."

இந்நிலையில் கார் நகரத்தை விட்டு எங்கோ தொலை தூரத்தில் பறப்பதை அவள் யோசிக்கவும் இல்லை. பொருட்படுத்தவும் இல்லை. ஏனென்றால் அவள் கணவனுடன் போகிறாள். கார் ஒரு இரண்டு மணி நேரம் போல ஓடி ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்கு வர, "எங்கே வந்து இருக்கிறோம்?" கேட்கிறாள்.

"என்னோட பிரண்டோட காட்டேஜுக்குப் போறோம் இங்கதாம்மா எந்த டிஸ்டர்பன்ஸும் இல்லாம இருக்கலாம்."

அடுத்து வந்த எதையும் சொல்லும் நிலையில் இல்லை அவள். தன் மனதுக்கு பிடித்தவனுடன், தன் கணவனுடன், இனிமையாகப் பொழுதைப் போக்கும் ஒரு புது மணப் பெண்ணின் மனநிலையில் இருந்தாள். ஆறு மாதத்திற்கு முன்பு பழகிய ஒருவனிடம் தன்னை இழந்ததைக்கூட அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவனிடம் ஒட்டி உறவாடி, கூடி, கலந்து மகிழ்ந்து இருவருக்கும் வேண்டிய உணவுகளை ஓட்டலில் ஏற்கனவே ஆர்டர் கொடுத்துவிட, சரியான நேரத்தில் சாப்பாடு வேறு. ஆரம்ப ஈடுபாடு சற்று குறைந்தவுடன் மெதுவாக பேச்சை ஆரம்பிக்கிறாள்.

"அக்கா உங்களை ரொம்ப கோபித்துக் கொண்டார்களா?"

Mithravinda 007



"யாரு?"

"உங்க மனைவி."

"ம். அவளை மனைவியாக ஏற்பாடு செய்தவர் என் அப்பா. நீயே சொல்லு அவளுக்கும், எனக்கு ஏதாவும் பொருத்தம்ங்கறது இருக்கா? சரி ஏதோ பெரியவங்க சொன்னாங்கன்னு திருமணம் பண்ணிகிட்டேன். எல்லா விஷயமும் தனக்குத்தான் தெரியும்ங்கற மாதிரி நாட்டாண்மை. நேற்று சந்தேகப் பட்டு தான் வந்திருக்கா. நல்ல வேளை நான் கிளம்பறதுக்கு முன்னாலே இவளை எதேச்சையா பாத்துட்டேன். உடனே உள்ளே போய் படுத்துட்டேன். என்னைப் பார்த்த பிறகு இவ ஹர்ஷாவை மாட்டிவிட்டுட்டா. சாதாரணமா எங்கப்பாவிற்கு ஹர்ஷாவை ரொம்ப பிடிக்கும். அவனைப் பற்றி யார் சொன்னாலும் கேக்கமாட்டார். ஆனா அவனையே திட்டவச்சுட்டா. அவளுக்கு இத்தனை செல்வாக்கு இருக்கு ஆனா என்னை மதிக்கறதே இல்லை. என்னை ஒரு டம்மியா தான் வச்சிட்டு இருக்கா? இல்லேன்னா என் புருஷனுக்கு அதிகாரத்தைக் கொடுங்கன்னு கேட்டிருக்க மாட்டாளா? அவளுக்கும் ஹர்ஷாவைத் தானே பிடிக்கும். வாழ்க்கையே சலிச்சு போச்சும்மா. வெறுத்துப் போச்சம்மா." அவன் முகம் சங்கடத்துடன் மாற, "சாரி கண்ணா உங்களை வருத்தப்பட வச்சுட்டேனா? நான் இருக்கேன்."

அவனை இறுக அணைத்துக் கொள்கிறாள். அன்று தான் திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகள் போல் மறுபடியும் கூடிக் குலாவி. சந்தோஷத்தின் எல்லையில் இருந்த போதுதான் இருட்டியது கூட புரிந்தது. "ஐயையோ மணி என்ன?" அவன் தான் முதலில் பதறிப் போகிறான். மணி ஏழு அடித்துக் கொண்டிருந்தது. இந்நேரம் வீட்டில் வலை போட்டுக் கொண்டு இருப்பார்கள்.

இத்தனை நாள் நான் செய்யும் தவற்றையே எப்படி கண்டு பிடிக்காமல் விட்டார் என்று தெரியவில்லை. ஆனால் இப்படி நேரம் கழித்து வீட்டிற்கு போனால் எல்லாமே புரிய இரண்டு

நிமிடம் ஆகாது அதன் பிறகு சட்டென்று கண்களை மூடிக் கொண்டாள். தன்னால் இந்த விளைவுகளை எதிர் கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியாது. அப்பாவின் முன்னால் நின்று தைரியமாக இரண்டு வார்த்தைகள் பேசக்கூட தன்னால் முடியாது.

"ஐயையோ மணி ஏழு ஆயிடுச்சே. கௌம்புமா." அவளை துரிதப்படுத்துகிறான்.

"ஐயையோ" அவளும் பதறிப் போகிறாள்.

"நீ எங்கே போகணும்? நான் மெட்றாஸ் போய் உன் வீட்டுக்கு நீ போனியான்னா ராத்திரி மணி பத்தாயிடும்." அவளுக்கு மனதில் எதைப் பற்றியும் பயம் இல்லை. என் கணவர் என் இஷ்டம். என்னை யார் கேட்க முடியும்?

"அதனாலே உன்னை அருகிலே இருக்கிற பஸ் ஸ்டாண்டிலே இறக்கி விட்டுடறேன். இங்கேந்து உங்க வீடு கிட்டதான். பஸ்ஸை பிடிச்சுகிட்டு போயிடு." செல்விக்கு ஒரு நிமிடம் ஏமாற்றமாக இருந்தது. எந்த கணவனாவது தன் புது மனைவியை 'நீ தனியாகப் போ' என்று சொல்லியிருக்கிறானா? கூடவே வந்து ஜாக்கிரதையாக அவளை கொண்டு சேர்க்கும் வரை தன் பொறுப்பு என்று இருப்பான். அதுவும் இந்த இரவு வேளையில் தன்னை தனியாகப் போ என்கிறானே.

"என்ன நீங்க... நீங்களே கொண்டு விட்டுறக்கூடாதா?" செல்லமாக சிணுங்குகிறாள். செல்வி.

"பயித்தியம் மாதிரி உளராதே. இப்பவே நான் போய் சேர ஒன்பது மணிக்கு மேலாயிடும். வீணாக சந்தேகம் வரும்."

"வரட்டுமே..."

"என்ன பேசறே?"

"எப்படியும் ஒரு நாள் தெரியத்தானே போகுது."

"தெரியட்டும் ஆனா இன்னிக்கு வேண்டாம். அதுக்கு ஒரு நேரம்னு இருக்கு அப்ப தெரிஞ்சா பெட்டர். இதுக்கு மேல

Mithravinda 007



உனக்கு விளக்கி சொல்ல முடியாது. அப்புறம் பேசுவோம் கிளம்பு நீ இருக்கற இடத்துலேந்து இந்த இடம் பக்கம் தான். பஸ்லே போனியான்னா பத்து நிமிஷத்திலே போயிடலாம். எப்போதும் போகிற நேரத்திற்கு போயிடலாம். உம் வீட்டிலே உன் மேல சந்தேகம் வராது. சரியா?" அதற்கு மேல் அவளும் பேசவில்லை. அவன் சொன்னால் ஏதேனும் காரணம் இருக்கும். அவன் பெண்டாட்டி போல் தானும் எதிர்த்து பேசுவதில் பாவம் அவன் தான் அடிபட்டு போவான்.

எட்டு வருடங்கள் ஒருவரோடு வாழ்ந்து மனம் துணையை வெளியே தேடுவது என்றால் கட்டாயம் ஒவ்வாமை தான். புருஷனை விட தான் ஒசத்தி என்று அந்தப் பெண் காண்பித்துக் கொண்டு இவ்வாறு தன் வாழ்க்கையையே வீண்டித்துக் கொண்டது. தானும் அப்படி இருக்க முடியுமா? அவள் எவ்வழி, அவ்வழிதான் தன்னுடையது.

"சரிப்பா நான் கிளம்பறேன்." என்கிறாள். புதிதாக இன்பத்தை பார்த்து விட்ட களிப்பு கண்களில். குபேர வாழ்க்கை வந்து விட்டது என்ற மலர்ச்சி முகத்தில். அவள் தன்னுடைய பஸ் ஸ்டாப்புக்கு முன்னால் இருக்கும் பஸ் ஸ்டாண்டுக்கு வருகிறான். "நான் இப்படியே திரும்பிடறேன். சரியா?" சொல்லிவிட்டு அவளை இறக்கிவிட்டு "டேக் கேர். பத்திரமா போம்மா. பஸ் சார்ஜ் வேணுமா?" ஒரு ஐம்பது ருபாயை எடுத்து நீட்டுகிறான்.

"அதெல்லாம் வேணாம்" அவள் மறுக்க, மறுக்க ஐம்பது ருபாய் நோட்டை அவள் கையில் அழுத்துகிறான். செல்வி ஒரு புன்சிரிப்போடு அவனைப் பார்த்துவிட்டு ஏற, பின் தன் வண்டியை கிளப்பிக் கொண்டு போகிறான். வண்டி மறைந்த திசையையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'நல்லவேளை ஏழு மணி ஆச்சு. கிளம்பு என்றதுமே அவசரம். அவசரமாக டிரஸ் செய்த ஒரு ஐந்து நிமிடத்தில் கிளம்பியாகி விட்டது. திருப்பி, திருப்பி சந்திரனோடு இருந்த அந்த நினைவுகளே மனதில் ஆழ்த்த அவள் தன்னைக் கேலி செய்தது. கரிசனமாக கூட்டி வந்தது எல்லாமே மனதில் வந்து.

வந்து போனது. வீட்டிற்கு போனதுமே அம்மா கேட்ட முதல் கேள்வி.'

"இது ஏதுடி செயின்?" என்கிறாள்.

"ஐய இது செயினா கருகமணி கோத்தது ரெண்டு ரூபா. என் தோழி வாங்கி கொடுத்தா. நேத்து பொறந்த நாளைக்கு ஒண்ணுமே தரலைன்னு கொடுத்தா நேத்து அவ போட்டுகிட்டு வந்தா அழகா இருக்குன்னு சொன்னேன். இன்னிக்கு என் கழுத்திலே போட்டுட்டா." "இத பாரு ஒருத்தர் போட்டதை ஒருத்தர் உபயோகப் படுத்தினதை இன்னொருத்தர் உபயோகப் படுத்தக் கூடாது. தெரியுமில்லே. நல்லதில்லே." அம்மாவின் இந்த வியாக்கியானம் அவளுக்கு சிரிப்பை வரவழைத்து. 'இன்னொருத்தி உபயோகப் படுத்தின புருஷனையே நான் உபயோகப் படுத்தறேன். நீ சாதாரண மணிக்கு போயிட்டே.' உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். அம்மா மறுபடியும், மறுபடியும் தன்னைப் பார்க்க கன்னங்களில் லஜ்ஜை ஏறியது அம்மா எதற்கு தன்னை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள் இதற்குள் அப்பா வருகிறார்.

"செல்வி வந்தாச்சா?" என்கிறார். ஒரு நிமிடம் மனம் திக்கென்றது. 'என்ன கேட்கப் போகிறார்? ஒரு வேளை நான் இவரோடு இருந்தது தெரிந்து விட்டதா?' என்னதான் என் இஷ்டம் என்று கூக்குரலிட்டாலும் மனது படபடக்கிறது என்ன கேட்கப் போகிறார்? அப்பா. செல்விக் கண்ணு உம் தங்கச்சி ஹைதராபாத்துலே இருக்குதே அது வந்திருக்குது அவ பையன் துபாய்லே இருக்கானாம். ஒரே பையன். நிறைய சம்பாதிக்கறானாம். கழுத்திலே, கையிலேன்னு எக்கச்சக்க நகையைப் போட்டுகிட்டு இருக்கா. அவ பையனுக்கு ஒன்னை கேட்டாங்க. போட்டோ கூட எடுத்துகிட்டு வந்திருக்கா பார்க்கறியா? ஒன்னிய எங்கயோ கல்யாணத்துலே பாத்தாங்களாம். ஒன்னத்தான் மருமகளா ஆக்கிக்கணும்னு ஒரே ஆசையாம்." அவர் சொல்ல, சொல்ல திக்கென்றது செல்விக்கு.

Mithravinda 0.07



அதற்குள் அம்மா "ஏய் செல்வி இங்கே வா." என்று தனியாகக் கூப்பிட்டு. "இதென்ன கழுத்திலே காயம்?" சந்தேகத்தோடு கேட்க, செய்வதறியாதவாறு திகைத்துப் போகிறாள் செல்வி.

## 8

சுகுணா பிரமை பிடித்தது போல் தான் அமர்ந்திருந்தாள். கணவன் இப்படியெல்லாம் பேசுவான் என்று கூட இத்தனை நாள் தெரியாது. எப்படி எல்லாம் பேசி விட்டான். குடும்பத்திலும் வேறு குழப்பம். பிரிவு. கணவன் சொல்வதிலும் தவறில்லை. இதெல்லாம் தன்னால் வந்த தொல்லைதான். குடும்பம் என்றால் பரஸ்பரம் நம்பிக்கை நிச்சயமாக வேண்டும். இத்தனை நாட்கள் கூட இருந்த கணவனை ஏன் தப்பாக நினைத்தேன்? அப்படியே வெளியே போயிருந்தால் என்ன? தப்பான காரியத்திற்கு தான் வெளியே போவார்களா? கணவனை தப்பாக நினைத்தால் தான் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயத்தை பெரிசுபடுத்தி, சண்டை போட்டு பொறுமை இன்மையால் தன் பெயரையும் கெடுத்துக் கொண்டு "சே..சே.. தான் ஏன் இப்படி மாறிப் போனோம்? தன் கணவன் மேல் சந்தேகம் என்றால் தன்னையே சந்தேகப்படுவது போல் ஆகாதா? தன் குழந்தை போல் பாவித்த அவன் மேலா சந்தேகம் வருவது? சே. மனது வெகுண்டது. எத்தனை முறை தன்னையே திட்டித் தீர்த்தாலும் மனது ஆறவில்லை. மெதுவாக அவன் காலடியில் போய் அமர்ந்து. "சாரி, சாரிங்க..." சொல்லும் போதே அழுகை வந்தது. அவன் முகத்தை திருப்பிக் கொண்டான். "நான் செஞ்சது தப்புதான்." சொன்னதற்கு பதில் இல்லை. அவன் கால்களை

ஆசையாக செய்தாள். தன்னை ஒரு விரோதி மாதிரி பாவிக்க அவனுக்கு எப்படி மனது வந்தது? எரிச்சல், ஆத்திரம், கோபம் சேர்ந்துவர அழுகையும் வந்தது. குழந்தைகளை மாமனாரே அழைத்துச் சென்று விடுகிறார். இப்பொழுது குழந்தைகள் கூட ஒரு பிரச்சனையாக இல்லை. கணவன் ஒரு பிரச்சனையாகப் போய்விட்டான். ஏன் இப்படி நடந்து கொள்கிறான். எத்தனை நேரம் அழுதிருப்பானோ தெரியவில்லை. காலையில் சாப்பிடாத கணவன் இப்போது மட்டும் என்ன சாப்பிடப் போகிறான்? வெறும் முள்ளங்கி சாம்பார் கோஸ் பொரியல் தக்காளி பூண்டு ரசம் என்று வைத்து அனுப்பினாள். கணவன் சாப்பிடமாட்டேன் என்று குறைவாக கொடுக்க மனம் வரவில்லை. வழக்கப்படி மாணவர், மச்சினன் கணவன் எல்லோருக்கும் சேர்த்து தான் அனுப்பினாள். மனம் மட்டும் பாரமாகவே இருந்தது. கடவுளே கணவனின் கோபம் போக வேண்டும். அவன் சாப்பிட வேண்டும். எப்போதுமே "எதற்குமே நேர்ந்து கொண்டதில்லை. 'அம்மா துர்க்கையே காப்பாத்து" இத்தனை பாராமுகம் தன் கணவன் காட்டியதில்லையே. மறுபடியும் அழுகை வர, தன் தெருவில் இருக்கும் பிள்ளையாரை மனமுருக வேண்டினாள். அன்றைய பொழுதை நெட்டித் தள்ளுவதற்குள் போதும், போதும் என்றாகி விட்டது.

வழக்கமாக 'அண்ணி' என்று ஓடி வரும் மச்சினனைக் காணவில்லை. அவளைப் பார்ப்பதை தவிர்ப்பது தெரிந்தது. ஒரு நாளிலா எல்லாம் தலை கீழாக மாறிவிடும். மறுபடியும் அழுகை வந்தது. தான் எத்தனை வேண்டி வேண்டி அவனுக்கு செய்திருப்போம். சொந்தத் தாயாக, சகோதரியாக எத்தனை செய்திருப்போம். ஆனால் இத்தனையும் பெற்றுக் கொண்டு ஒரு சின்ன தவறு செய்து விட்டேன் என்பதற்காக தன்னை ஒதுக்கி வைப்பது எந்த விதத்தில் நியாயம்? மறுபடியும் அழுகை வந்தது.

ஆனால் அன்று மாலை மணி ஐந்து அடித்தும் அவன் வரவில்லை. கணவன் வருவான் என்ற காத்திருந்தவள் நிலை கொள்ளாமல் தவித்தாள். இன்று எப்படியும் அவனிடம் பேசிட

Mithravinda 007



வேண்டும் என்று நினைத்தவள் அவனை சந்திக்க முடியாமல் துடித்து விட்டாள். வழக்கமாய் ஐந்து மணி அடித்தால் காரில் வீட்டிற்கு வந்துவிடுவான். அவன் மாமனார் தான் ஒன்பது மணிக்கு வருவார். ஹர்ஷா ஒரு ஆறு ஆறரை மணிக்கு வந்து விடுவான். இன்று மணி எட்டடித்தது. ஹர்ஷாவையும் காணவில்லை. மாமனாரையும் காணவில்லை ஒருவேளை ஏதேனும் கல்யாணப் பார்ட்டி வந்துவிட்டதா. அதனால் கிட்ட இருந்து துணி எடுத்துக் கொடுக்கறாங்களா? தவித்துப் போனாள். மாமனாரிடம் போன் போட்டு பேசலாமா? ரொம்ப அவசியமாய் இருந்தாலொழிய இவள் போன் செய்ததில்லை. மாமனாரை தொந்தரவு செய்யக் கூடாது. வேலை நேரத்தில் எந்தவித கஷ்டமும் தரக்கூடாது என்று உறுதியாக நின்றவள் மீண்டும் கவலைப் பட்டாள். 'என்னவாகியிருக்கும்?' மறுபடியும் மனம் பதைபதைத்தது. டெலிபோன் அருகே செல்வதும். வருவதுமாக இருந்தாள். சரி ஆனது ஆகட்டும் என்று போன் பண்ணி விடலாமா? இன்று டிபன் கேரியரைக் கூட திருப்பி அனுப்பவில்லை.

மாமனார் எல்லாவற்றிலும் ரொம்ப சரியானவர். எல்லாமே அவருக்கு மிகச் சரியாக நடக்க வேண்டும். அப்படி இருக்கும் போது டிபன் பாக்ஸ் ஏன் வரவில்லை? மனம் அலைக் கழித்தது. த்ானே சென்று பார்த்துவிட்டு வரலாமா? மணி ஆறடித்தது ஹர்ஷாவின் மனைவி கதவைத் திறந்து உள்ளே போவது தெரிந்தது. மணி ஏழைத் தொட்டது. மறுபடியும் எட்டிப் பார்க்கிறாள். சிநேகா குளித்து ஒரு நைட்டியைப் போட்டுக் கொண்டு பவுடர் எல்லாம் பூசிக் கொண்டு பால்கனியில் நிற்பது தெரிந்தது. இன்னும் ஹர்ஷா கூட வரவில்லை. போலருக்கு அவளும் இவனுக்காகத்தான் காத்து நிற்கிறாளோ என்னவோ? மாடியில் தன் வீட்டில் வைத்திருந்த செடி கொடிகளை ஆராய்ந்தவள் எதேச்சையாக நிமிர. சுகுணா தன் வீட்டு மாடியில் இருந்து பார்ப்பதுதெரிய முகமும் நிமிடத்தில் மாறி விடு விடுவென்று உள்ளே சென்று பால்கனிக் கதவை அறைந்து சாத்துகிறாள். சுகுணாவிற்கு நெஞ்சில் அறைந்தது போல்

இருந்தது. இது தேவையா? அனாவசியமாய் உறவுகளின் கம்பிகளை அழித்துவிட்டேனே. இந்த உறவுகள் பெரியதாக தாங்கி விடப் போவதில்லை. அதே சமயம் சண்டை இட்டால் ஒரேடியாக பிரிந்து போகிற சாத்தியக் கூறும் உண்டு. இருக்கும் இரண்டு அண்ணன், தம்பிகளுக்குள் விரோதம் எதற்கு? அதுவும் தன்னால் விரோதம் என்றால் ஆயிரம் இருந்தாலும் தான் அடித்தது தவறு.

தங்கள் குடும்பத்தில் திருமணம் புரிந்த எல்லாமே சொந்தத்தில் தான். அசலில் பெண் எடுக்கவே மாட்டார்கள். ஐயோ உறவ கட்டாயமா அறுத்துக் கிட்டு போயிடுவா நாம சொந்தத்திலே பெண் எடுத்தா நம் மாமன் அத்தைன்னு கஞ்சியாவது ஊத்தும். என்பார்கள். அது நிஜமோ என்னவோ சிநேகா இதுவரைக்கும் எச்சைக் கையால் கூட காக்காய் ஒட்டாதவள். ஒரு நல்ல நாள் பொல்லாத நாள் என்பார்களே அப்போது கூட பெரியவர்களின் ஆசீர்வாதத்தைக் கேட்டதில்லை. எப்போதுமே தன்னை ஒரு பெரிய மகாராணியாக நினைத்துக் கொண்டு அடுத்தவர்களை பந்தாடும் குணம். இதில் ஹர்ஷா தான் பாவம். தெரியாத்தனமாக மாட்டிக் கொண்ட மனிதன் முள்ளின் மேல் விழுந்த சேலை போல் இதனை பதமாக எடுத்திருக்க வேண்டும். அவசரப்பட்டு விட்டேன். ஹர்ஷாவிடமும் உதவி கேட்பதிலும் இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

சாதாரணமாக இருந்தால் இங்கிருந்தே ஹர்ஷா என்று கூப்பிடுவாள். ஆனால் ஹர்ஷா வந்த மாதிரி தெரியவில்லை. மணி எட்டடித்தது. மாமனார் ஒன்பது மணிக்குத்தான் வருவார். ஒருவேளை பேரும் ஒன்றாகத்தான் வருவார்களா? யோசனையில் ஆழ்ந்தபடியே இருந்தாள். மனம் இருப்புக் கொள்ளவில்லை. வயிற்றை வேறு ஏதோ செய்தது. நெஞ்சில் ஏதோ ஒரு பாரம் ஏற்றிய உணர்வு இரவு என்ன சமைத்தாள் என்றே தெரியாதபடி செய்து வைத்தாள். தன் கணவன் எங்கே? இன்னும் காணவில்லையே. லேசாக சுவற்றில் சாய்ந்து

Mithravinda 007



உட்கார்ந்து கொள்கிறாள்? எத்தனை நேரம் யோசனையில் ஆழ்ந்தாளோ. எதேச்சையாக பார்த்தபோது ஹர்ஷாவின் அறையில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. வந்து விட்டானா? போய் கேட்டு பார்க்கலாமா? சிநேகா உள்ளே விடுவாளா? கணவனைப் பற்றிய நினைப்பு பதைபதைப்பு மனதை நெருட, அதற்கு மேல் தாள முடியாமல் இறங்கி விடு. விடு.வென்று நடக்கிறாள். முதலில் காலிங் பெல் அடிக்கிறாள். ஹர்ஷா— ஹர்ஷா என்று கூப்பிடுகிறாள். சப்தம் எதுவும் வரவில்லை. மறுபடியும் கதவைத் தட்டுகிறாள். தடதடவென்று தட்ட, சட்டென்று சிநேகா கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறாள். படம் எடுத்து ஆடும் பாம்பைப்போல் கடுமையாக கண்களில் விஷத்தோடு பார்க்கிறாள்.

"ஒரு டீஸன்ஸி வேணாம். கண்ட, கண்ட நேரத்தில் கண்ட கழுதை எல்லாம் வந்து கதவை தட்டுது." முதலில் ஒரு முறை தீர்க்கமாக அவளைப் பார்க்கிறாள். என்னுடைய செயலுக்கு திருப்பி விடப்படும் அம்பு இது.

"ஹர்ஷாவை பார்க்கணும்."

"ஏன் மத்தவங்களெல்லாம் மனுஷனா தெரியலையா?"

"சிநேகா பிளீஸ் நான் ஏதோ ஆத்திரத்தில் செய்துட்டேன். தயவு செய்து ஹர்ஷாவைக் கூப்பிடு."

"எதுக்கு இன்னும் எம் புருஷன் பேர்லே இல்லாததும் பொல்லாததும் போடவா?"

"ப்ளீஸ்..."

"இத பாருங்க. இருக்கும் போது செருப்பால அடிக்கறது. அப்புறம் கொழையறது எல்லாம் எனக்குத்தெரியாது. நாங்க எது செய்தாலும் நேரடியாகவே செய்வோம்."

"ஹர்ஷாவைக் கூப்பிடு."

"இத்தனை சொல்றேன் வெக்கமாயில்லை." அவள் கதவை அதிரடியாகச் சாத்த சட்டென்று அவளைத் தள்ளி விட்டு ஹர்ஷா வெளியே வந்து விடுகிறான்.

"என்ன அண்ணி."

"ஹர்ஷா... எம்மேல கோபம் இருந்தா தயவு செய்து மன்னிச்சிடு."

"என்ன அண்ணி பெரிய வார்த்தை எல்லாம் பேசிகிட்டு."

"உங்க அண்ணன் ஆபீஸிலிருந்து வரலைப்பா." மௌனமாக, ஆனால் தீர்க்கமாக, பாவமாக அவளைப் பார்க்கிறாள்.

"என்னப்பா பேச மாட்டேங்கறே?"

"என்ன அண்ணி பேசறது?"

"என்னப்பா?"

"நான் சொன்னா அதை தப்பா எடுத்துகிட்டா."

"இல்லேப்ப நான் தான் மடச்சி. நெஜம் புரியாம பேசிட்டேன். சொல்லுப்பா என்னப்பா அவருக்கு." ஒருவேளை வேறு ஏதாவது ஆகிவிட்டதா? பயத்தில் முகமெல்லாம் வியர்த்துப் போக தொண்டை அடைக்க அவனைப் பார்க்கிறாள்.

"அண்ணி அவனுக்கு ஒன்னுமில்லே. டென்ஷனாகாதீங்க இவன் இன்னிக்கு முழுவதும் வேலைக்கே வரலை. அப்பா கூட அவன் மேல ரொம்ப கடுப்பிலே இருந்தார்."

"என்னது காலைலே கிளம்பினாரே."

"புருஷங்கற மாரியாதை இருந்தா இருப்பான். பெரிய மகாராணி எல்லோரையும் அதிகாரம் பண்ணினா?" சிநேகா வார்த்தைகளால் பந்தாடினாள். சிநேகாவின் வார்த்தைகளில் கண்கள் ரொம்பிப் போய் இதயம் பலவீனப் பட்டு. கடவுளே அவருக்கு ஒன்னும் ஆகக் கூடாது. மனது பிரார்த்திக்க சுகுணா துடிக்க "ஏய் சிநேகா உள்ளே போ." ஹர்ஷா உரக்கக் கத்துகிறான். " ஆமா என்னைத்தான் அடக்க முடியும். அவளை என்ன செய்ய முடியும்? அது குணத்திற்கு ஏற்ற மாதிரி

Mithravinda 007



தான் வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறான் கடவுள்." சிநேகா கேட்க வில்லை அடுத்த நிமிடம் பளாரென்று கன்னத்தில் விழுந்தது.

"வெளியே போடி நாயே. போனாப் போவுது காதலிச்ச வளாச்சேன்னு நினைச்சேன். சாதாரண மேனர்ஸ் கூட இல்லாம நடந்துக்கறே. ஒரு தடவை அடிச்சாங்கறதுக்காக இத்தனை பேசறியே. எத்தனை தடவை உக்கார வச்சு உனக்கு வடிச்சு கொட்டி இருப்பாங்க. அந்த நன்றி கொஞ்சமாவது இருக்குதா?" பளாரென்று அறைந்தது மட்டுமல்ல, நெருப்பைப் பொழிவது போல் கணவன் வசனங்களைப் பேச அதிர்ந்து போகிறாள் சிநேகா. ஒரு நிமிடம் அவனையே வெறித்துப் பார்த்துவிட்டு நகர "அண்ணி அழாதீங்க. அவன் கொஞ்ச நாளாவே இப்படித்தான் இருக்கான். எங்க போறான்னு தெரியலே. எங்கே வரான்னு தெரியலே. அப்பா கெடுபிடியிலிருந்து கொஞ்சம் ப்ரீயாக இருக்கணும்னு விரும்பறான்னு நெனச்சேன். ஆனா தப்பான வழியிலே போவான்னு தோணலை. நீங்க கவலைப் படாதீங்க. வந்திடுவான். அண்ணி...கேக்கறேன்னு தப்பா நெனைக்காதீங்க உங்களுக்குள்ளே ஏதாவது. அப்படி இருக்க சான்ஸே கிடையாது. இருந்தாலும்...." ஹர்ஷா இழுக்க. "இருக்குப்பா, உங்கிட்டே சொல்றதுக்கென்ன? அன்னிக்கு சிநேகாவை அடிச்சது. உன்னை அப்பா விட்டே மாட்டிவிட்டது. அதுக்காக என்னை ரொம்ப திட்டினது. இத்தனை நாள் அதிர்ந்து கூட பேசாதவர். காலைல எல்லாம் ரெடி பண்ணி வச்சா, உங்க அண்ணனைக் காணோம். எப்ப போனார்ன்னு தெரியாது." சரி அண்ணி. கவலைப்படாதீங்க.பார்ப்போம். வரலைன்னா நான் போய்ப் பாக்கறேன். அழாதீங்க. என் அண்ணி இதுக்கு போய் அழுவாங்களா? சதா சிரிப்பையே பார்த்துவிட்டு இருக்கற முகத்திலே முதல் முதலாக அழுகையைப் பார்க்கிறேன்."

"தன் வீட்டிலிருந்து திருமணம் ஆகி, முதன் முதல் இங்கே வந்த போது கூட பொட்டு தண்ணி கண்களில் விடவில்லை சொந்தம் தானே மாமா. அத்தை வீடுதானே என்று சந்தோஷமாக

வந்தவள். இருவரும் பேசிக் கொண்டு இருக்கும் போதே கார் இவர்களைத் தாண்டி உள்ளே செல்ல சந்திரன் ஓசைப்படாமல் இறங்கினான்.



## 9

சந்திரனைப் பார்த்ததும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. "நான் வரேம்பா." ஹர்ஷாவிடம் சொல்லிக் கொண்டு ஓட, ஹர்ஷாவும் வேகமாகப் பின்னால் வருகிறான். அவன் வருவதற்குள் சந்திரன் மடமடவென்று வீட்டினுள் நுழைந்து தன் படுக்கை அறைக்கு போய் படுக்கையில் சாய்ந்து விட, ஓட்டமும் நடையுமாக பின்னால் ஓடுகிறாள் சுகுணா. ஹர்ஷா வேதனையோடு பார்த்து விட்டு திரும்புகிறான். "என்னாங்க" சுகுணா கேட்க, அவன் எங்கோ பார்த்தவாறு மௌனமாக இருக்கிறான். "நான் செஞ்சது தப்புன்னா மன்னிச்சிடுங்க பிளீஸ் சாப்பிட வாங்க."

"நான் சாப்பிட்டாச்சு." முகத்தைத் திருப்பியவாறே அவள் முகத்தைப் பார்க்காமல் சர்வ ஜாக்கிரதையாக பேசுகிறான்.

காலையில் கணவன் சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டான் என்பதிலிருந்து பரிதவித்துக் கொண்டிருந்த உள்ளம் காலையில் காபியைத் தவிர எதையும் தொடவில்லை. மதியம் ஒரு கிளாஸ் மோர் மட்டும் குடித்தாள். எதுவுமே வேண்டியிருக்க வில்லை. கணவனையே ஜபித்துக் கொண்டிருந்தாள். இப்போதும் இவன் சாப்பிடவில்லையானால் ஒரே ஒரு சின்ன துண்டு கூட உடம்புக்குள் போகாது. ஏனோ தன்னையும் மீறி அழுகை வந்தது. தெரியாம செய்த ச[illegible]கு மன்னிப்பே

Mithravinda 0.07



இல்லையா? "உங்க சுகுணா வந்திருக்கேன் பிளீஸ்" கண்களில் கண்ணீரோடு அவன் முகத்தை திருப்பி அவனையே பார்க்க, என்ன நினைத்தானோ என்னவோ, சட்டென்று உடைந்து போய் அழுகிறான். அவளை இழுத்து அணைத்துக் கொள்கிறான்.

"நீ அப்படி பேசலாமா?" என்கிறான்.

"சாரி... பிளீஸ்... சாரி, எதையாவது பிசைஞ்சு எடுத்துட்டு வரேன்." "வேண்டாமா" மறுத்து விடுகிறான்.

"இல்லை நீங்க சாப்பிட்டிருக்கமாட்டீங்க. எனக்கு உங்களைத் தெரியாதா? கொஞ்சம் தயிர் ஊத்தி எடுத்துகிட்டு வரேன்." "வேண்டாமா." மறுத்து விடுகிறான்.

"எனக்கு உங்களைத் தெரியாதா? சோற்றில் தயிர் ஊற்றி பிசைந்து பூண்டு ஊறுகாய் வைத்து அறையிலே அவனுக்கு ஊட்டுகிறாள்."

"வேணாம். வேணாம்" என்று மறுத்தவன். மனைவி ஊட்ட ஊட்ட சாப்பிட்டு முடித்தான். அங்கேயே அவன் வாயைக் கழுவி, தன் முந்தானையில் துடைத்து, தண்ணீர் கொடுத்து, சாக்ஸ் கழற்றி, வேறு சட்டை அணிவித்து, அவனும் சின்ன குழந்தையாக எல்லாவற்றையும் செய்து கொண்டான். பெண்டாட்டியின் பணிவிடைகள் ஆனந்தத்தைக் கொடுக்க, கண்ணை மூடிக் கொண்டு படுத்து இருக்கிறான். மாமனார், மாமியாருக்கு சோறு போட்டு விட்டு அவள் நகரும்போது.

"ஏம்மா உன் புருஷன் இன்னிக்கு வேலைக்கே வரலை?"

"இல்லை மாமா பிரண்டுக்கு மேரேஜ் சீக்கிரம் வந்துடலாம்னு போனாராம். ஆனா பிரண்ட் விடலையாம்."

"என்னவோ சொல்லு. எனக்கப்புறம் இந்த சொத்தை கட்டி காப்பாத்தணும்னு கொஞ்சம் கூட பொறுப்பில்லாம நடந்துக்கலாமா? உன்கிட்ட ஒரு வார்த்தையாவது சொல்லிட்டுப் போயிருக்கலாமே. இவன் தன் சொந்த கடையை இந்த லட்சணத்துல நடத்தினா என்ன பிரயோஜனம்? இந்த சொத்து உருவாக்கறதுக்கு

எத்தனையோ பாடுபட்டிருக்கிறேன. எல்லாமே வீணா போயிடுமோன்னு பயமா இருக்கு."

"அப்படி எல்லாம் ஆகாது மாமா."

அவர் அரை மனதுடன் சாப்பிட்டு விட்டு எழுந்த போது சுருணா சற்று பதற்றத்துடன் இருந்தாள். 'நடந்த உண்மைகள் மாமனாரிடம் சொன்னால் என்ன? மாமனாரை தன் சொந்த தந்தை போலல்லவா எண்ணுகிறாள். மீண்டும் மனதில் எச்சரிக்கை மணி அடித்தது.' வேண்டாம் விஷயம் தெரிந்து விட்டால் கணவன் மறுபடியும் கோபித்துக் கொண்டு முருங்கை மரத்தில் ஏறிவிடப் போகிறான் இப்போது வேண்டாம் பிரிதொருமுறை பார்க்கலாம். மனதை அடக்கிக் கொண்டாள். இத்தனை நேரம் அவன் வரவில்லையே என்ற தவிப்பு இப்போது வந்தவனை விட்டுவிடப் போகிறோம் என்ற துடிப்பு வயிறு பசிப்பது போல் தோன்ற, சிறிது சோற்றை எடுத்து மோரைக் குழப்பி கலந்து, கரைத்து அப்படியே சாப்பிட்டு விட்டாள். மடமடவென்று குழந்தைகளுக்கு பாலைக் கொடுத்துவிட்டு. திரும்பி வந்த போது கணவனும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

சாதாரணமாக அவன் உறங்கினால் காலடி சத்தம் கூட வெளி வராது போல மென்மையாக நடப்பாள். இன்று என்னாயிற்று? மனது நிலை கொள்ளவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் அவன் நெஞ்சில் மல்லாந்து சாய்ந்தாள். அவன் கன்னத்தை தடவி விட்டு "சாரிப்பா தெரியாம செய்துட்டேன்." என்கிறாள். தூக்க கலக்கத்தோடு அவளை அணைத்துக் கொள்ள அவன் கைகளின் வளையத்திற்குள் நுழைந்தாள்.

"ம்.. என்னங்க.. வந்ததுமே படுத்துட்டீங்க? கொஞ்சம் கண் முழிக்கக்கூடாது?" அவனைச் சீண்டுகிறாள்.

"இல்லை டயர்டா இருக்கு." சட்டென்று அவன் நெஞ்சில் உரிமையோடு தலை வைத்து படுக்கிறாள். அவனை மென்மையாக அணைத்துக் கொள்கிறாள். வழக்கம் போல் அடுத்தநாள் காலை எழுந்திருக்கும் போதே, அவள் பழைய

Mithravinda 007



சுருணாவாக ஆகி விட்டாள். எல்லாவற்றிற்கும் சிரிக்கும் சுருணா எதைப் பற்றியும் கவலைப்படாத சுருணா.

இன்றும் மும்முரமாக அவனுக்கு பிடித்த பொங்கல், தேங்காய் சட்னி சாம்பார், உளுந்து வடை என்று செய்தவள், நடு நடுவே கணவனை ஒரு எட்டு பார்க்கிறாள். அவன் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"முதலில் போய் கதவைத் திறடா." மாமனார் தான் இந்த ஏற்பாட்டை செய்தவர். அப்போதும் தான் தான் எழுப்பி விட வேண்டும். பேண்ட் சட்டையிலிருந்து எல்லாவற்றையும் தர வேண்டும். சரியான 'எல். கே. ஜி குழந்தை' மனது நினைக்க வாய் மலர்ந்தது. சட்டென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்தது. ஹர்ஷாவிற்கு பொங்கல், சட்னி, சாம்பார் இருந்தால் போதும். இரண்டு மூன்று தட்டுகளை காலி செய்து விடுவான். உளுந்து வடையில் வெங்காயம், இஞ்சி, மிளகு தட்டிப் போட்டுக் கொடுத்தால் பின்னும் இரண்டு சேர்த்து கேட்டு வாங்கி சாப்பிட்டு விட்டு போவான். எதிரே பார்க்கிறாள். விளக்கு எரிகிறது. இந்த ஏழு மணிக்கும் விளக்கு எரிகிறது. ஏதோ தூக்கிப் போடும் சப்தம் கேட்கிறது. நேற்றைய போராட்டத்தின் எதிரொலி. தன்னால் புருஷன் மனைவிக்கும் சண்டை பாவம். கடவுளே ஏன் என்னைக் கொண்டு போய் இத்தனை சங்கடத்தில் மாட்டுகிறாய்? நான் வேணும்னு எதையும் செய்யலையே. பாவம் ஹர்ஷா. காலையில் காபி சாப்பிட்டானா இல்லையா தெரியலையே. கூப்பிடலாமா? கூப்பிட்டால் என்ன நடக்கும். என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். சின்ன வயதில் நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனை எனக்குத் தெரியும். அவன் பசியோடு இருக்கும் போது நாம் எப்படி சாப்பிடுவது? இப்போது பெண்டாட்டியின் வற்புறுத்தலால் ஹோட்டலுக்குப் போகிறானே தவிர ஹோட்டலுக்குப் போவதே அவனுக்குப் பிடிக்காது. ஒருமுறை ஹோட்டலில் யாரோ வடைக்கு அரைத்தவர் இரண்டு கைகளையும் உபயோகப்படுத்தினாங்களாம். ஒரே பக்கெட் தண்ணியில் எல்லா தட்டுகளையும் முக்கி எடுத்தாங்களாம்.

பார்த்து விட்டானாம். அதிலிருந்து ஹோட்டல் என்றாலே அவனுக்கு அலர்ஜி தான்.

"எல்லா ஹோட்டலுமா அப்படி இருக்கு?"

"வேண்டாம் அண்ணி எனக்கு வெறும் மோர் சாதம் இருந்தா கூட போதும். நான் அவ கூட போய் வெறும் கூல் டிரிங்க்ஸ் தான் சாப்பிடப் போறேன். அவ ஹோட்டல்லே சாப்பிடட்டும்." என்பான் பாவம் அவன். நான் கூப்பிடப் போகிறேன் இதில் என்ன வந்தாலும் வரட்டும். "ஹர்ஷா" குரல் கொடுக்கிறாள். சிறிது நேரத்தில் ஹர்ஷா வர, ஒரு டிபன் பிளேட்டில் சுடச்சுட பொங்கலும், சட்னி, சாம்பார் வடையை வைத்துக் கொடுக்க அவன் தயங்குகிறான். "என்னப்பா இது? நீ பழையபடி இருக்கக் கூடாதா? ஏதோ கோபத்திலே தெரியாம மாமாகிட்டே சொல்லிட்டேன்."

"நீங்க சொன்னதுக்காக வருத்தப்படலே. ஆனா நீங்க என்னை தப்பா நெனச்சுட்டீங்களே."

"சாரி ஹர்ஷ். அவர் இல்லைன்னவுடனே என்ன செய்யறோம்னு தெரியாம செஞ்சுது. பிளீஸ் உங்க அண்ணியை நீ மன்னிக்கக் கூடாதா?"

"ஐயோ... என்ன அண்ணி மன்னிப்பு, கின்னிப்புன்னு பேசறீங்க. இருங்க அண்ணி."

அவன் டைனிங் டேபிளில் அமர்ந்து சாப்பிட, திருப்திகரமாகப் பார்க்கிறாள் சுகுணா. இருந்தும் முகம் வாட்டமாகத்தான் இருக்கிறது. அண்ணி இன்னும் என்று கேட்கும் சுவாதீனம் இன்று இல்லை. அவன் கேட்காமலேயே இன்னும் இரண்டு வடை வைக்கிறாள். "போதும் அண்ணி. பரவாயில்லை." அவன் தடுத்தும் இலைகளில் விழ, நேற்றும் சரியான சாப்பாடு இல்லையோ என்னவோ அவன் சற்று திருப்தியாகவே சாப்பிட்டான். சுடச்சுட காபியைக் கொண்டு வைத்த போது. "தேங்க்ஸ் அண்ணி" என்கிறான்.



"என்னப்பா இதெல்லாம்?" எதேச்சையாக எதிர் வீட்டை நோக்கி திரும்பும் போது ஹர்ஷாவின் மனைவி சிநேகா சட்டென்று காரித்துப்புவது தெரிந்தது. மெதுவாக தலையைத் திருப்புகிறாள். ஒரு தகாத பேச்சினால் வேண்டிய உறவுகளே எத்தனை கெட்டுப்போகிறது. உறவுகள் நாசப்பட்டு போனபின் மறுபடியும் சீர்திருத்த முடியுமா? சீர்திருத்தினால் ஒட்டுமா? மனம் மறுபடியும் பெருமூச்சு விட்டது. இதற்குள் கணவனையும் எழுப்பி, குழந்தைககளையும் எழுப்பி, தயார் செய்து, கணவனுக்கு வழக்கப்படி சுடு தண்ணியிலிருந்து துடைக்கும் துண்டு வரை கொண்டு வந்து வைத்து அவன் போட்டுக் கொள்ள கறுப்புக் கோடுகள், வெள்ளையில் அகலமான சதுரங்கள் போட்ட அந்த ஷர்ட்டையும் எடுத்துக் கொடுக்கிறாள். அவன் பழைய கதை எதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளாதவனாய் ஒரு நல்ல சராசரிப் புருஷனைப் போல சாப்பிடுகிறான். "இது என்னடா அதிசயம்? நான் சாப்பிட வரும் போதே இவனும் எழுந்துவிட்டான்."

"நீங்க தான் நேத்து குறைபட்டீங்க இல்லே." கண்களை சிமிட்டிக் கொண்டு சொல்கிறாள். வழக்கப்படி மாமனார், மாமியார், கணவன் எல்லோரும் சாப்பிட்ட பின் கணவன் கிளம்ப யத்தனிக்கையில், ஒரு. ஒரு மணி நேரம் தள்ளி கிளம்பும் மாமனார். "இருடா இன்னைக்கி நானும் உங்க கூட வரேன் என்றவர் இருவரும் சேர்ந்தே போகலாம்." கணவனின் முகம் மாறியது.

"ஏண்டா நான் வந்தா உனக்கென்ன அவங்க அவங்க அவங்க அவங்க வேலையை பார்க்கப்போறோம். நான் போய் என் டியூட்டியை ஆரம்பிக்கப் போகிறேன்."

"உங்களுக்கு இத்தனை சீக்கிரம் என்ன வேலை" மிக மெதுவாக ஆனால் சற்று அழுத்தமாக கேட்கிறான் சந்திரன்.

"என்னடா இது புதுசா இருக்கு கடை என்னுது; எப்ப நினைக்கிறேனோ அப்ப போவேன் தெரியுமில்லே."

Mithravinda 007

மௌனமாக ஏதோ முணுமுணுத்தவாறே அவனும் கிளம்ப சந்திரனின் முகத்தில் தவிப்பு தெரிந்தது. ஹர்ஷாவும் அவர்களுடனே தொத்திக் கொள்ள "என்னடா? உன் பைக் என்னாச்சு?"

"இல்லேப்பா நான் இன்னிக்கு உங்களோடவே வரப் போறேன்." சொல்கிறான் அவன். மூவரும் புறப்பட்டு போக, பத்ரகாளியாக எதிரே வந்து நிற்கிறாள் சிநேகா. 'வேண்டாம் எந்த ரசாபாசமும்' என்கிறாள். சிநேகா. "உம் புருஷனைக் காப்பாத்திக்க முடியலேன்னா, அதுக்கு ஊரான் வீட்டு புருஷன் எல்லாம் கேக்குதா?"

சகுனா ஒரு நிமிடம் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுவது போல் உணர்ந்தாள். இவளிடம் பேசமுடியாது. தன் எதிரே இருப்பவள் அண்ணி என்ற மரியாதை இல்லை. தன்னை விட வயதில் பெரியவள் என்ற உணர்வும் இல்லை. கோபத்தின் வசப்பட்டவளுக்கு கோபம் மட்டும் தான் தெரியும். கோபம் எல்லா நல்ல குணங்களையும் அழித்துவிடும் வஸ்து. கூடுமானவரை கோபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டால் நல்லது.

"ஏய் என்ன நான் கேட்டுகிட்டே இருக்கேன்? பதிலே இல்லை."

கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த மாமியார் அரவம் கேட்டு நின்றாள்.

"ஏம்மா பெரியவங்க, சின்னவங்கங்கற மட்டு மரியாதை உன் வீட்டிலே சொல்லிக் கொடுத்ததே இல்லையா?" எதைப்பற்றியும் கவலைப் படாத தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்கும் மாமியாருக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

சகுனா ஆச்சரியப்பட்டவளாய் அப்படியே நிற்க, "அத்தை உங்களுக்கு ஒன்னும் தெரியாது. இவ என் புருஷனை வச்சிருக்கா."



'பளார்' என்ற சத்தம் கேட்க, ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள் சகுனா. தன் மாமியாரா அறைந்தது. இரண்டு மருமகள்களையும் அத்தனை தூரம் பிடிக்காது தான். இருந்தாலும் தன் மாமியார் அதை வெளிக் காட்டிக் கொள்ள மாட்டார். ரொம்ப பட்டுக் கொள்ள மாட்டார். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவர். அவனே கோபம் வந்து அடிப்பதென்றால்.

"சே எதுக்கு என் பையனை காதலிச்சே. வெக்கமா இல்லே. தன் புருஷன் நல்லவனா, பொல்லாதவனான்னு கூட தெரியாதபடிக்கு என்ன பெரிய லவ். அவுங்க ரெண்டு பேரும் சின்ன வயசுலேந்து ஒண்ணா விளையாண்டவங்க. எதையும் தப்புன்னு நெனச்சுகிட்டு பூதக்கண்ணாடி போட்டு பாத்தா தப்பா தான் தெரியும். நல்ல மருமகளா, நல்ல மனைவியா இல்லேன்னா கூட பரவாயில்லே ஒரு பொம்பளையா நடந்துக்க."

தன் மாமியாரா இப்படி பேசுவது? அதிசயித்துப் போனாள் சகுனா. சகுனாவின் மனம் ஒரு நிலையில் இல்லை. சாதாரணமாக கோவிலுக்குப் போகும் வழக்கம் இல்லை. ஆனால் இன்று என்னவோ போகவேண்டும் போல் உள்ளது. தெளிந்த ஓடையாகப் போய்க் கொண்டிருந்த வாழ்வில் கல் எறிந்து குட்டையைக் கலக்கியது போல் கலக்கியவள் தன் தோழி. இல்லாததும் பொல்லாததும் சொல்லி தன் மனதில் சந்தேகத்தீயை வளர்த்து எல்லாமே கெட்டுவிட்டது. மனதை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மனம் ஆதங்கப் பட்டால் எல்லாமே நாசம் தான். குடும்பம், உறவுகள், நண்பர்கள் எல்லாமே போய்விடுகிறது. சுத்தமான நல்ல மனதில் தான் நல்ல விஷயங்கள் இருக்கும் எங்கேயும் நல்லதைக் காணும் மனதிற்கு எல்லாமே நல்லதுதான். போதும் தோழியாவது மண்ணாவது. இப்பேற்பட்ட தோழியை இனிமேல் கிட்டயே சேர்க்கக் கூடாது. சிறிது மனம் சுணங்கியதில் எத்தனைவித குழப்பங்கள். 'போதுமடா சாமி.' கோவிலுக்குப் போனாள். இராகு காலத்தில் துர்க்கைக்கு எலுமிச்சம் பழம் விளக்கு ஏற்ற வேண்டும். போதும்

Mithravinda 007

நான் கஷ்டப் பட்டது கடவுளே என் மனதிற்கு அமைதியைக் கொடு. நிம்மதியைக் கொடு. சுகத்தைக் கொடு. சற்று நிம்மதி பெருமூச்சு விட்டாள். எலுமிச்சம் பழத்தை பிழிந்து திருப்பி வைத்து திரி ஏற்றி எண்ணெய் ஊற்றி, விளக்கை ஏற்றி அம்மனை நமஸ்காரம் செய்து விட்டு, 'இனி கவலை இல்லை' என்று மனதை சாந்தப்படுத்தி வெளியே வரும் போது விமலி எதிரே வந்து நிற்கிறாள்.

'ஐயோ இவளா?' பார்க்காதது போல முகத்தை மூடிக் கொண்டு போக முடியாது. எதிரேயே நிற்கிறாள். லேசாக புன் சிரிப்பு சிரித்து விட்டு நகரும் போது.

"ஏய் நில்லுடி உன்னைப்பார்க்கத்தான் வந்தேன் வீட்டுக்கு போனா நீ கோயிலுக்குப் போனதா சொன்னாங்க."

"என்னடி?"

"அன்னைக்கு சொன்னேனே வா. கையும் களவுமா பிடித்துக் கொடுக்கிறேன்னு சொன்னேனே வா காமிக்கிறேன்."

"வேண்டாம் விடு போதும்."

"உனக்கு போதும் ஆனா நான் நிருபிக்க வேணாமா?"

"பிளீஸ் விட்டுடு."

"த பாரு எனக்காக வா நான் ஏன் பொய் சொல்லணும்? நான் நிருபிச்சாகணும் தயவு செய்து வா."

"போதும் வேண்டாம்மா இத்தோட விட்டுடு."

"வாடி இப்ப காமிக்கிறேங்கறேன் என்னவோ கதை பேசறியே." விறு விறுவென்று அவள் கையை எடுத்து பிடித்தபடி இழுத்துச் செல்கிறாள்.

இப்போது தான் எல்லாவற்றையும் மறக்க வேண்டும். எல்லாவற்றையும் சரி செய்ய வேண்டும் என்று நினைக்கும் போது இவள் ஒருத்தி. சுகுணாவிற்கு எரிச்சல் வந்தது.

"விடு விமலி விடு; மோசமா இருந்தா இருக்கட்டும்."



"இத பாரு உம் புருஷன் எப்படியாவது இருந்துட்டு போகட்டும். ஆனா என்னை மோசம்னு நெனச்சே இல்லை. நான் சொல்றது பொய்யின்னு தானே நினைச்சே. அதுக்காக நிருபிக்கணும்."

"ரொம்ப தேங்க்ஸ். நான் நம்பரேன். நீ போ."

"முடியாது. நீயும் வா." பிடிவாதம் பிடிக்கும் தோழியைப் பார்த்தாலே எரிச்சல் வந்தது. அவளை ஓங்கி அறைய வேண்டும் போல் ஆத்திரம் வருகிறது. வேண்டாம் பொறுமை காக்க வேண்டும். பதில் பேசாமல் அவளுடன் ஆட்டோவில் ஏறி உட்காருகிறாள். வாயைத் திறந்து நாலு வார்த்தை பேசி விடலாம். வேண்டாம்.

நாவடக்கம் தேவை. ஒருமுறை நாவடக்கம் இன்றி பேசியதால் தான் தன் குடும்பத்தில் இப்பேற்பட்ட குழப்பம். பல்லைக் கடித்துக் கொள்கிறாள். அந்த ஹோட்டலுக்குச் சென்று உள்ளே பார்த்தபோது வேறு யாரும் இல்லை. "போயிருக்கவே முடியாதே. இங்கதானே இருந்தாங்க. என் கண்ணாலே பார்த்தேன்." சிறிது நேரம் நின்று விட்டு மீண்டும் இறங்கி வந்த போது விமலி புலம்பிக் கொண்டிருந்தாள்.

"இந்தப் பக்கம் வாயேன்.. இங்க இருக்காங்களா பாக்கலாம்."

"இத பாருடி நீ சொன்னேன்னு வந்தேன்; அத்தை தேடிகிட்டு இருப்பாங்க. என்னை தயவு செய்து விட்டுடு; நான் கெளம்பறேன். அவர் கெட்டவர்னு சொல்றே. அப்படியே இருந்துட்டு போகட்டும். நீ சொல்றதை ஒத்துக்கறேன். இனிமேலாவது என்னிடம் வந்து, வந்து தொல்லை பண்ணாதே."

"த..பாரு.."விமலி ஏதோ பேச ஆரம்பிக்க, "போதும்டி உனக்கு ரொம்ப தேங்க்ஸ். உன் திசைக்கே ஒரு பெரிய கும்பிடு. தயவு செய்து எங்களை விட்டுடு." சொல்லிவிட்டு விறு விறு என்று நடந்த போது பின்னால் விமலா ஓடி வருவதைப் பார்த்து, எரிச்சல் உற்று, சரசரவென்று சந்து சந்தாக திரும்பி ஓட்டமும் நடையுமாக ஓடி வந்து அந்த பூங்காவிற்குள் நுழைந்து, அந்த செடி மறைவில் தன்னை மறைத்துக் கொண்டு நின்றாள்.

Mithravinda 007

'போய் தொலையட்டும் அவன் போன பிறகு போகலாம்.' பக்கத்தில் அடர்ந்த அந்த செடிகளின் நடுவே "சாப்பிடும்மா கொஞ்சம்." அவன் ஐஸ்கிரீமை சிறிது சிறிதாக ஊட்ட "ம்ஹீம் நீங்க.." என்று அந்த சிறுவயதுப் பெண் வெட்கப்பட சட்டென்று முகத்தினருகே குனிந்து அவள் இதழ்களிலிருந்து ஐஸ்கிரீமை சுவைக்க எதேச்சையாக பேச்சைக் கேட்ட கருணா அந்த ஜோடியைப் பார்த்து அதிர்ந்து நின்றாள்.



10

அங்கிருந்து எப்படி வீடு வந்து சேர்ந்தோம். எப்படி வெளியே வந்தோம் என்று கூடத் தெரியவில்லை. அவளுடைய கணவன் தான் ஏதோ ஒரு சிறிய வயது பெண்ணுக்கு ஊட்டுவதும் அந்தச் சிறு பெண் சிணுங்குவதும், தன் கண்முன்னே அவள் உதடுகளோடு உதடுகளை வைத்து அழுத்துவதும் இன்னும் பார்க்கக் கூடாதெல்லாம் தான் பார்த்ததை நினைத்து மனது எரிந்தது. துடித்தது. தவித்தது. கலங்கியது கதறியது. தன் கணவனுக்கு ஊட்டக் கூடத் தெரியுமா? பெண்ணின் மேல் விழுந்து புரண்டு இப்படி எல்லாம் கூட நடக்கத் தெரியுமா? எத்தனை பெரிய துரோகம். கணவன், கணவன் என்று பார்த்து, பார்த்து செய்ததற்கு தனக்கு சரியான பனிஷ்மெண்டு. இப்படி செய்ய எப்படி மனது வந்தது. எட்டு வருடங்கள் ஒரு பெண்ணோடு வாழ்ந்துவிட்டு, இன்னொரு பெண்ணின் புதுக் காதலனாக வர மனசாட்சி எப்படி இடம் கொடுக்கிறது? தன் கணவன் இத்தனை ஏமாற்றுக்காரனா? இத்தனையும் யோசித்துக் கொண்டு தான் நின்ற வேளையில் தோளோடு, தோள் சேர்த்து அந்தப் பெண்ணின் இடுப்பில் கை கொடுத்து அழைத்துச் சென்றாகி விட்டது. தங்கள் படு...

Mithravinda 0.07



அறையில் கூட கை மேலே பட்டு விட்டால் போதும் 'த்சு' என்று சொல்லி தள்ளி விடுவான். இங்கே நாலு பேர் பார்க்கும்படியாக இதென்ன அநியாயம். வேறு ஒரு பெண்ணாக இருந்தால் கையும் களவுமாக பிடித்து கடாசி இருப்பாள். தனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே. ஒரு வேளை தன் கணவனைப் போல வேறு ஒருவன் இருக்கிறானா?

குழம்பித் தவித்தாள். இந்தப் பெண் யார்? பார்த்தால் பளிச்சென்று இருக்கிறது. ஆனால் காதில் இருக்கும் பிளாஸ்டிக் தோடு, கழுத்தில் இருக்கும் மணி, மாலைகளைப் பார்த்தால் ரொம்ப ஏழையாக இருக்கும் போலருக்கு. அந்த சின்னப் பெண்ணை ஏமாற்றி, அந்தப் பெண்ணுக்கு சந்திரனுக்கு திருமணம் நடந்து விட்ட விஷயம் தெரியுமா? மனது துடிக்க, உணர்ச்சிகள் அழுந்த எப்படியோ தட்டுத் தடுமாறி வீட்டை அடைகிறாள்.

தனக்கு இந்த நேரத்தில் யார் உதவி செய்வார்கள்? மாமியாரிடம் சொல்லலாமா? காலையில் கூட தனக்காக பரிந்து பேசினார்களே. வேண்டாம் அவளின் பிள்ளைகளைப் பற்றி குறை சொன்னால் அவளுக்கு பிடிக்கவே பிடிக்காது. அது இமாலயத் தவறாகக் கூட இருக்கட்டுமே ஒத்துக் கொள்ள மாட்டார். மருமகள் ஒரு சிறு தவறு செய்து விட்டால் போதும் பின் சமயம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லிக் காட்டி சாடுவார். மாமனாரிடம் சொல்லலாமா? அவர் உடனே வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று ஆரம்பித்து காரியம் ரொம்ப விபரீதமாகப் போய் விட்டால், அதன் பிறகு அவளின் நினைவுக்கு வந்தவன் ஹர்ஷா ஒருவன் தான். சட்டென்று கடைக்கு போன் செய்கிறாள்.

"மாமா கொஞ்சம் ஹர்ஷாவை அனுப்ப முடியுமா?" சற்று பாவமாக கேட்க,

"என்னம்மா ஆச்சு?" முக்கியமான விஷயமா?

"இல்லை மாமா அவரைப் பார்க்க கோயம்புத்தூரிலிருந்து அவங்க பிரண்டு வந்திருக்காங்க."

"பேரென்னம்மா?"

"கேக்கலை மாமா" மாமா துறுவி, துறுவிக் கேட்க, அழுகை வந்தது இன்னும் சிறிது பேசினால் அழுது விடுவாள் போல் தோன்றியது. அவளின் குரலில் இருந்த பதட்டம், லேசான அழுகை அவரை ஒரு நிமிடம் யோசிக்க வைத்தது. மறு நிமிடம் "சரிம்மா அனுப்பறேன்." என்றார். ஹர்ஷாவைக் கூப்பிட்டு அனுப்புகிறார். அவன் வருவதற்கு முன் மனம் யோசனையில் ஆழ்ந்தது. 'ஏன் சுகுணா அழுதது போல் பேசுகிறாள்? ஒரு வேளை ஹர்ஷாவின் மனைவி ஏதேனும் பிரச்சனை பண்ணி விட்டாளா? மனது துடித்தது. அந்தப் பெண் ஏன் இப்படி இருக்கிறது? அவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிள்ளை ஒற்றைக் காலில் நின்று திருமணம் செய்து கொள்ளும் அளவிற்கு அந்தப் பெண் என்ன உசத்தி? மனது கஷ்டப் பட்டது. எதையும் கேட்க முடியாது. பிள்ளைக்கு தன் பெண்டாட்டியைக் குறை சொல்வதாகத் தோன்றும். வீட்டில் உள்ள பெண்மணிக்கு பொறுப்பு கிடையாதா? அதுவும் காதலித்து கைபிடித்தவளை சந்தோஷமாக வைத்துக் கொள்ளத் தோன்றாதா? ம்.. கலிகாலம்.'

இப்போதெல்லாம் பெண் ஒரு எட்டணா கொண்டு வந்தாலே போதும் புருஷன் கிள்ளுக் கீரையாகப் போய் விடுகிறான். வீட்டுத் தலைவன் என்ற மரியாதை அவனுக்கு அறவே இல்லாமல் போய் விடுகிறது. இந்தக் காலத்தில் எல்லாமே தான் தனது என்றாகி விட்டது. புருஷன் கூட இரண்டாம் பட்சம் தான். எப்படியோ போய் தொலைக்கட்டும்.

ஆனாலும் சுகுணா மாதிரி பெண் கிடைப்பதற்கு கொடுத்து தான் வைத்திருக்கனும். தன் கணவனை விட அதிகம் படித்தவள், திறமைசாலி, அதற்காக ஹாய் ஹூய் என்று குதித்ததில்லை. உண்மையிலே ஒரு வேளை ஒரே ஒரு வேளை அவள் அந்த வீட்டில் இல்லை என்றால் என்ன நடக்கும்? வயிறார சாப்பாடு, நாக்கின் ருசி அறிந்து, நல்ல மணத்தோடு, பார்த்தவர்களின் மனம் கோணாமல் கேட்டு, கேட்டு உபசரிப்பு,

Mithravinda 007



தன் வீட்டை மட்டுமல்ல மாமியார், கொழுந்தன் என்று எல்லார் வீட்டையும் பொறுப்பாக பார்த்துக் கொண்டு பார்த்து, பார்த்து செய்து தன்னலமில்லாமல், மரியாதையோடு எப்படி எல்லாம் நடந்து கொள்கிறது அந்தப் பெண். உண்மையிலே இவன் கிடைக்க தவம் தான் செய்திருக்க வேண்டும். அவளை மட்டும் ஹர்ஷாவின் மனைவி ஏதேனும் சொல்லியிருந்தால் கட்டாயம் மாலைக்குள் போய் இதற்கு ஒர முடிவு கட்ட வேண்டும்.

"என்னப்பா கூப்பிட்டீங்களா?" அவர் யோசனை கலைந்தது. ஹர்ஷா தான் வந்து நிற்கிறான்.

"ஹர்ஷா அண்ணி போன் பண்ணி உன்னை உடனே வரச் சொன்னது."

"என்னையா?"

"ஆமாம் ஏதோ பிரண்ட் உன்னை பாக்கனும்னு வந்திருக்கானாம். ஆனா நான் அப்படி நினைக்கலே. ஏதோ பிரச்சனைன்னு நினைக்கிறேன். உங்க அண்ணி குரலே அழுதது மாதிரி இருந்தது. உன்னைக் கூப்பிட்டதுனாலே பிராப்ளம் உம் பெண்டாட்டியாத்தான் இருக்கனும்னு நினைக்கறேன். எல்லோருக்கும் அவனவன் பெண்டாட்டி ஒசத்தி தான். இருந்தாலும் நியாயத்தையும் பார்க்கனும். அண்ணியோட கஷ்டம் என்னன்னு பார்த்து தீர்த்து வை. அவ இந்த வீட்டிலே எல்லோருக்கும் அம்மா மாதிரி, ஒரு வேளை அண்ணி தப்பு பண்ணியிருந்தா, விஷயத்தை பெரிசுபடுத்தாதே. எங்கிட்டே வந்து பேசு. நான் பாத்துக்கறேன்." அவன் விலகிச் சென்று விட்டபின்பும் யோசனையில் ஆழ்ந்தார் துரைசாமி.

ஹர்ஷாவிற்கு விசித்திரமாக இருந்தது. 'அண்ணி தன்னைக் கூப்பிடுவானேன். சுமுகமான உறவு அண்ணியின் சந்தேகத்தினால் சற்று திசை மாறித்தான் போய்விட்டது. இருந்தாலும் எனக்கு பிடிக்கும்னு காலைல டிபன் எடுத்து வைக்கலையா? என்னவாக இருக்கும்? குரல் அழுத மாதிரி தான் இருக்கனும்னு தோனுது.' அப்பா சொன்னதை யோசிக்கிறான்.

வீட்டை அடைந்து அன்னியைப் பார்க்கும் வரை இருப்புக் கொள்ளவில்லை. 'என் பெண்டாட்டி ஒரு வேளை நான் டிபன் சாப்பிட்டதை பெரிசுபடுத்தி, ஸ்கூலுக்கு லீவு போட்டு சண்டை போட்டிருப்பாளோ. அப்படி ஏதாலும் ஆகி இருக்கட்டும். பெண்டாட்டிகிட்டே குட்டை சொல்லிவிட வேண்டியதுதான். காதலிக்கும் போது தெரியாமல் போன குணங்கள். இப்பேற்பட்ட ராட்சசியாக இருப்பாள் என்று யாருக்குத் தெரியும்?'

அவன் வீட்டை அடைந்தபோது அண்ணி வெளி வராண்டாவில் நின்று கொண்டிருந்தாள். முகம் முழுவதும் சிவந்து வீங்கி, அழுதது போல் அவளை பார்க்கும் போதே பாவமாக இருந்தது. என்னோடு விளையாடிய என் தோழி அவள். அவளுக்கு ஒரு கஷ்டம் என்றால் எப்படி பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

"என்னாச்சு அண்ணி?"

"ஹர்ஷ்..." சொல்லும்போதே கண்கள் மடை திறந்தது. உள்ளே அழைத்துப் போனாலும் பேச்சு எழவில்லை. கண்கள் மட்டும் மழையைப் பொழிய வேதனையோடு பார்க்கிறாள்.

"அண்ணி ஏன் அழறீங்க? என்ன விஷயம்? எதுக்காக என்னை வரச் சொன்னீங்க? யாரோ பிரண்டுன்னு சொன்னீங்களாமே யார் அது?" அவன் கேட்க, கேட்க சற்று நேரம் கண்ணீர் வடித்தவள், "சாரி ஹர்ஷ்" என்கிறாள்.

"என்னாச்சு அண்ணி?" சற்று மிருதுவாக கேட்க. "சொல்லுங்க அண்ணி."

ஒருவாறு திக்கி திணறி சந்திரனை தான் வேறு ஒரு பெண்ணோடு பார்க்க கூடாத கோலத்தில் பார்த்ததைப் பற்றி சொல்ல, அவனும் மௌனமானான்.

லேசாக அதிர்ந்தது போல் தோன்றியது.

"அண்ணன் ஆறு மாசமாகவே வெளியே போறார். ஆனா இப்படின்னு நான் நினைக்கலே."

Mithravinda 007



"என் தோழி வந்து சொன்னப்போ நான் கூட நம்பலைப்பா. அவளை திட்டி அனுப்பினேன். இப்ப என்ன செய்யறது? ஒண்ணுமே புரியலேயே. அவர் பச்சைக் குழந்தை மாதிரி இருந்தாரே. இப்பிடியா ஒருத்தி வந்து மனசைக் கலைப்பா. மாமாகிட்டே சொல்லலாமான்னும் தெரியலே. அவரு விபரீதமா போயிட்டா. அதனால அந்த பொண்ணு யாருன்னு பார்த்து அதை மொதல்லே நிறுத்தணும். அவர் இல்லாம என்னால இருக்க முடியும்னு கூடத் தோணலை." மறுபடியும் அழ

"அண்ணி முதல்லே அழுகையை நிறுத்துங்க. என்ன செய்யணும்னு யோசிக்கலாம். அவனுக்கு ஏன் இப்படி புத்தி போகுதுன்னு தெரியலே? ரெண்டு குழந்தைகள், அன்பான மனைவி அப்படி இருந்தும் மனது அலை பாயுது? தெரியலையே. சரி கட்டாயமா எல்லாத்தையும் சரி பண்றேன். நீங்க அழாதீங்க. நீங்க இப்ப தைரியமாய் இருக்கணும் தைரியமாய் இருங்க. இப்ப சமைச்சுகிட்டு உக்காராதீங்க. இன்னிக்கு ஒரு நாள் ஹோட்டல் பார்த்துக்கறோம்." கிளம்பிச் சென்று விட்டான்.

அப்பாவிடம் சொல்லியே ஆக வேண்டும். அவர் அனுபவம் மிகுந்தவர். தகுந்த முடிவை எடுப்பார். கடைக்குச் சென்றவுடன் அப்பாவிடம் விலாவரியாகச் சொல்லுகிறான்.

"என்னடா சொல்றே? நெஜமாகவா? தெனம் போறான்னு சொல்றே ஏண்டா என் கிட்டே சொல்லலே" ஹர்ஷாவிற்கும் திட்டு விழுந்தது...

அவருக்கு பெரிய பிள்ளையின் மேல் ஆத்திரமும், கோபமும் வந்தது. உதவாக்கரை. எதுக்குமே போதாது என்றாலும் நேர்மையானவனாக இருக்கக்கூடாதா? கட்டியவளை விட்டுவிட்டு... கண்டவளோடு... சே. அப்போதே முடிவு செய்கிறார்.

"நாம் ரெண்டு பேரும் ஹோட்டலுக்குப் போயிட்டு அப்படியே நீ ஒரு பக்கம். நான் ஒரு பக்கம் கலெக்ஷனுக்கு

போறேன்னு சொல்லிடு. அவனைக் கடையில் இருக்க வேண்டும் என்று சொல்" கீழே உள்ளவர்களிடம் உத்தரவைப் பணித்து விட்டு சந்திரன் கீழே இறங்கும் நேரம் பின்பக்கம் ஒருவா, முன்பக்கம் ஒருவர் என்று மறைந்து கொள்ள.

கொஞ்ச நேரத்தில் வந்த சந்திரன் வந்த சில நிமிடங்களில் யாருக்கோ போன் பேசுகிறான். மறுபடியும் வெளியே செல்கிறான். ஒரு அரை மணி நேரம் கழித்து அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு காரை எடுத்துக் கொண்டு கடைக்கு இரண்டு தெரு தள்ளி ஒரு சந்தில் நிறுத்த, ஓடி ஓடி வருகிறாள் செல்வி.

நேற்று இருந்த நிலை என்ன? அம்மா 'என்னடி இது காயம்' என்ற கேட்ட போது 'பஸ் கம்பியிலே இடிச்சுட்டேன்' என்கிறாள்.

"கம்பியிலே இடிச்சா கழுத்துக்கு கீழே தோள்பட்டையிலே எப்படி காயமாகும்?" அம்மா பின்னி பின்னி கேட்கும் கேள்விகளில் தான் உளறிவிடுவோம் என்ற பயம் எழுந்தது.

"என்னம்மா பஸ்ல இடிச்சு புடிச்சி வரோம் அப்ப ஏதானும் பட்டிருக்கலாம் சும்மா தொணன்னு பேசாதே" இவள் சொல்லி முடித்தவுடன் அம்மா மௌனமாக கவலையுடன் பார்ப்பது தெரிந்தது. அப்பா வேறு அவருடைய தங்கை பையனைப்பற்றி சொல்லி சொல்லி மாய்ந்து போகிறார். "இந்த வாரக்கடைசிலே வருவான்மா" என்று வேறு சொல்லியிருந்தார்.

"இப்ப கல்யாணம் வேணாம்பான்னு சொல்லலாமா?" யோசித்தாள்.

"ம் ஹூம். அவர்கள் ஞாயிற்றுக்கிழமை வரட்டும். சனிக் கிழமை தன் கணவனை அவர்கள் முன் நிறுத்துவோம். நினைக்க நினைக்க சிரிப்பா வந்தது. இன்று காலை சீக்கிரம் புறப்பட்டு வந்த போது மூன்று முதலாளிகளும் ஒன்றாக வந்திருந்தார்கள். ஒரு நிமிடம் மனம் திடுக் திடுக் என்றது. ஒரு வேளை விஷயம் தெரிந்து விட்டதா? நல்ல காலம் அசம்பாவிதம் ஒன்றும் நடக்கவில்லை. ஒரு மணி நேரம் வாங்கிக்

Mithravinda 007



கொண்டு மாடிக்கு வந்ததாக போக்கு காட்டி விட்டு வெளியே வந்த போது சந்திரன் வந்திருந்தான். இரண்டு பேரும் மறுபடியும் ஊர்சுற்றல் தான் ஐஸ்கிரீம் கடைக்குப்போய் ஐஸ்கிரீம் ஊட்டி விட்டு ஒரே கலாட்டா செய்த இப்போது நினைத்தாலும் சிரிப்பு வந்தது செல்விக்கு."

மறுபடியும் கடைக்கு இப்போது தான் வந்தாள் அதற்குள் சந்திரனிடமிருந்து போன். செல்விக்கு முகமெல்லாம் சிரிப்பு சந்தோஷம். தன் மேல் எத்தனை ஆசையாக இருக்கிறான் தனக்காக எத்தனை செலவு செய்கிறான் இவனைப்போல் கணவன் பெற கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும் சந்திரன் கூப்பிட மறுபடியும் ஓட்டமும் நடையுமாக வெளியே வருகிறாள் காரில் அவனருகே அமர்ந்தபோதே "பார்க்காம இருக்க முடியாதா?" கொஞ்சலாகக் கேட்கிறாள்.

"இந்தப் பொண்ணு..." ஹர்ஷாவிடம் மெதுவாகக் கிசுகிசுக்கிறார் சந்திரனின் தந்தை.

"ஆறு மாசத்துக்கு முன்னாலே கடைலே புதுசா சேந்துச்சே அதுப்பா." ஹர்ஷா சொல்ல, சொல்ல துரை சாமியின் முகம் கடுகடுவென்று ஆனது. சந்திரன் அந்தப் பெண்ணின் கன்னத்தைக் கிள்ளுவதைப் பார்த்ததுமே முகம் ஜிவுஜிவுத்தது.

"ரொம்ப நல்லா இருக்கு. வயதானா விவேகம் வளரும்னு சொல்வாங்க. இவனுக்கு புத்தி இல்லேன்னாலும் நல்லதை செய்யணுங்கற அறிவு கூட கிடையாதா? இதெல்லாம் என்ன?" திடீரென்று அப்பா,ஹர்ஷாவைப் பார்த்ததும் திகைத்துப் போனான் சந்திரன். செல்வியும் ஒரு நிமிடம் பயந்து தான் போய் விட்டாள்.

"த.. இறங்கு கீழே." மிரண்ட செல்வி இறங்க.

"என் சொந்த வாழ்க்கையில் யாரும் தலையிட வேண்டிய தில்லை." சற்று பயந்தாற் போல இருந்த சந்திரன் துணிவோடு பேச.

"அடி செருப்பால" துரைசாமி சட்டென்று சந்திரனின் சட்டையைப் பிடிக்க 'அப்பா' என்று கத்துகிறான் சந்திரன். துரைசாமிக்கு மட்டுமல்ல, ஹர்ஷாவிற்கும் ஆச்சரியம் தான். அப்பாவையே எதிர்த்துப் பேசுகிறானே. "குழந்தைகள் இருக்கு எதுக்குடா இந்த பொழப்பு?" சந்திரன் வாய் திறக்கவில்லை.

"அம்மா உனக்கு அறிவு வேண்டாம். அவன் ஏற்கனவே கல்யாணம் ஆகி குழந்தைகளை பெத்தவன். தெரியாது." செல்வியின் மேல் பாய்கிறார், துரைசாமி.

"தெரியும்..." செல்வி மெதுவாக ஆனால் அழுத்தமாக சொல்லுகிறாள்.

"தெரியுமா? அவன் பெண்டாட்டியை பார்த்திருக்கியா நீ? பாத்துமா இப்படி ஒரு கல்யாணம் ஆனவனோடவா சுத்தறது. உங்க வீட்டிலே பெரியவங்க யாரும் இல்லையா?" ஒவ்வொரு வார்த்தைகளையும் நிதானமாகச் சொல்லுகிறார்.

"உங்க வீட்டு பொம்பளைங்க சரியில்லேன்னா கட்டினவன் என்ன செய்வான்."

"என்னது?" ஆத்திரம், கோபத்தோடு அவளை உறுத்துப் பார்க்கிறார் துரைசாமி.

"உள்ளதைத் தாங்க சொல்றேன்."

"என்னது உள்ளதை? இந்த தடியன் சொன்னானா? பெண்டாட்டியைப்பத்தி இல்லாததும் பொல்லாததும் சொன்னானா?" சந்திரனை பார்த்து கறுவுகிறார் துரைசாமி.

"அவரு ஏங்க சொல்லணும்? பார்த்தா நமக்கே தெரியாது." செல்வி சந்திரனை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாள்.

"நீ என்ன பாத்தே. அறிவு கெட்டத்தனமா பேசாதே. இந்த மாதிரி ஒரு சோம்பேறியை உதவாக்கரையை வச்சு வாழறாளேன்னு சந்தோஷப்படு."

அவருக்கு இருந்த ஆத்திரத்தில் இன்னொரு பெண்ணின் முன்னால் பிள்ளையை இறக்குகிறோம் என்ற உணர்வு கூட அற்றுப் போனது.

Mithravinda 007



"இத பாருங்க. அவரு உங்க பிள்ளை தான் இல்லேங்கலே. அதுக்காக அசிங்கமா பேசினா சும்மா இருக்க மாட்டேன்." சொல்வி சட்டப்படி தாலி கொண்ட மனைவி போல் சந்திரனுக்காகப் பரிந்து பேச.

"ஏய் பெரியவங்க சின்னவங்கன்னு மரியாதை இல்லாம..." ஹர்ஷா பல்லைக் கடிக்க, முஷ்டியை உயர்த்த.

"டேய் என் சொந்த விஷயத்தில் நீ தலை இடாதே. இல்லேன்னா உம் பொண்டாட்டி சொன்னதைத்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கும்." சந்திரன் தம்பியைப் பார்த்து முறைத்தபடி பேசி மிரட்ட.

நிலமை சற்று விபரீதமாகப் போவதைப் பார்க்கிறார் துரைசாமி. மேலும் மேலும் தகராறு வளர்ப்பதில் என்ன பிரயோசனம்? பிள்ளை தவற்றை செய்து விட்டு தைரியமாய் அமர்ந்து இருக்கிறான். எத்தனை தைரியம் அவனுக்கு.

"சரிம்மா போனது போகட்டும் நாளைலேர்ந்து உனக்கு வேலை கிடையாது. அதுக்கு பதிலா ஐயாயிரம் ரூபாய் தரேன். வாங்கிட்டு போயிடு. எம் பிள்ளையை அதுக்கப்பறம் பார்க்கக் கூடாது."

"எனக்கு அவரு புருஷன் அவரைப் போய் விலை பேசறீங்களே?" செல்வி சொல்ல, சொல்ல ஹர்ஷா எரிச்சலுற்று கொந்தளிக்கிறான்.

"அப்பா போலீஸ்லே புகார் பண்ணிட்டா எல்லாம் சரியாயிடும். ஏற்கனவே கல்யாணம் ஆனவனை மயக்கி, குடும்பத்தை குட்டிச் சுவராக்கிட்டு எதிர்த்து வேற பேசுது. கொஞ்ச நாள் உள்ளே போனா சரியாயிடும்."

"இருடா." ஹர்ஷாவை சமாதானப்படுத்துகிறார் "எதையும் போட்டு உடைக்கும் தருணமல்ல. நிலமை விபரீதமானால் நமக்குதான் பெரும் நஷ்டம். "இத பாரும்மா கடைசியா சொல்றேன். பணம், கிணம் வேணும்னா தரேன். ஓடிப் போயிடு. இன்னொருத்தர் வாழ்க்கையை கெடுக்காதே." நல்லதனமாக சொல்லிப் பார்க்கிறார்.

"அதே தான் நான் உங்களுக்கு சொல்றேன்." அவரின் குரல் சற்று இறங்க ஆரம்பித்ததும் செல்வியும் தைரியமாகப் பேசுகிறாள். அவரை எதிர் கொள்கிறாள்.

"ஏய் இறங்கு நீ." ஹர்ஷா கோபத்தின் உச்சியில் இருந்தான். காரின் கதவைத் திறந்து அவளை வெளியே தள்ள.

"டேய்" சந்திரன் அவனை அடிக்கப் போக, துரைசாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சந்திரன் செல்வியின் கையைப் பிடித்துக் கொண்டு காரை விட்டு இறங்குகிறான். "இவ தான் இனிமே எனக்கு எல்லாமே. வாம்மா, நாம போவோம்." அவன் தோள் மேல் கை போட்டவாறே கிளம்பிப்போக என்ன சொல்லியும் நிற்காமல் அங்கிருந்து கிளம்பும் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர் சந்திரனும், செல்வியும். துரைசாமி இடிந்துபோய் அமர்ந்திருந்தார். பையன் வடிகட்டின முட்டாள் என்று தெரியும் ஆனால் மோசமானவனாக இருப்பான் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. வீட்டிற்கு வந்து மருமகளிடம் பேசியபோது, ஏற்கனவே புயலில் அகப்பட்ட நாணல் போல் இருந்தவள், ஒரு வழியாக சரிந்து தான் போனாள். சதா அழுகை தான்.

காலையிலிருந்து காபி, டிபன், சமையல் எதுவுமே இல்லை. சதா கண்களில் ஈரம் வற்றும் வரை அழுகை. ஒரு மூலையில் சுருண்டு கொண்டு. எப்போதும் தூக்கிப் போட்டது போல் பேசும் மாமியார் கூட மருமகளின் நிலை கண்டு பச்சாதாபப்பட்டாள். மாமியாரைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் கடுகளவு திறமை இருந்தாலும் ஊதி பெரிது படுத்தி விடுவாள். மலையளவு திறமை இருக்கும் மருமகளின் திறமையை புகழாவிட்டாலும் குறைகளை மட்டும் அடிக்கடி சொல்லிக் காட்டுவாள்.

ஹர்ஷாவும், துரைசாமியும் தான் எல்லாவற்றையுமே பார்த்துக் கொள்ள நேரிட்டது. மருமகள் பார்க்காத வீடு துடுப்பு இல்லாத படகானது. மூன்று நாட்கள் ஓடியே போனது. சந்திரன் போன இடம் தெரியவில்லை. இதற்குள் ஹர்ஷா போலீசில் ஒரு கம்ப்ளெயிண்டு கொடுத்துவிட்டான். 'விஷயம் வெளி வராது

Mithravinda 007



காதும் காதும் வைத்தாற் போல் கண்டு பிடிக்க வேண்டும் என்ற வேண்டுகோள். அவனைப் பற்றி தெரியவே ஒரு இரண்டு நாட்களுக்கு மேல் ஆனது. இரண்டு நாட்களாகத் துடித்துக் கொண்டிருந்த சுகுணா அவனைப் பார்க்கத் துடியாய் துடிக்கிறாள்.

"மாமா நான் போறேன். அவரைப் பார்க்கணும். அவரைப் பார்த்து நாளாச்சு. பிளீஸ்" அவனைப் பார்க்க ஓடினாள். செல்வியின் வீட்டுக் குடிசையில் அங்கே இருக்கும் படுக்கையில் படுத்தபடி இருக்கிறான் அவள் கணவன். குடிசை தான் என்றாலும் பளிச் என்று சுத்தமாக உள்ளது "என்னங்க.." சுகுணா மெதுவாகக் கூப்பிட விருட்டென்று எழுந்திருக்கிறான் கணவன். சுகுணாவின் கூடவே போலீஸ்.

"என்ன சார் இதெல்லாம் வீட்டுக்குக் கிளம்புங்க." சற்று அதட்டலாக இன்ஸ்பெக்டர் கூற.

"அதெல்லாம் நான் வர முடியாது" கறுவுகிறான் கணவன்.

"அப்ப சட்டப்படி ஆக்ஷன் எடுக்க வேண்டியிருக்கும். இதுக்கெல்லாம் காரணமான அந்தப்பெண்ணை கைது பண்ண வேண்டியிருக்கும்" சற்று மிதப்பாக எரிச்சலுடன் கேட்கிறார் இன்ஸ்பெக்டர்.

"சார் இது மாதிரி எல்லாம் வரும்னு எனக்குத் தெரியும் என் இஷ்டப்படி தான் இங்கே வந்தேன். நான் இங்கே வருவது என் இஷ்டம் என் உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது. என் வீடு எனக்குப் பிடிக்கலை. சுதந்திரம் இல்லாத ஜெயில் அது எதுவாக இருந்தாலும் என் வக்கீல் மிஸ்டர் கோபிகிட்டே பேசுங்க."

சுகுணா அதிர்ந்து போய் நின்றாள் தன் கணவனின் வார்த்தைகளில் இத்தனை கொடுமைகளா! தான் அவன் சுதந்திரத்தில் என்ன தலையிட்டோம்? தன் கணவன், தன் கணவன் என்று பார்த்து பார்த்து செய்ததற்கு இத்தனை தண்டனைகளா?

"ஏங்க இப்படி எல்லாம் பேசறீங்க?" சட்டென்று கண்களில் நீர் வந்தது. ஏற்கனவே ஒட்டி உலர்ந்த முகம் இன்னும் உலர்ந்து போய் கண்களால் அழுததனால் சிவந்து சுருங்கி போய் தலை எல்லாம் கலைந்து பார்த்தாலே மனம் உருகிப்போகின்ற நிலையில் இருந்தாள்.

"உன்னைப்பார்க்கவே பிடிக்கலை, ஒழிஞ்சு போ" பற்களை கடிக்கிறான்.

"நான் என்ன தப்பு செய்தேன்?" பாவமாகக் கேட்கிறாள்.

"புருஷன் கெட்டவன்னு சொல்லி போலீஸ்காரனை அழைச்சிக்கிட்டு வந்திருக்கிறாயே."

"இல்லீங்க நான் அழைச்சிகிட்டு வரலை மாமா தான்... ஹர்ஷா"

"தெரியும்டி யாரவன்? உனக்கு அவன் செய்யலாம். எனக்கு யாரும் செய்யக்கூடாதா? போடி வெளியே" எத்தனையோ பேச முயன்றும் 'வெளியில் போ' என்று கணவன் அதட்டிச்சொல்ல, மௌனமாக அழுதுக்கொண்டே வருகிறாள். 'சுகுணா' என்பதற்கு மேல் பேசாதவன் சமீப காலமாக நெருப்புத் துண்டங்கள்தான் வாயில் வருகிறது. தன்னை பிடிக்கவில்லையாம். அவன் சுதந்திரத்தை பிடுங்கிக் கொண்டு விட்டேனாம். வீட்டிற்கு வந்ததும் அதை நினைத்து, நினைத்து அழுதாள். துரைசாமிக்கு விஷயம் தெரிந்ததும் கொதித்துப் போனார். ஹர்ஷா, மாமியார் எல்லோருமே வேதனைப் பட்டனர்.

சிநேகாவிற்கு சந்தோஷமாகவே இருந்தது. 'என்னமோ எல்லாமே இவளுக்குத் தான் தெரியும் என்ற மமதையில் எத்தனை ஆடிக் கொண்டிருந்தாள். நன்றாக வேண்டும் என் சாபம் பலித்தது. சந்தோஷமாக இருந்தது.

"சிநேகா. பாரு அண்ணி படுத்துட்டாங்க. போய் டிபன், காபி ஏதானும் செய். மதியத்துக்கும் எதானும் செய்து வை. அப்பா அம்மாவுக்குத்தரனுமில்லே." அவன் சொல்ல, சொல்ல அவனை எரித்து விடுவதைப் போல பார்க்கிறாள், கணவன் அறைந்ததால் கணவன் மேல் கோபம், மாமியார் தன்னை

Mithravinda 007



அடித்ததால் மாமியாரைப் பார்த்தாலே வெறுப்பு. இத்தனைக்கும் காரணமான சுகுணாவைப் பார்த்தாலே கொன்று போட்டு விடலாம் போல ஒரு உணர்வு.

"ம்.. என்னது சமையலா? என்னால முடியாது."

"சிநேகா ஸ்டுபிட் போல பேசாதே. அண்ணி இருந்தா பரவாயில்லே. அவுங்க எதையும் செய்யற மன நிலையில் இல்லை. குழந்தைங்க வேறு பள்ளிக்கு போகணும்."

"என்னால முடியாது."

"இப்படி பேச உனக்கு வெட்கமாயில்லே. ஒரு பொம்பளையா இருந்துகிட்டு சமைக்க யாராவது யோசிப்பாங்களா?"

"ஏன் உங்கம்மா இல்லே.?"

"என்னது" மறுபடியும் ஆத்திரத்துடன் கை ஓங்க.

"ஏய் இந்த வேலை என் கிட்டே வச்சுக்காதே. நான் திருப்பி கை ஓங்கினா நீ அசிங்கப்பட்டு போயிடுவே. நீயா என்னிக்கு பெண்டாட்டி தான் எல்லாம்னு வரியோ அப்பதான் நான் உனக்கு பெண்டாட்டி."

"சிநேகா.."

"போய்யா.." விறுவிறுவென்று உள்ளே சென்று ஸூட்கேஸில் தன் துணிகளை அடுக்கிக் கொண்டு அவள் கிளம்புகிறாள்.



11

"போடி போ..." இனிமே புருஷன். லவ்வர்னு வந்தே உன்னை கிட்டே கூட சேக்கமாட்டேன். ஹர்ஷாவும் தன் பங்குக்கு கத்துகிறான். துரைசாமியின் காதுக்கு விஷயம் போன போது எரிச்சல் உற்றார்.

"புத்தி இருக்கா உனக்கு? ஏற்கனவே வீடு எரிஞ்சுகிட்டு இருக்கும் போது பின்னும் ரெண்டு கட்டையை வச்சு விசிறி விட்ற மாதிரி இருக்கு இந்த பிரச்சனையை ஏன் கெளப்பிறே? பேசாமல் ஹோட்டல்லே சாப்பாடு எல்லாம் வாங்கிட்டு இருக்கலாம் இல்லே." ஹர்ஷா மௌனமாகிறான்.

வீட்டை விட்டு போன சிநேகா நடந்தவைகளை சற்று மாற்றிச் சொன்ன போது எல்லோருமே எரிச்சல் உற்றனர்.

"நீ போகாதடீ நீ வேணுமின்னா அவன் இங்கே வரட்டும்." என்கிறான் அண்ணன். அண்ணியும் அதை ஆமோதித்தாள். அண்ணன் மூன்று அக்காள்களோடு பிறந்தவள் சிநேகா. இவள் தான் கடைக்குட்டி தங்கை சற்று பெரிய இடத்தில் வாக்கு பட்டதால் தேவையான நேரத்தில் உபயோகப்படமாட்டாளா என்ற நம்பிக்கை அவனுக்கு அண்ணன். ஏதாவது திட்டுவானோ என்று பயந்தவளுக்கு நிம்மதியாகி விட்டது. தன் கணவன் தன் வழிக்கு வரும்வரை இங்கயே இருந்து போக்கு காட்டலாம். நிம்மதியாக வேலைக்குப் போகலானாள்.

பின்னும் சில நாட்கள் சென்றது. மறுபடியும் கணவனைப் பார்த்து பேச புறப்படுகிறாள் சுகுணா. குழந்தைகளை கவனித்துக் கொள்வது அவளையே வேளாவேளைக்கு. சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவது என்று அவளின் வேலைகளையும் துரைசாமியும் ஹர்ஷாவுமே பங்கு போட்டுக் கொண்டு செய்கிறார்கள்.

அன்று சுகுணா புறப்பட்ட போது, "ஏம்மா சுகுணா நீ போய்த்தான் ஆகணுமா?" அவள் சென்று அவமானப் படுவதில் துரைசாமிக்கு விருப்பமில்லை.

"போய் பார்க்கிறேன் மாமா."

"நீ சொல்றது சரிதாம்மா. இருந்தாலும் எட்டு வருஷம் உன்னோடு வாழ்ந்துட்டு இனிமே உன்னோடு வாழ மாட்டேன்னு அவன் சொல்லும் போது, உனக்கும் தன்மானமில்லையா? விட்டுவிட வேண்டியது தானே."



மாமனவையே பாவமாகப் பார்க்கிறாள். சொந்த மகனையே யாரோ போல் எப்படி பாவிக்க முடிகிறது? "என்னம்மா சொந்த மகனையே அந்நியமாக நினைக்கறேன்னு பாக்கறியா? வேற என்னம்மா செய்யறது? உன்னை என் சொந்த மக மாதிரி நெனச்சிருக்கேனே. அதனால்தாம்மா." சுகுணா பெருமூச்சு விடுகிறாள்.

தனக்கு ஏன் இப்படி எல்லாம் நேரிடுகிறது? அழகில்லாத சாதாரண தோற்றத்தோடு இருக்கும் பெண்களோடு எல்லாம் கணவர்கள் வாழ்வதில்லையா என்ன? தனக்கு மட்டும் ஏன் இப்படி? மறுபடியும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

"இல்லை மாமா இது கடைசி சான்ஸ். பார்க்கலாம். அவர் மனசு மாறுவதற்கும் கொஞ்சம் டைம் கொடுக்கலாமே. ஒருவேளை கோபத்தில் கூட அவர் அப்படி பேசியிருக்கலாம். இப்ப நெனச்சு வருத்தப்படலாம்."

இப்படி பேசும் மருமகளிடம் அதற்கு மேல் ஒன்றுமே பேசவில்லை துரைசாமி.

செல்விக்கு அவ்வப்போது யோசனை. தான் செய்தது தவறா? பேசாமல் இந்த விவகாரத்திலே மாட்டாமல் இருந்திருக்கலாமோ? அன்று செல்வியும், சந்திரனும் துரைசாமியால் விரட்டபட்டபின். செல்வியை அழைத்துக் கொண்டு பஸ் ஏறிய பின் செல்வி அவனை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். எப்படியும் அம்மா அப்பாவை அவருக்கு அறிமுகப்படுத்தணும். பாவம் தன்னால் அனாதையாக நிற்கும் தன் கணவனைக் காணக்காண அழுகை வந்தது. தன்னால் தானே அவனுக்கு இந்த நிலமை. பாவம் அவன். தன் வீட்டிற்கு முதலில் எப்படி அழைத்துச் செல்வது? அவனால் குடிசையில் வசிக்க முடியுமா? சரி முதலில் தான் இருக்கும் இடத்தில் ஒரு ரூம் எடுத்துக் கொள்வோம். பின் அவனை அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தலாம். ஆனால் இறங்கியபடியே அப்பா எதிரே வந்தார். ஒரு நிமிடம் அதிர்ந்தாள். பின் 'வாங்க' என்று திரும்பி சந்திரனை அழைத்தாள்.

Mithravinda 007

"அப்பா எங்க கம்பெனியோட முதலாளிப்பா."

"வணக்கம் சார்" அப்பா சொன்னாலும் கண்கள் 'அவரை ஏன் அழைத்து வந்தாய்?' என்றது. நேராக தன் குடிசைக்கு அழைத்து வந்தாள். சலவைக்கல் பதித்த மாளிகையில் வாழ்பவனைக் குடிசையில் அழைக்கையில் வெட்கம் பிடுங்கித்தின்றது. இன்னும் கொஞ்ச நாட்களில் அவனுக்கு என்று மிக அழகான வீட்டை இங்கே கட்டி விட வேண்டும்.

"மன்னிச்சிடுங்க" மன்னிப்பு கேட்கும் தொனியில் அவள் கேட்க, அவன் பதில் பேசவில்லை. "அம்மா அந்த பெட்டை எடுத்துப் போடு" அவன் அமர ஒரு நாற்காலி போட்டு, அவனை உட்கார வைத்து, விஷயம் தெரிந்த பின் வீட்டில் ஒரே அமர்க்களமாகி விட்டது.

"என் தங்கச்சி பையனைக் கட்டுவேன்னு நெனச்சுகிட்டு இருந்தா ஏண்டி சனியனே இப்படி பண்ணிட்டு வந்திருக்கே."

"சனியனே ஏன் இப்படி செய்தே? அந்தப் பையன் என்ன ஜாதி?" இது அப்பா.

"அப்பா அவரை யாருன்னு நெனச்சீங்க? அந்தப் பெரிய நவுலிக் கடையின் முதலாளி. இரண்டு கார் இருக்கு. கல்லு மாதிரி வீடு இருக்கு. ரெண்டு பிள்ளைகள் தான். நீ பார்த்த மாப்பிள்ளையை விட பத்து மடங்கு அவர் உயர்ந்தவர்." அவனை உள்ளே உட்கார்த்தி வைத்து விட்டு அம்மா, அப்பா பெண் பேசிக் கொண்டார்கள்.

"அம்மா அவரை அழைச்சுகிட்டு வந்துட்டேன். வாயைத் திறக்காதே." அவள் திடமாக சொல்லவும், கடைசியில் விவாதம் முடிந்து ஒரு அரை மனதுடன் ஒத்துக் கொண்டனர். என்ன தான் முன்பின் தெரியாதவன் என்றாலும், பெரிய பணக்காரன் என்றதும் கொஞ்சம் சந்தோஷமாகியது. பின் கருணா பேசிசேர வந்தபோது அவனுக்கு ஏற்கனவே திருமணம் ஆன விஷயம் தெரிந்து வீட்டில் இருந்தவர்கள் கொதித்து விட்டனர். அம்மா அப்பா எல்லோருமே செல்வி செய்தது தவறு என்றும் அவனை அனுப்பிவிடுமாறு கூற, செல்விக்கு என்ன



செய்வதென்றே தெரியவில்லை. கடைசியில் அவனை அழைத்துக் கொண்டு தனிக் குடிசைக்குச் சென்று விட்டாள்.

அவனுக்கு மீன், காடை, கவுதாரி என்று விதவிதமாக ஆக்கிப் போட்டாள். அவளிடம் இருந்த ரூபாய் கரையும் வரை ஒன்றும் கஷ்டம் தெரியவில்லை. இந்த பத்து நாட்களில் அவள் வைத்திருந்த ரூபாயெல்லாம் காலியாகி விட முதன் முறையாக செல்விக்குத் தவிப்பு ஏற்பட்டது. செல்வியின் தாய் தந்தை பெண்ணைப் பார்ப்பதையே தவிர்த்தனர். பேசுவதையும் தவிர்த்து விட்டனர்.

பணம் இல்லாமை, அவளும் அவனும் திருமணம் நடைபெறாமல் ஒன்றாக இருப்பதைப் பார்த்த ஊராரின் பரிகாசம், மலையாக இருக்கும் செலவுகள். போதா குறைக்கு பதினைந்து நாட்களில் வீட்டுக்காரன் வந்து வாடகைக்கான அட்வான்ஸ் கேட்டு இல்லை எனதிட்ட ஆரம்பிக்க அழுகை வந்தது. அவன் தன் வீட்டில் இருக்கும் போது காதலிப்பது எத்தனை சுகமாக இருந்தது. அவன் பாட்டிற்கு வருவான். காரில் அழைத்துப் போவான். ஐஸ்கிரீம், ஹோட்டல், சினிமா என்று சுற்றியதுண்டு. ஆனால் இன்றைய நிலைமை. தன் வீட்டுக் குடிசையில் படுக்கையில் எப்போதுமே படுத்துக் கொண்டு இருக்கிறான். வாடகைக்கு வாங்கிய கலர் டிவி வேறு நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கிறது. டிவிக்காரனுக்கு வேறு வாடகைக்கு காசைத் தரவேண்டும். நாளும், அவனும் எந்த வேலைக்கும் போகாமல் இப்படியே இருந்தால் இனிமே சமாளிக்க முடியாது போலிருக்கு. சில சமயங்களில் ஓ வென்று கதறி அழ வேண்டும் போல் ஒரு உணர்வு.

திருப்பி திருப்பி அவனுடன் கூடி குலாவி, படுத்து எல்லாமே போர் அடித்தது. அன்று அம்மாவின் வீட்டிற்கு சென்று அவளிடம் சிறிது பணம் கேட்கலாம் என்று போன போது அம்மா தெருமுனையிலேயே நிறுத்தி 'இனிமேல் வராதே' என்று சொல்ல, அப்பாவும் சேர்ந்து கொண்டார். "இந்த பரு செல்வி இந் நீயா தேடிக்கிட்ட வாழ்க்கை. இதுக்கு நீயா உழைக்கக்க. எ வீட்டு பணத்து வராதே என்னைப் பொறுத்தவரை பொன்னு

Mithravinda 007

செத்து போயிடுச்சு எப்ப அப்பன் ஆத்தாவுக்கு அடங்காத தண்ணிச்சையா போச்சோ இனிமே அதுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உன்னைப் பார்க்கையிலே வெட்டு போடலாம் போல் வருது இனிமே இந்த தெரு பக்கம் வராதே" அப்பா அரிவாளைக் கையிலே எடுத்து விட... அதன் பிறகு அவள் மறந்தும் அங்கே போகவில்லை.

பக்கத்து வீட்டு அம்மாவிடம் கடன் கேட்ட போது "ஏம்மா இதென்ன யாருக்குமே கல்யாணம் ஆவலையா என்ன? எல்லோரும் அவுங்க அவுங்க பொழைப்பை பார்க்க போகலையா என்ன? த பாரு எம் பேத்தி கல்யாணம் ஆகி இரண்டாவது நாளே கொளத்து வேலைக்கு போவுது நட்டு இல்லாம என்ன செய்யறது?"

அவளுக்கும் இந்த உபதேசம் சரி என்று பட்டது முதலில் தான் ஒரு வேலைக்கு போய்விட வேண்டும். பிறகு அவனுக்கு மேனேஜர் வேலை போல் பார்த்துக் கொடுத்தால் அதற்குள் மாமனாரின் சொத்தில் பங்கு வந்து விட்டால் ஒரு நல்ல வீடு வாங்கி, இங்கயே ஒரு ஜவுளிக் கடையும் வைத்து விடலாம். அவர் கடையை பார்த்துக் கொள்ளட்டும் அதுவரை ...



போனவிடாளைக் கலந்து கொடுத்துவிட்டு அவனும் பல தேய்க்காமலேயே குடித்து விட்டு படுத்து மறுபடியும் தூங்கிக் கொண்டிருந்தான். பெருமூச்சு விடுகிறாள் மதியம் முட்டைக்கோஸ் என்று வேறு செய்ய வேண்டியிருந்தது. பணம் வந்து விட்டால் போதும் வாழ்க்கை அவனோடு சொர்க்கம் தான்.

வாசலில் ஏதோ கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டபோது திடுக்கிட்டுப் போய் திரும்பி பார்க்கிறாள் செல்வி. சந்திரனின் மனைவி சுகுணாதான் வந்து கொண்டு இருக்கிறாள். இவளிடம் என்ன பேசுவது? ஏனோ அவளைப் பார்க்கையிலே கோபம் வருகிறது. ஆனால் எதுவும் பேசவும் தோன்றவில்லை.

"அவுங்க தூங்கிகிட்டு இருக்காங்க. அப்புறம் வரலாம்" சொல்ல, சொல்ல லட்சியம் செய்யாமல் சுகுணா வேகமாக உள்ளே நுழைகிறாள்.

அன்றைக்கு பார்த்ததை விட பாதியாக இருந்தாள் சுகுணா. கணவன் ஒரு குடிசை வீட்டினுள் ஒருக்களித்துப் படுத்திருப் பதைப் பார்த்ததும் அசந்து போகிறாள். உடல் மெலிந்து, கன்னங்கள் ஒட்டிப் கண்களில் கருவளையம் கட்டிப் போய், ... பாதியாக நின்றாள்.

Mithravinda 007

"என்னங்க வீட்டுக்கு வரீங்களா? ஏங்க உங்களுக்கு தலை எழுத்து? நான் என்ன அப்படி தப்பு செய்தேன்?" சொல்லும் போதே அழுகை வந்தது.

"எங்கே வந்தே?"

"நம்ம வீட்டுக்கு போகலாம் வாங்க."

"போலீஸை கூப்பிட்டுகிட்டு வந்தே இல்லே."

"நீங்க எங்கேன்னு தெரியிலையே. ரெண்டாவது பிள்ளைகளும் நீங்க இல்லாம ஏங்கிடுச்சு." கூசாமல் பொய் தான் சொல்கிறாள். பிள்ளைகளுக்கு அவன் இருந்தால் போதும். அப்பா என்றாவது கிரிக்கெட் விளையாட, கார்ட்ஸ் ஆட, கேரம் போர்ட் ஆட என்று வருவான். வந்தாலும் சிறு பிள்ளைகளோடு பிள்ளையாக சண்டை போடுவான். தோற்றால் ஒப்புக் கொள்ள மாட்டான். அதனால் பிள்ளைகளுக்கு அப்பாவை பிடிக்காது அவனை அதிகமாகவும் பிள்ளைகளுக்குப் பழக்க மில்லை.

"நீ போகலாம்."

"பிளீஸ். நடந்தது நடந்து போச்சு வந்திடுங்க. நம்ம வீட்டுக்குப் போயிடலாம்." கண்கள் குளமாக, மறுபடியும் கெஞ்சுகிறாள்.

"ம்... வரமாட்டேன்." சிறிது நேரம் நிற்கிறாள். மனது அவனைத் தொடக் கூடத் தயங்குகிறது. இனி மேல் இவன் வந்தாலும், தன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியுமா? 'சுகுண், சுகுண்' என்று கூப்பிட்டுக் கொண்டு சோம்பேறித்தனமாக புரண்டு படுக்கும் தன் அன்புக் குழந்தை எங்கே? பாலைக் குடிக்கக் கூட சோம்பேறித்தனம். கலந்து கையில் கொடுத்தால் கூட குடிக்காமல் யோசிப்பான். எப்போதும் டி.வி பார்த்துக் கொண்டே படுத்துக் கொண்டே இருக்கும் சின்னக் குழந்தை அவன். இத்தனை கடுமையும் வெறுப்பும் எங்கிருந்தது வந்தது ஒரு எட்டு வருட வாழ்க்கையில் ஏற்பட்ட சலிப்பா, கசப்பா? கட்டாயம் சலிப்பாகத் தான் இருக்க வேண்டும். பார்த்த முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் சலிப்பு. கட்டாயம் கசப்பு இருக்க முடியாது. கசப்பு வரும்படி தான் என்ன செய்தோம்?

Mithravinda 007



வீடு போய் சேர்ந்த போது மாமா இவளை பாவமாக பார்த்தார். அவரைப் பார்த்ததுமே உடைந்து போனாள். "என் மேல் வெறுப்பு வரும்படி என்ன செய்தேன்? தெரியலையே மாமா. ஓவரா அன்பைக் காட்டினா வெறுப்பா மாறிடுமா? என் அன்பால அவரை கட்ட நினைக்கலையே. அவருக்கு தேவையானதைதானே செய்தேன்."

"பாத்திரம் அறிந்து பிச்சை இடு. கேள்விப் பட்டதில்லையா பாறைல ஊற்று இருக்கும்னு எதிர்பார்க்கலாமா? தகுதி இல்லாதவனுக்கு அன்பைக் கொடுக்கறது கூட ஆபத்து தானம்மா. பாம்புக்கு பால் வார்த்தா கூட விஷத்தை தானே கக்கும். நான்தான்மா உன் வாழ்க்கையைக் கெடுத்திட்டேன். ஹர்ஷாவிற்கு உன்னை கட்டி வச்சிருக்கலாம். சுயநலமா நான் எடுத்த முடிவு பெரியவன் நல்லா இருக்கணும்னு நான் செய்தது. கடைசியிலே மருமகளுக்கு வேதனையாக முடிஞ்சுது." மறுபடியும் பெருமூச்சு விட்டு அவரும் கண்கலங்குகிறார்.

"சரிம்மா இனி நடக்கப் போறதை பார்க்கலாமா? அவனை வேணுமின்னா போலீஸை வச்சு மிரட்டி எத்தனை கஷ்டப் படணும்னு அவன் தெரிஞ்சுக்கணும்னு தான் இத்தனை நாள் பேசாம இருந்தேன். இனிமே நீ போகாதே நான் போறேன். தைரியமா இரு நாம பாத்துக்கலாம்."

"இல்லை மாமா எதுவுமே தேவையில்லை."

"ஏம்மா?"

"இனிமே அவுங்களோடு திரும்பி வாழ முடியுமான்னு எனக்கு சந்தேகம் தான். ஏ.ஸியை விட்டு வெளியே வராதவர், ஒரு குடிசையிலே அவளுக்காக படுத்துக் கிடக்கிறார்னா ஒரு வேளை உண்மையான காதலாகக் கூட இருக்கலாம். நான் இனிமே விலகிடறது தான் பெட்டர்னு நினைக்கறேன்."

"என்னம்மா இது பயித்தியக்காரத்தனமான முடிவு புருஷ புருஷன்னு உருகினயே."

“இனிமே எப்படின்னு தெரியலை மாமா. மாமா நப்பா நினைக்காதீங்க. நான் குழந்தைகளை அழைச்சுகிட்டு அம்மா வீட்டிற்கு போகலாம்னு நினைக்கிறேன்.”

“ஏம்மா?” அதிர்ச்சியடைந்தவராய் கேட்கிறார்.

“இல்லை மாமா அவர் மனசுலே எப்ப எனக்கு இடமில்லேன்னு தெரிஞ்சு போச்சோ அப்புறம் அவர் மனைவியா இந்த வீட்டிலே இருக்க எனக்கு என்ன ரைட் இருக்கு?”

“என்னம்மா உளர்றே? அவன் பிள்ளையா எனக்கு நடந்துகிட்டதை விட நீ எனக்கு மருமகளா நடந்துகிட்டது தான் அதிகம். மருமக உறவு இல்லேன்னா என்ன? மக உறவு இருக்கு இல்லே. அது போதும் மேலும் அந்த ரெடிமேட் கார்மெண்டு பொறுப்பு மொத்தத்தையும் உன் கிட்டே விடப் போறேன். முதல்லே டெய்லரிங் கிளாஸ் சேர்த்துவிடப் போகிறேன். நல்லா கத்துக்க. உன் பெயரில் ஆரம்பிக்கிற ரெடிமெட் கார்மெண்ட்ஸ் பெயர் கேட்ட உடனேயே வாங்கிக்கறா மாதிரி நீ செய்து காட்டணும் செய்வியா?” துரைசாமி கேட்க, “மாமா” தயங்குகிறாள்.

“என்னம்மா தயக்கம் அவன் எப்ப போனானோ அப்பவே மனசுல நான் எடுத்த முடிவு தான் இது. புருஷன்கிறது நடுவில வர உறவுதான். எத்தனையோ பேர் புருஷன் செத்தும் இருக்கறதில்லையா? கூடவா போறாங்க. இல்லேமா. ஒவ்வொருத்தரும் தனித்தனி ஜீவன் அவனவனுக்குன்னு போட்டிருக்குற வரைக்கும் என்ன போட்டிருக்கோ அதன்படி வாழ்ந்து தான் ஆகணும் எட்டு வருஷம் கூட வாழ்ந்தவனை உடனே மறக்கணும்னு சொல்லவில்லை. மறக்கவும் முடியாது இந்த தினசரி பழக்க வழக்கம் உடனே மாத்திக்கவும் முடியாது பிறந்த வீட்டுக்குப்போய் அங்க அவனை நினைத்து நினைத்து உருகி கொஞ்சம் கொஞ்சமாக உன்னை அழிச்சிக்கறதை விட உன் திறமையை வெளிப்படுத்தி வாழ்ந்துகிட்டு உனக்குன்னு ஒரு பேர் ஏற்படுத்திகிட்டு, எப்பேறப்பட்ட மாணிக்கத்தை

Mithravinda 007



இழந்துட்டேன்னு அவனுக்கு நீ புரிய வைக்கணும். செய்வியா?” என்கிறார். கண் கலங்கிப் போகிறது சுகுணாவிற்கு.

12



சுகுணாவின் தாயார் முத்துலட்சுமிக்கு இரண்டு வாரங்களாக இருப்பு கொள்ளாத நிலை. ‘என்னவாகி இருக்கும் ஏன் பெண் போன் பேசவில்லை?’ சுகுணா அவளுக்கு ஒரே பெண் குடும்பத்தில் வேறு வாரிசு கிடையாது. பெண் என்றால் அருமைதான் அவளுக்கு என்ன தான் பெண் அருமை என்றாலும் அதற்காக இஷ்டப்படி எல்லாம் வளர்க்கவில்லை. விடியற்காலையில் துயில் எழ வேண்டும் எந்த வேலை இருந்தாலும் பட்சபாதம் பார்க்காமல் செய்ய வேண்டும் படிப்பிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். இந்தி, ஓவியம் என்ற பயிற்சிகளையும் அளித்திருந்தாள். தையல் பழக வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது திருமணம் நிச்சயமாகிவிட்டது. அவளுக்கு களையான முகம் மாநிறமாக இருந்தாலும் மூக்கும், முழியும் திருத்தமாக பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். வெளியிடத்தில் கொடுத்தால் பெண்ணை சரியாக வைத்துக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்ற எண்ணத்தில் சொந்தத்தில் தர வேண்டும என்று துடித்துக் கொண்டு இருந்தாள்.

கணவனின் அக்காள் மகன் ஒருவன் இருந்தான். மருந்து கடை வியாபாரம். அவனும் பி.காம் படித்தவன். ஆனால் சற்று பெரிய குடும்பம். இரண்டு பிள்ளைகள், மூன்று பெண்கள். அதுவும் அந்த இரண்டாவது பெண் சூர்ப்பனகையின் அவதாரமோ என்னவோ முத்துலட்சுமிக்கு அவளைக் கண்டாலே ஆகாது. அதனால் கணவனின் சொந்தத்திற்கு பெண்ணைக்கொடுக்க ஆயிரம் முறை யோசித்தாள். த

அண்ணாவிற்கோ இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சந்திரன், இளையவன் ஹர்ஷா. அவர்கள் குடும்பத்தில் வேற வாரிசுகள் இல்லை. பிக்கல், பிடுங்கல் இல்லை. தான் ஒருத்திதான் அண்ணனுடன் பிறந்தவள். அதனால் அண்ணனுக்கு மட்டுமல்ல தனக்கும் அண்ணனின் மேல் கொள்ளை பிரியம். அண்ணனின் வீட்டிற்கு மருமகளாக தன் மகள் போய்விட்டால் எப்படியிருக்கும். இது நடக்குமா? மனத்திற்குள் பொத்தி, பொத்தி வைத்திருந்த விஷயம். அவளைப் பொருத்தவரையில் தன் மகளைவிட ஒரு வயது பெரியவனான ஹர்ஷா தான் மகளுக்கு சரியான ஜோடி. ஆனால் பெரிய பையன் இருக்க இந்த பையனை எப்படி மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்வது? பெரியவன் வெறும் பிளஸ் டூ. ஹர்ஷாவாவது பி.ஏ. படித்தவன். அதனால் முதல் பையனுக்கு வேறு எங்காவது முடித்து விட்டு வரட்டும். பின்னால் பார்க்கலாம் என்று நினைத்தாள் மேலும் முத்துலட்சுமிக்கு அண்ணியை அறவே பிடிக்காது. அண்ணி ஒன்றுமில்லாத குடும்பத்திலிருந்து வந்தவள் தன் அம்மா தான் உறவு விட்டு விடக்கூடாது என்று தூரத்து உறவினரின் பெண்ணை அண்ணனுக்கு கட்டி வைத்தாள். ஒன்றுமே தெரியாத. எதற்குமே லாயக்கில்லாத பெண் என்று பிறகு தான் தெரிந்தது. அண்ணிக்கு பிறந்த வீடு என்று ரொம்ப பேர் கிடையாது. மாமியார் வீட்டு மனிதர்கள் வந்தாலே கடுப்பு அதிகமாகி விடும். 'உம்' என்ற முகத்தோடு 'வா' என்று கூட சொல்லாமல் உள்ளே போய் விடுவாள். அண்ணா தான் அண்ணியைக் கடிந்து வந்திருப்பவர்களை வரவேற்று வேண்டியதை செய்து அவள் செய்த தவறுகளைக் கூட தன் அன்பால் மூடி விடுவான். அதுவும் தான் வந்து விட்டால் போதும் 'முத்து, முத்து,' என்று முத்துப் பாட்டம் பாடிவிடுவான். தங்கை வந்திருக்கிறாளே என்று ஸ்பெஷலான கவனிப்பு வேறு. ஆனால் இத்தனை இருந்தும் யாராவது வந்துவிட்டால் அண்ணன் திட்டுவதும், அண்ணி முகத்தைத் திருப்பிக் கொண்டு போவதும், கொஞ்ச நேரத்தில் முகத்தை மூடிக் கொண்டு அழுவதும் இதையெல்லாம் பார்த்து, பார்த்து தான் அண்ணன் வீட்டிற்கு வருவதையே கொஞ்சம் கொஞ்சமாக தவிர்த்தாள்.

Mithravinda 007



இப்போது தன் பெண்ணை வேறு அவர்கள் வீட்டின் மூத்த மருமகளாக ஆக்கிவிட்டாயிற்று. ஒரு முறை சீர், செனத்தி, என்று ஏதோ விசேஷத்திற்கு எடுத்துச் சென்ற போது அண்ணி நெட்டாக, தன் பெண்ணின் மாமியாராக அமர்ந்திருப்பது தெரிந்தது. அதற்குப் பிறகு முத்து லட்சுமி அண்ணன் வீட்டிற்கு போவதையே தவிர்த்தாள். ஆனால் தான் பெற்றெடுத்த ஒரே மகளைப் பார்க்காமல் மனம் தவிக்கும் போது. வேதனையும் ஆத்திரமாக வந்தது.

'அம்மா' என்று காலை சுற்றிக் கொண்டிருந்த பெண் புகுந்த வீட்டிற்கு போனதுமே அடியோடு மாறிவிட்டது. அந்த குடும்பத்துள் ஒன்றாக ஐக்கியமாகி விட்டது.

"இத பாருடி மாமன் வீடு தானேன்னு ஏழு மணிக்கெல்லாம் எழுந்திருக்காம, காலா காலத்தில் எந்திரிச்சு உதவி செய். இனிமே அது உன் குடும்பம். அந்த நெனப்பு மனசுலே ஓடணும்" திருமணம் முடிந்த பின் முத்துலட்சுமியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அதை சிரமேற் கொண்டாள் பெண்.

அம்மாவின் வீட்டிற்கு கூட வந்ததில்லை. சாதாரணமாக குழந்தைகளை பள்ளியில் சேர்ந்த பின் லீவு விட்டால் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அம்மா வீட்டிற்கு வருவது எல்லா பெண்களின் வழக்கம். ஆனால் அதற்கு நேர்மாறாக மாமனார் வீட்டிலேயே இருந்தாள் சுகுணா. பலமுறை தொடர்பு கொண்ட போதும் பெண் திட்டவட்டமாக வர மறுத்தாள். "இல்லேம்மா அப்படி எல்லாம் விட்டுட்டு வரமுடியாது. நான் இல்லேன்னா இங்கே எல்லோரும் திண்டாடி போயிடுவாங்க." வேறு வழியில்லாமல் அண்ணனிடம் பேச, வருடத்தில் குடும்பத்தோடு ஒரு இரண்டு நாட்கள் போல் வந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்தாள் முத்துலட்சமி. தன் பெண், மாப்பிள்ளை மட்டுமல்ல தன் அண்ணா, அண்ணி, ஹர்ஷா அவன் மனைவி என்று குடும்பமே ஒவ்வொரு வருடமும் ஒரு இரண்டு நாட்கள் போல் இருந்துவிட்டு போகும்.

அந்த இரண்டு நாட்களில் வந்தவர்களோடு பெண்ணையும் ஆசை தீர கவனித்து அனுப்புவாள் முத்துலட்சமி. ஆனால்

வருடத்திற்கு ஒரு முறை என்பது எங்கோ இருக்க, வாரம் ஒருமுறை போனில் பேச தன் தாபத்தை தீர்த்துக் கொள்வாள். ஆனால் இப்போது இரண்டு மாதமாக என்ன நடக்கிறது?

போன் பெல் அடித்துக் கொண்டே இருக்கிறது. யாருமே எடுப்பதே இல்லை.

[illegible] ... ஒரு வருவாள்? ஹர்ஷா ... எங்கே இருந்தாலும் ... பேசி நிற்கும் ... சிரிப்பு தன் கணவரைப் பார்த்தால் ... எழுந்து நிற்பான். இன்று என்ன யாரையுமே காணோமே. கதவை வேலைக்காரன் திறக்க, 'அண்ணா, அண்ணா' கத்தியபடியே உள்ளே நுழைகிறாள். "என்னவாயிற்று? யாருக்கேனும் உடம்பு சரியில்லையா? அண்ணாவிற்கு... நினைக்கவே நெஞ்சு நடுங்கிற்று. 'அண்ணா' உதடுகள் உச்சரித்தாலும் மனம் அழுதது. ஏனோ அண்ணா தனக்கு செய்ததெல்லாம் ஞாபகத்தில் வந்தது. சின்ன வயதில் இருந்து அண்ணாவும் தானும் இணை பிரியாமல் இருந்த இப்போது மறுபடியும் வயிற்றைக் கலக்க, ஹர்ஷா தான் ஓடி வருகிறான். "வாங்க அத்தை." ஏதோ வேலை செய்த வண்ணம் இருந்தான் போலருக்கு.

கைகளைத் துடைத்தவாறே வர. 'என்னப்பா இது? எல்லாம் ஊரிலே இருக்கீங்களா இல்லையா? அண்ணாவுக்கு ஏதாவது..'

அதற்கு மேல் முத்துலட்சுமியால் பேச இயலவில்லை.

"யாருக்கும் ஒன்னுமில்லே. எல்லோரும் நல்லா இருக்கோம்."

Mithravinda 007



"நாலு வாரமாக்க கருணா போனே பண்ணலியே. நான் எப்ப பண்ணினாலும் பெல் அடிச்சுகிட்டே இருக்கு. யாருமே எடுக்கலையே?"

ஹர்ஷாவிற்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. அவன் என்ன பேசுவது என்று தெரியாமல் விழிக்க அதற்குள் ஹர்ஷாவின் தந்தை முத்துலட்சுமியின் அண்ணன் தனிகாசலமே வந்துவிட்டார்.

"என்ன அண்ணே" மேலும் முத்துலட்சுமி பேசுவதற்குள் "வாம்மா" என்றார்.

அவளுக்கு எதுவும் கூறாமல் பெருமூச்சு விடுகிறார்.

"என்னாச்சு ஏன் எல்லாம் ஒருமாதிரி இருக்கீங்க?" அதற்கும் அவர் பதில் பேசாது விழிக்க சட்டென்று வெளியே வருகிறாள் அவளுடைய அண்ணி.

"மன்னிச்சுக்கம்மா நாங்க எல்லாமே தப்பு பண்ணிட்டோம்" அழுகிறாள் அண்ணி.

"என்ன பேசறீங்க? என்ன ஆச்சு? கருணா எங்கே?" முத்து லட்சுமி படபடக்க 'வாங்க' என்று கூறி அழைத்துச் செல்லுகிறாள் இவளின் அண்ணி. ஒரு நிமிடம் இதயம் நடுத்தது. 'என்னவாயிருக்கும் தன் பெண்ணுக்கு?' நெஞ்சு படபடக்க அறையில் நுழைந்தாள். கருணாவா இது? குத்துவைத்து விட்டவளாய் தலையைக் குனிந்து அமர்ந்திருக்கிறாள். பார்வை கூட எங்கோ பார்த்தவாறு இனிமேல் உங்களுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பது போல் 'கருணா கருணாம்மா என்னடா ஆச்சு? ஏன் யாருமே எங்கிட்டே சொல்ல மாட்டேங்கறீங்க? என்ன ஆச்சு?' கருணாவின் மாமியார் தான் மெதுவாக விஷயத்தைப் போட்டு உடைக்கிறாள்.

"என்ன சொல்லறீங்க? எம் மாப்பிள்ளையா? என் மாப்பிள்ளையா அப்படி? செய்தது? இருக்காதும்மா யாராவது தப்பா சொல்லி இருக்கலாம்." "இல்லேம்மா. எல்லாம் நிஜம்" மகாபாவியை நான் பெத்தேன்னு சொல்றதுக்கே அவமானமா

Mithravinda 007

...ம் தன் பெண்ணின் மாமியார் வீட்டவர்கள் பெண்ணின்
...யல் எத்தனை ஆசையாய் இருக்கிறார்கள் என்ற போது சந்தோஷமாகத்தான் இருந்தது. மறுபக்கம் தன் மாப்பிள்ளை இப்படி எல்லாம் போகக்கூடியவரா? ஆச்சரியமாக இருந்தது.

அடுத்த நாள் அண்ணனிடம் பிடிவாதம் பிடித்து மாப்பிள்ளையின் அட்ரஸ் கண்டு பிடித்து கிளம்பிய போது சுகுணா உட்பட அனைவரும் 'வேண்டாம்' என்று சொல்லியும் கிளம்பி விட்டாள். அவளைப் பொறுத்த வரையில் மாப்பிள்ளை ஒரு அப்பிராணி. இவளைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்று விடுவான். இவளுக்கு முன் உரக்க குரல் கொடுத்துக் கூட அவன் பார்த்ததில்லை. தன் கணவரைப் பார்த்தாலே குரலே எழும்பாது. அப்பேற்பட்ட பிள்ளை வீட்டை விட்டு எப்படி போயிருக்கும்? முத்துலட்சுமிக்கு அண்ணன் மேல் சந்தேகமாக இருந்தது. சதா சோம்பேறி. சோம்பேறி என்று பெரியவனை திட்டுவார். ஒருவேளை இவர் சொல் பொறுக்க முடியாமல் தான் மாப்பிள்ளை ஓடிவிட்டாரா? பார்ப்போம். கணவனையும் உடன் அழைத்துக் கொண்டு சென்றாள் முத்து லட்சுமி. ஹோண்டா சிட்டி கார் அந்த தெருவிற்குள் நுழைய முடியாமல் தெருமுனையில் நின்றது. கணவனுடன் இறங்கிய முத்துலட்சுமி அந்த கு... நிலையில் ஏழ்மையைப் பார்த்ததும் திடுக்கிட்டுத்தான் போனாள்.

“இங்கயா மருமகப் பிள்ளை வந்து தங்கியிருக்காரு” ஒரு பெருமூச்சு விட்டவாறே கணவனோடு நடக்கிறாள். ஏழ்மையை ஏழைகளை வெறுப்பவளல்ல முத்துலட்சுமி. இருந்தாலும் கொஞ்சம் கூட சுகாதாரமில்லாமல் தெரு நடுவிலேயே கொட்டிய குப்பைகளும், சாக்கடைகளும் போதுமடா சாமி. ஒரு வாறு காலைத் தூக்கி, தூக்கி வைத்து நடந்த அந்தக்கடைசியில் இருக்கும் குடிசையை அடைந்த போது, அதைச் சுற்றிலும் மிக மிக சுத்தமாக வைக்கப் பட்டு இருந்தது. 'பரவாயில்லை' என்றவாறே கண்களால் வீட்டை அளந்தவாறே மெதுவாக வீட்டை நெருங்கி கதவைத் தட்ட, முதலில் கொஞ்ச நேரம் பதில் வராது போக, ஆடிட்டராகிய தன் கணவர் குரல் கொடுக்கிறா...

Nithravinda 007



“சந்திரன் சந்திரன்...” அடுத்த அரை நிமிடத்தில் கதவு திறக்க, சந்திரன் அவர்களின் முன்னே நிற்கிறான். சரியாக வாரப்படாத தலை. முகத்தில் அங்கேயும் இங்கேயும் மழிக்கப்படாத தாடி. சற்று கசங்கிப் போன பனியன். நீலத்தில் குளித்திருந்த வேஷ்டியோடு நின்று கொண்டிருந்தான். உடம்பு கூட சற்று இளைத்தாற் போல தோன்றியது. ஒரு நிமிடம் இவர்களைப் பார்த்தான்.

13



இவர்களைப் பார்த்தவன் திரும்பி செல்ல யத்தனிக்க, ‘ஒரு நிமிஷம் மாப்பிள்ளை.’ முத்துலட்சுமியும் அவன் கணவரும் கூப்பிட, “அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே பேசறதுக்கு என்ன இருக்கு?”

“என்னங்க மாப்பிள்ளை இப்படியெல்லாம் பேசறீங்க? ஐயோ அது மாதிரி எல்லாம் பேசாதீங்க மாப்பிள்ளை. என் பொண்ணு. உங்க பெண்டாட்டி என்ன தப்பு செய்தாலும் மன்னிச்சிடுங்க. அவ ஒரே பெண். செல்லமா வளர்ந்தவ. உலகம் தெரியாதவ.”

முத்துலட்சுமியை அடக்குகிறார் அவளின் ஆடிட்டர் கணவர். “வாட் ஈஸ் திஸ் சந்திரன்?”

“சார் எனக்கும் உங்க பெண்ணுக்கும் இனிமே ஒத்து வராது. அதனால என்னை என் வழியிலே போகவிடுங்க.”

“என்னப்பா பிரச்சனை?” மறுபடியும் முத்துலட்சுமியின் கணவர் ஆரம்பிக்க, “ஆயிரம் பிரச்சனை. எல்லாத்தையும் உங்க கிட்டே சொல்ல முடியுமா? இனிமே அவ விஷயமா பேசறதோ இல்லை கேக்கறதோ எதுவும் செய்யாதீங்க.”

சட்டென்று முகத்தில் அறைந்தாற் போல் கதவை இழுத்து சாத்தி தாப்பாள் போடுகிறான் சந்திரன்.

**சு**குணாவின் தாய் முத்துலட்சுமி அதிர்ந்து போகிறாள். இவன் தன் மாப்பிள்ளையா? ஏ.ஸி இல்லாமல் இருக்க முடியாது வசதி, வசதி என்று வசதியாக வாழ்ந்தவன் 'அமுல் பேபி' என்று தன் பெண் செல்லமாகக் கூப்பிடும் மனிதன். அது சேற்றைப் பூசிக் கொண்டல்லவா வந்து நிற்கிறது. தன் மாப்பிள்ளை வாயைத் திறந்து பேசுவதே அதிகம் என்றார் இப்போது முகத்தில் அறைந்தாற் போல் வார்த்தைகளை கொட்டுகிறானே. இது எப்படி சாத்தியம்? இன்னும் அதிர்ச்சி தான் மனம் முழுவதும் நிறைந்திருக்கிறது.

Mithravinda 007



“என்னம்மா பேசறே?”

“இனி அவ இங்க இருந்து என்ன செய்யப்போறா? பத்தீங்க இல்லே கொஞ்சம் கொஞ்சமாக உருக்குலைந்து போகனுமா?”

கிடையாது. அவனுக்கு முதல் எதிரியே தன் தந்தை தான். ஓனரிடமிருந்து கொடுக்கும் பொறுப்புகள் கூட தனக்கு கொடுக்கப்படுவதில்லை. முக்கியமாக கல்லாவில் தன்னை உட்கார விடுவதே இல்லை. அப்பா இல்லாத நாளில் ஓரிரு கல்லாவில் அமர்ந்து வேலை பார்த்திருக்கிறான். அவனும் இல்லாத பட்சத்தில் மேனேஜர் தான் பணத்தை வாங்கி கணக்கை வைத்துக் கொள்வான். ஒருமுறை கல்லாவில் அபூர்வமாக அமர்ந்த போது செலவிற்கு என்று ஒரு நூறு ரூபாய் எடுக்க, அதுவே அவன் அமர்ந்த முதலும் கடைசியுமாகப் போய்விட்டது. தன் தந்தை என்பவர் அழ வேண்டும் துடித்து, துடித்து அழ வேண்டும். அதற்கு ஒரே வழி அவரின் மருமகளை ஒரு வழி பண்ணுவது தான். சுகுணாவை நினைத்து பல்லைக் கடித்த போது "என்னங்க சாப்பிட்டீங்களா?" கண்ணீரோடு தன் எதிரே நின்றதன் மனைவியின் முகம் நினைவுக்கு வர சற்று சங்கடமாக இருந்தது. எல்லாம் வேஷம் இவளையும் நம்பக்கூடாது தன் அப்பாவின் எதிரில் ஒன்றும் தெரியாது என்பதை எத்தனை ஜாடையாக சொல்லிக் காட்டியிருக்கிறாள். பெரிய கைகாரி தான் அவள். அவள் சொன்னால் அப்பா கேட்கமாட்டாரா என்ன? மகன்களை விட தங்கை பெண்தானே உசத்தி அவருக்கு. ஒரே ஒரு தடவை என் புருஷனுக்கும் அதிகாரம் கொடுங்கள் என்று இவள் கேட்டிருந்தால் தந்திருக்க மாட்டாரா? இவள் கேட்டால் கடைச் சாவியையே என் கையில் கொடுத்து விட்டு போயிருப்பார். இவளுக்கே நான் 'மக்கு' என்ற நினைப்பு.' மாமனார் தன்னை தாங்குகிறார் என்ற திமிர். பட்டட்டும். இதுமட்டுமல்ல வாழா வெட்டியாக்கி அவளை ஆயுசு முழுவதும் அழ வைத்தால் தான் மனம் ஆறும்.

வாசலில் யாரோ கதவை டொக்..டொக் என்று தட்டுவது தெரிந்தது.

கதவை திறந்த போது செல்வி காலை டிபனுக்காக ஓட்டலிலிருந்து இட்லியை வாங்கி வந்திருந்தாள்.

நெற்றியில் முத்து, முத்தான வியர்வைகள்.



"என்னாங்க எத்தனை நேரமா கதவை தட்டறேன் கதவைத் திறக்கவே இல்லையே."

"வேற என்ன எம் பொண்டாட்டியோட அம்மா அப்பா வந்துட்டாங்க." ஒரு நிமிடம் அப்படியே நிற்கிறாள் செல்வி. "வர முடியாதுன்னு சொல்லி முகத்திலே அடிச்சு அனுப்பிச்சிட்டேன்." என்ன சொல்வது என்று தெரியாத நிலை.

"நேரம் ஆவுதுங்க. இதை சாப்பிடுங்க. நான் வேலைக்குப் போகணும் லேட்டானா மேஸ்திரி திட்டுவாரு."

"என்னாலத்தாம்மா உனக்கு கஷ்டம்."

"ஏங்க இப்படி பேசறீங்க? இன்னும் கொஞ்ச நாள்ல பிரச்சனை எல்லாம் தீர்ந்திடும். அப்புறம் எந்த கவலையும் இல்லே. அதுவரைக்கும் கஷ்டப்பட்டு தானுங்களே ஆகணும். நீங்க உள்ளாறே போய் படுங்க. மதியம் நாயர் கடையிலிருந்து பரோட்டா, குருமா வாங்கிட்டு வரேன். வரேங்க." ஓட்டமும், நடையுமாக அவள் கிளம்ப, கபகபவென்று பசி ஏற்பட, இட்லி பொட்டலத்தைப் பிரிக்கிறான். கை அகல இட்லி, கல்லு கல்லாக சட்னியில் உப்பை வாரிப் போட்டு இருந்தாள். வாயில் வைத்த உணவு உள்ளே போகவே மறுத்தது.

இட்லிக்கு எத்தனை செய்வாள் சுகுணா. அவள் கை பக்குவமே தனிதான். மெத்மெத்தென்ற இட்லி தொட்டுக் கொள்ள சாம்பார், சட்னி, மிளகாய்த்தூள் என்று ஓட்டலில் வைப்பது போல் வைப்பாள். வந்து இத்தனை நாட்கள் ஆகியும் இந்த உணவுகள் பழகவே இல்லை. ரொம்ப பசித்தால் அப்படியே வாயில் கொட்டிக் கொண்டு தண்ணீரை ஊற்றிக் கொள்வான் இன்றும் சட்னியைத் தவிர்த்து இட்லியை அப்படியே வாயில் போட்டு தண்ணீர் கொட்டிக் கொள்ள ஏனோ 'என்னங்க சாப்பிடவே இல்லையா? கேட்டு, பதறிப்போய் வயணமாக உருட்டி, உருட்டி' வாயில் போடும் மனைவி ஞாபகம் வந்தது.

அவளை மறக்க முயற்சி செய்கிறான். என்னதான் அவள் மேல் கோபப்பட்டாலும் வயிறு அவளை நினைத்தது. செல்வி

Mithravinda 007

சொல்வது போல் இன்னும் கொஞ்ச நாளில் எல்லாம் சரியாகப் போய்விடும். பெருமூச்சு விடுகிறான். சாப்பிட்டவுடன் போனைச் சுழல விட்டபடி படுக்கிறான். சில நிமிடங்களில் உறங்கியும் விடுகிறான்.



## 14

ஐந்து வருடங்கள் ஓடியே போய்விட்டன. இன்று சுகுணா ரெடிமெட் சென்டர் ரொம்பவும் புகழ் பெற்ற கடை. புது புது டிசைன்களில் தைக்கப்பட்ட இரவிக்கைகள், மேக்ஸிகள் மிடி சூடிதார் ஆண் பிள்ளைகளுக்கான ஷர்ட் பேண்ட் என்று அதிகமாக விஸ்தாரமாக்கப்பட்ட கடை ஜவுளி எல்லாம் போய் வெறும் 'சுகுணா ரெடிமெட் சென்டராகிவிட்டது' இப்பவும் துரைசாமி தான் கால்லாப்பெட்டியில் அமர்கிறார். இப்போது நிறைய வெளி நாட்டு ஆர்டர்கள் வருவதால் ஹர்ஷா அதை கவனித்து கொள்கிறான்.

காலையில் பிள்ளைகளை அனுப்பிவிட்டு மாமனாரோடு கடைக்குச் சென்றால் திரும்பி வர சுகுணாவிற்கு இரவு ஆறு மணி ஆகிவிடும். பெரிய பிள்ளை பிரிந்து போன பின் ஒரு வருடம் தான் உயிரோடு இருந்தாள் மாமியார். கணவன்... அவன் நினைவு வரும் போதெல்லாம் மனது முள்ளாக குத்துகிறது தான் ஐந்து வருடத்திற்கு முன்பு பிரிந்த வந்த பின் அப்பாவிற்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினான். காசு கேட்டான் சொத்து பிரித்து கொடுக்கும்படி ஒரே சண்டை பங்கை பிரித்து கொடு என்றான். ஆனால் இது மொத்தம் தன் சுயர்ஜிதம் என்ற மாமனார் ஒரு சல்லி காசு கூட தர மறுக்க பின் அவன் நிலைமை அவ்வப்போது காதில் விழும். பாவமாக இருக்கும் போனால் போகிறது காசு அனுப்பலாம் என்றால் மாமனார் ஒரு சல்லிக்

Nithravinda 007



காசுக் கூட அனுப்ப பிரியப்படவில்லை. இப்போது அவன் சேரியில் ஒரு இடத்தில் இருப்பதாகவும், அந்தப்பெண் கட்டட வேலை செய்வதாகவும் தகவல். தான் அவனைப்பற்றி கேட்க வில்லை என்றாலும் தானாக காதில் விழும் தகவல்கள்.

உருளைக்கிழங்கை வறுத்துக்கொண்டே இத்தனையும் நினைக்கிறாள் சுகுணா. ஒரு காலத்தில் கணவன் பெயரைக் கேட்டாலே அழுகை வரும் வேதனை முட்டும். இப்போது அது கூட மூன்றாம் மனிதன் போல் தோன்றுகிறது. நிறைய ஏற்றுமதி செய்து சிறந்த ஏற்றுமதியாளர் விருது கூட அவளுக்கு கிடைத்து விட்டது. இன்னும் இரண்டு நாட்களில் சிங்கப்பூர் அப்புறம் பதினைந்து நாட்களுக்குப் பிறகு யூரோப் பயணம்.

ஹர்ஷாவைப் போகச் சொன்னால், "அண்ணி உங்க அளவு எனக்கு திறமைப் பத்தாது. சாமானை கொண்டுட்டு வந்து கடைக்கு போடறது. மொத்த கணக்கு வழக்கு எல்லாத்தையும் வேணா நான் பார்த்துக்கறேன். ஆனால் தலைமை உங்க கிட்டே தான் இருக்கணும் உருளையை நன்றாக வறுத்து உருளைக் கிழங்கு கறி செய்து கொட்டி விட்டு திரும்பும் போது, சிநேகா டைனிங் டேபிளில் எல்லோருக்கும் தட்டை போட்டு விட்டு, சட்டென்று அவள் கைகளைப் பற்றி முத்தமிடுகிறாள்.

"ஏய் என்னது இது?" சிரித்தபடி சுகுணா கேட்க,

"இந்த கைக்கு இத்தனை மணம் இருக்கா? வெங்காய சாம்பார் வாசனை மூக்குத் துளைக்குது. நேத்து நான் நீங்க வர லேட்டாயிடுச்சுன்னு சமையல் செய்தேனே. கூட்டு வாயிலே வைக்க முடியலே. அண்ணி கிட்டே இத்தனை நாளா இருக்கியே ஒழுங்கா சமைக்கக் கூடத் தெரியாதா? கத்துக்க கூடாதுன்னு இவர் கிட்டே ஒரே திட்டு மொத்த கூட்டும் மீந்து போச்சு."

"அப்படி ஒன்னும் மோசமில்லையே." சுகுணா கூற,

"உங்களுக்குள் மட்டும் எப்படி அண்ணி இத்தனை திறமைகள் புதைஞ்சு கிடைக்குது. எந்த வேலை எடுத்தாலும் எப்படி இத்தனை சரியாக செய்ய முடியுது."

"திறமை என்ன பெரிய திறமை. பிராக்டிஸ் மேக்ஸ் மேன் பர்பெக்ட் கேள்விப் பட்டதில்லையா நீ. பத்து தடவை செஞ்சா தானா வந்திட்டு போவுது. ஆமா இன்னிக்கு காலை கோலத்தைப் பார்த்தேனே. நீ தானே போட்டே. ரொம்ப நல்லா இருந்தது."

"நிஜமாகவா?"

"ஆமா ரொம்ப நல்லா இருந்தது."

"போங்க அண்ணி அவர் கேலி பண்றாரு. அந்த நிமிஷத்திலே அண்ணி போடற கோலத்துக்கு அவர் மனசு நோகாமன்னு கேலி பேசறார்."

"அவன் சும்மா உன்னை சீண்டறான். அதை எல்லாம் லட்சியம் பண்ணாதே."

கருணா சிரித்தபடி சொல்ல மடமடவென்று தட்டை போட்டு இட்லி, சட்னி, சாம்பார் என்று கருணா செய்த எல்லாவற்றையும் எடுத்து வைக்கிறாள் சிநேகா.

"அண்ணி நீங்களும் வந்திடுங்க."

"இல்லேம்மா முதல்லே நீ சாப்பிட்டுவிட்டு கிளம்பு. அந்த வாணி சில்க்ஸ்ஸில் நம்ப ரெடிமேட் பீஸ் கேட்டிருந்தாங்க, நீ சாப்பிட்டு விட்டு அங்கே டெலிவர் பண்ணிடு. அப்புறம் திருவள்ளூரில் கூட ஒரு கடையிலே நம்ப துணிகளை கேட்டிருந்தாங்க. கடையோட அட்ரஸ் இதுலே இருக்கு. அவுங்க கேட்ட பீஸ்ஸும் ரெடியாக இருக்கு கொடுத்திடு. இந்த லெட்டர்லே ரேட் கோட் பண்ணியிருக்கேன். அதையும் காண்பிச்சிடு."

"மாமா யாருமே சாப்பிடலையே?" "நீ கௌம்பு நான் போட்டுக்கறேன்." சிநேகா அவசரம், அவசரமாக சாப்பிட்டு விட்டுக் கிளம்ப, பழைய ஞாபகத்தில் மனம் மூழ்கியது. எப்படி இருந்த பெண் எப்படி மாறிவிட்டது. எத்தனை ஆசை, எத்தனை வாஞ்சை, அக்கா, அக்கா என்று ஓடி ஓடி வேலை செய்கிறாள். தன் கணவனுக்கு சொத்து கிடையாது என்று அறிவித்துவிட்டு

Mithravinda 0.07



கருணா ரெடிமேட் கார்மெண்ட்ஸ் என்று எல்லாவற்றையும் மாமனார் தன் பெயரில் மாற்ற, சிநேகா வீட்டில் பூகம்பமே வெடித்து. சிநேகாவின் அண்ணி புலம்ப ஆரம்பித்தாள்.

"பாதி சொத்தாவது இவளை கட்டினவனுக்கு வரும்னீங்க. அவன் மண்டையைப் போட்டா மொத்தமும் இவளுக்கு வந்திடும் அப்படின்னு சொல்லிவிட்டு இருந்தீங்க. இப்ப எல்லாம் மாமனார் சம்பாதிச்சதுன்னு நிரூபிச்சாச்சு. இப்ப மொத்தமும் அந்த பொண்ணுல்ல சுருட்டிகிட்டு போகும். புருஷன் செத்தா கூட இவளுக்கு சல்லிக் காசு பெயராதே. இதுவே பெரிய லட்சியம் பண்ணின மாதிரி பண்ணியிருந்தா ஒரு நாலு காசு பார்த்திருக்கலாம். பிறந்த வீட்டிலே இருக்கற மாதிரி கை, கால் அசைக்காம புகுந்த வீட்டிலே இருக்க முடியுமா?"

சிநேகாவிற்கு திக்கென்றது. புகுந்த வீட்டிலாவது காதலித்து திருமணம் புரிந்த கணவனுக்கு கூட தன் கையால் காபி கூட கலந்து கொடுத்ததில்லை. ஆனால் இங்கே வந்த நாளிலிருந்து வேலை தான். அண்ணி வேறு நெட்டி வாங்கி விடுகிறாள். சிநேகா இதைச் செய், அதைச்செய் என்று பள்ளி போகும் வரை தன்னை பிழிந்து எடுத்து விடுவாள். எப்படி கூசாமல் பேசுகிறாள்? புகுந்த வீட்டில் தான் பண்ணிய ஆர்ப்பாட்டங்கள் ஞாபகத்திற்கு வர, ஒரு பெண் என்பதை மறந்து விட்டு தான் நடந்து கொண்டதை நினைத்து வெட்கப் பட்டாள். சிநேகா. இன்னொன்றும் மனதை வருத்தியது சிநேகாவின் புருஷன் செத்துப் போக வேண்டும் என்ற அண்ணியின் நினைப்பு எது சாசுதம். என்று புரிய வைத்து விட்டது.

ஆயிரம் இருந்தாலும் என் புருஷன் என்னைக் கை விட மாட்டான். அன்று பேசி விட்டு போனபின் ஹர்ஷா அவளை கிட்டவே சேர்க்கவில்லை. தான் மட்டும் தலை இட்டு மறுபடியும் அவர்களை சேர்த்து வைக்காமல் இருந்தால் இப்போது இப்படி ஒரு அன்பான சிநேகிதி கிடைத்திருப்பாளா? எப்படி எல்லாம் சிநேகாவிற்காக வக்காலத்து வாங்கி பேசினாள் கருணா அண்ணன் அண்ணி துரத்திய பிறகு இங்கே வந்தவளை ஹர்ஷ

[illegible]

இந்த சிநேகா பின் தன் பள்ளியையும் விட்டுவிட்டு [illegible] கடையில் வேலை பார்க்க ஆரம்பித்தாள் வீட்டில் சமையலுக்கு உதவுவதிலிருந்து கடைகளில் சொல்லும் வேலைகளை செய்வது வரை எல்லாமே அவளாகி விட்டாள். முன்பு ஹர்ஷா மட்டும் அண்ணி, அண்ணி, என்று ஒரு நூறு அண்ணி கூப்பிடுவான். இன்று சிநேகாவும் கூப்பிடுகிறாள். அண்ணி சொல்வது தான் இருவருக்கும் வேத வாக்கு என்று ஆகி விட்டது.

பிரச்சனைகளுக்கு காரணமே புரிந்து கொள்ளாமை தான். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால், பிரச்சனைக்கு ஏது இடம்? மெல்லிய பெருமூச்சு விடுகிறாள் சுகுணா. மாமனார், ஹர்ஷா பிள்ளைகள் எல்லோரும் அமர, எல்லோருக்கும் பரிமாறி விட்டு தானும் ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு அமருகிறாள். இவள் வந்து அமரு முன் ஹர்ஷா மாமனார் உட்பட எழுந்து நிற்க "என்ன இது?" பொய்யான கோபத்தோடு இவள் கேட்க. "மாதல் அகாடமியிலே பெஸ்ட் உமன் ஆப் தி இயர் அவார்டு இந்த வருஷம் உங்களுக்குத்தான் தரப் போறாங்களாம். வி.ஐ.பி முன்னாலே எப்படி உட்காருவது?" மாமனாரும் சேர்ந்து கேலி செய்ய, மனது லேசாகி இளகியது. ஹர்ஷாவும் மாமனாரும் சாப்பிட்டுவிட்டு, பிள்ளைகளை பள்ளியில் விட்டுவிட்டு அப்படியே கடைக்கு போய்விட, சுகுணா பக்கத்து தெருவில் இருக்கும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ரெடிமெட் கிளையை பார்த்து விட்டு வருகிறேன் என்று கிளம்பி விடுகிறாள். எல்லாமே திருப்தியாகத்தான் இருக்கிறது. மறுபடியும் கடைக்கு செல்வதற்காக காரில் ஏறிய போது.

"அக்கா" என்ற மெல்லிய குரல் கேட்கிறது.

"யாரு?" நன்றாக மெலிந்து, பற்கள் லேசாக முன்பக்கம் தூக்கி, கன்னங்களில் டொக்கு விழுந்து, கண்களின் அடியில் ஒரு

[illegible] வந்து நின்றது அந்தப் பெண்.

"யாரும்மா நீ?" கட்டென்று அழுகிறாள் அந்தப் பெண்.

"நான் செல்விக்கா. உங்க புருஷனோட..." அதற்கு மேல் என்ன சொல்வதென்று தெரியாமல் அழுகிறாள்.

"என்னம்மா ஆச்சு?"

"நான் உங்களுக்கு துரோகம் பண்ணிட்டேன். பாவம் பண்ணிட்டேன். அதுக்கு இப்ப அனுபவிக்கிறேன். என்னை மன்னிச்சிடுங்க அக்கா. உங்க மனசு எத்தனை கஷ்டப்பட்டு இருக்கும்? எப்படி எல்லாம் வருத்தப்பட்டு இருப்பீங்க? என்னாலே புரிஞ்சுக்க முடியுது."

"அதெல்லாம் முடிஞ்சு போன கதை. இப்ப பேசி என்னம்மா பிரயோசனம்?"

"என் தப்பு நல்லா புரிஞ்சு போச்சு. தயவு செஞ்சு உங்க வீட்டுக்காரரை நீங்களே பார்த்துங்க அக்கா. உங்கிட்டேயே விட்டுடறேன் அக்கா. நீங்க மறுபடியும் அவரோடு சேர்ந்துடுங்க அக்கா."

"இல்லேம்மா அது நடக்காது. நடக்க முடியாத விஷயத்தை பேசாதே."

"ஏங்கா நடக்காது? ஏதோ சேர்ந்த புதுசிலே வேணா நாங்க கூடி குலாவி இருக்கலாம். மத்தபடி இத்தனை வருஷமா உங்க பேரைத் தான் ஜபிச்சுகிட்டு இருக்காரு. எம் பெண்டாட்டி என்னை எப்படி கவனிச்சுப்பா தெரியுமான்னு கேட்டுகிட்டே இருப்பாரு. நீ தான் எல்லாத்துக்கும் காரணம். உன்னால தான் என் குடும்பத்தை பிரிஞ்சு வந்தேன்னு பேசறாரு. நீங்களே உங்க புருஷனை திருப்பி எடுத்துக்கங்க."

"அது முடியாதும்மா. பணம் வேணும்னா சொல்லு. என்னால முடிஞ்ச தொகையைத் தரேன். வச்சுகிட்டு வாழ்ந்துக்கங்க."

Mithravinda 007

Mithravinda 007



"யக்கா.. பணம் வேணாம்கா. நானே தினம் நூறு ரூபாய் சம்பளம் வாங்கறேன். கொளத்து வேலைக்குப் போறேன். டிவி ஃபேன் இதுக்கு மாத வாடகை, சாப்பாட்டு செலவு. அது மட்டுமில்லாமல் உங்க புருஷன் தம் அடிக்கறாரு. உங்களை நினைச்ச அழுதுகிட்டு குடிக்கறாரு. அதுக்கெல்லாம் துட்டை வேறு புடுங்குவாரு. பணம் கூட சம்பாதிச்சு கொடுத்திடலாம். ஆனா அந்த சோம்பேறியோட இருக்க முடியாதுங்க. ஒரு நல்ல பழக்கம் கிடையாதுங்க. என்னை விட்டுடுயான்னு அழுதா நீ தானேடி என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினே. நீதான் என்னை வச்சு காப்பாத்தனும்னு சொல்றாரு. எப்ப கோபம் வரும்னு சொல்ல முடியாது. போட்டு அடிச்சிடறாரு. சாதம் ஊட்டி விடுவீங்களாம். சாக்ஸ் பூட்ஸ் எல்லாம் போட்டு விடுவீங்களாம். அதையெல்லாம் சொல்லி சொல்லி அழுகிறாரு. அக்கா நீங்க மறுபடியும் அவரோட ஒண்ணா சேர்ந்து இருங்க அக்கா." சொல்லி அழுகிறாள் செல்வி.

"முடியாதும்மா. எதுவுமே நடக்காது. நானும் முன்னே இருந்த சுகுணா இல்லே. அவர் இங்கே வந்தாலும் என்னாலே முன்னைப் போல பணிவிடைகள் செய்ய முடியாது. இன்னும் இரண்டு நாளில் சிங்கப்பூர் போறேன். இரண்டு மாசம் கழிச்சு தான் வருவேன். எனக்கு என் வேலைகளே சரியாக இருக்கு. புதுசா எந்த சுமையையும் சேத்துக்க மனம் ஒப்பவில்லை. நீ விருப்பப் பட்டு சேர்ந்துகிட்ட வாழ்க்கையை வாழ முயற்சி பண்ணு."

சொல்லிவிட்டு சுகுணா நகர, தன் வினை தன்னைச் சுட்ட பாவத்தை நினைந்து அழுகிறாள் செல்வி.

Mithravinda 007